Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලේ ஏப்ரல் 07-13, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 454

## அரசியல் பேச்சுக்கு அத்திவாரம் தயாரா?

கல்விக்கு முன் காதல்!



சாதாரணன் கடிதம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## தவக்காலத்திலேனும் கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூருவோம்



கிறிஸ்தவர்களாகிய நாம் வருடம் ஒரு முறை கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும் பொருட்டு தவக்காலத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம்.

மனிதன் பலவீனமானவன். குற்றமற்றவர் யாரும் இவ்வுலகில் இல்லை. அதே போன்று பாவமற்றவரும் இவ்வுலகிலில்லை. எம் ஆதிப் பெற்றோரான ஆதாம், ஏவாள் செய்த பாவத்தினால் நாம் ஒவ்வொருவரும் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எம் ஒவ்வொருவரையும் படைத்த இறைவன் இயேசு எம்மைப் பாவத்திலிருந்து மீட்கவே தவக்காலத்தில் வரும் கடைசி வெள்ளிக்கிழமை (பெரியவெள்ளி) அனைத்து மக்களின் பாவங்களுக்காகவும் சிலுவை மரத்தில் அறையப்பட்டு உயிர்விட்டார்.

நாம் இருந்தாலும், இறந்தாலும் அவரோடு இணைந்து வாழும் வண்ணம் அவர் நம் பொருட்டு இறந்தார்.

(தெசலோனியர்: 5-10)

ஆகவே, கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூரும் நாம் ஒவ்வொருவரும் நம் பாவங்களை முதலில் நினைவு கூர்ந்து மனம் வருந்தி இயேசுவிடம் மன்னிப்புக் கேட்டு மரணத்திலிருந்து உயிர்பெற்ற இயேசுவோடு இணைந்து வாழ எம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள இன்றே தயாராவோம்.

வணக்கம்! நன்றி!

ஜோசப் அருள்சாமி, திகனை, இராஜவெல்ல.

## "சிந்தியுங்கள் சிந்தியுங்கள்"

இது அல்குர்ஆனின் போதனையாகும் - இறைவனின் கட்டளையுமாகும்.

ஆம்! இறைவனின் படைப்புக்களிலிருந்து எத்தனையோ அத்தாட்சிகளை மனிதன் சிந்தித்து உணரலாம். இறைவனின் படைப்புக்கள் எல்லாம் மனிதனுக்காக இறைவன் வழங்கிய அருட்கொடைகளாகும். இவற்றையெல்லாம், நுகரும் மனிதன் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை. இயற்கை என்கிறான். இயற்கை என்றால் என்னவென்று சற்றும் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை.

மழை பொழிகின்றது, மின்னல் வெட்டுகின்றது, அருவி ஓடுகின்றது, பறவைகள் பறக்கின்றன, மிருகங்கள் வளருகின்றன, மரங்கள் செழிக்கின்றன, மலர்கள் மலர்கின்றன. ஏன்? என்றெல்லாம் ஒரு துளி ஆச்சரியத்தைக் கூட நாம் அடைகின்றோமா?

அல்குர் ஆனின் போதனைகள் அல்லாஹ்வின் பேச்சாகும். மனிதனது தோன்றலும் அவன் படைக்கப்பட்டதும் அதன் காரணமும் அங்கே பொதிந்து கிடக்கின்றன. அல்குர் ஆனின் கட்டளைகளையும், போதனைகளையும் வைத்து ஆராயும் போதுதான் அதன் அர்த்தங்களை நாம் புரிந்து கொள்கின்றோம். ஆக, மனிதன் மீது அன்னையிலும் 70 மடங்கு இரக்கமுள்ள இறைவன் இவற்றையெல்லாம் எமக்கு அன்பளிப்புச் செய்தான். நிரந்தரமற்ற ஒரு கோளில் நாம் சுழன்று கொண்டிருக்கின்றோம் என்பதையும் என்றோ ஒரு நாள் நிரந்தரமான இடத்திற்குச் செல்ல இருக்கின்றோம் என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றான்.

ஆகவே, மனித சமுதாயம் சீர்திருத்த மிக்க வாழ்க்கை அமைப்பினைக் கைக்கொள்ள அல்குர் ஆனின் சட்டதிட்டங்களைப் பேணுவோமாக!

றாஹிலா மஜீத் நூன், முள்ளிப்பொத்தானை.

## சிதம்பரரகசியம் வெளிப்படுத்தும் உண்மைகள்

மனித தத்துவங்களுக்கு, கடவுள் அருளிய இரகசியங்களுக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் உள்ளது. ஒப்பற்ற, மிகவும் சரியான இந்த இரகசியங்கள் உண்மையில் பரம தந்தையும், ஆசிரியரும், வழிகாட்டியுமான சிவன் தான் இவைகளுக்கு பிறப்பிடம் என்பதை உணர்த்துகின்றன.

01) நாம் யார்?, 02) அவர் யார்?, 03) நாம் எங்கிருந்து வந்தோம், எங்கு சென்றுகொண்டிருக்கின்றோம்? 04) அமைதியும் தூய்மையும் உண்மையான தர்மம், 05) இந்த உலகிற்கு நாம் ஏன் வந்தோம்? (கர்மவிளைவும், நாடகமும்)

கடவுள் இந்த 5 காட்சிகளையும் ராஜயோக படிப்பினை மூலம் அறிமுகப்படுத்தும் பொழுது தான், அவரின் இயல்பான தோழமையில் நம்மால் மகிழ்ந்து இருக்க முடியும். அவையில்லாமல் நாமிருக்கும் போது உண்மையாகவும், அதற்கு ஏற்ப செயல்படவும் இயலாது. சிவன் தான் ஓர் புள்ளிவடிவமானவர் என்ற உண்மையை கற்பிப்பதன் மூலம் சரியை, கிரியையிலிருந்து எமக்கு விடுதலை அளித்து ஞானத்தைக் கற்பிப்பதுடன் அவருடைய குணங்களாகிய அமைதி, சமாதானம், அன்பு, அறிவு, தூய்மை, இன்பம், சக்தி எனும் குணங்களை நேரடியாக அனுபவம் செய்யும் முறைகளையும் கற்பிக்கின்றார்.

இந்த ரகசியத்தைப் பரம ரகசியமாக்குவதன் மூலம், அதன் முடிவு ஆத்மா தூய்மையடைகிறது. அதன் மூலம் உலகமும் தூய்மையடைகின்றது. ஓம் சாந்தி!

பி.கு.தியதீஸ்வரி, களுவாஞ்சிக்குடி.

# கவிதைப் போட்டி இல.451

### பரிசுக்குரிய கவிதை

## செல்லையும் செரிப்பாள்

சோற்றுக்காய் அலையும் சோம்பேறியில்லை;
சேற்றில் முளைத்த செந்தாமரை இவள்
தோற்றுப் போன வாழ்வுக்கு விடைகாண
மாற்றுவழி தேடுகின்றாள் - தன்னிரு
நாற்றுக்களை விருட்சமாக்க
சீற்றமுடன் புறப்பட்டுவிட்டாள் - இனி
சீறிப்பாயும் செல்லையும் செரித்திடுவாள்!

ம.பூபாலரட்ணம், மட்டக்களப்பு.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## துன்பமே போய்விடு!

கலங்கிய விழிகளோடும்
கரங்களில் சுமைகளோடும்
இருண்ட முகத்திலே
இறந்துபோன இன்பத்துடன்
எங்கே பயணம்?
நாளைய விடியல்
நமக்காகத் தான் - தாயே!
துரத்திவிடு துன்பத்தை!

ப.சைந்தவி, மட்டுவில்.



## நீ ஒருத்தி தானா?

தலையிலே இருக்கும்
குடத்தின் சுமைக்கும்
கைகளில் இருக்கும்
குழந்தைகளின் சுமைக்கும்
ஆடையிலே தெரியும்
வறுமையின் சுமைக்கும்
சொந்தக்காரி
நீயொருத்தி தானா?

சே.ற.பாசிம், மருதமுனை-02.

## சுமைகள்

தலையின் சுமையை
நான் இறக்கிடுவேன்
இடுப்பின் சுமை
தானாய் இறங்கிவிடும்
என் மனச் சுமையை
காலம் தான்
இறக்கவேண்டும்

பி.விக்னேஸ்வரன், ஹட்டன்.

## தாய்

அன்பினிலும் தாய்
அரவணைப்பிலும் தாய்
கண்ணீரிலும் தாய்
கண்காணிப்பிலும் தாய்
வளமூட்டுவதிலும்" தாய்
வழிநடத்தலிலும் தாய்
உன்னை உருவாக்கியதும் தாய்
உலகெங்கிலும் உணர வேண்டியது
தாய்... தாய்... தாய்...

அ.கோபால், அக்கரைப்பற்று.

## எங்கு செல்கிறாய்?

வானமே கூரையாக
தூரமே உறவாக
தலையிலும், இடுப்பிலும்
சுமைகளை சுமந்தபடி
சுற்றத்தை தேடி
எங்கு செல்கிறாய்?

ப.கஜன், கொழும்பு-13.

## மாறுமா?

அழுத்தும் சுமைகள்
நெஞ்சை வருத்தும்
கனவுகள்! - உடமைகள்
இருந்தும் இல்லாத
வாழ்க்கை! - விடை
தெரியா பயணங்கள்!
நீங்குமா? இன்நிலை
தான் மாறுமா?

இராமஜெயபாலன், கொக்குவில்.

## இழந்ததும் இழக்காததும்

கலவரத்தில் கணவனை
இழந்தாள்
கைப்பொருள் அனைத்தும்
இழந்தாள்
அவள் இழக்காதது
இரண்டு செல்வங்களும் தான்

கேக்கே.டீன், ஏறாவூர்-03.

## பாவச்சுமை

முடிய பாதையைத்
திறக்கப் போகிறீர்கள்!
ஏழை எங்கள்
பாவச்சுமையை
எப்போது...?
இறக்கப் போகிறீர்கள்!

கை.ரமேஸ், பொத்துவில்.

# கவிதைப் போட்டி இல.454



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.04.2002

கவிதைப் போட்டி இல.454
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## சுமைதாங்கி

சிரம் கொண்டது வயிற்றுச்சுமை
கரம் கொண்டது பாசச் சுமை
மனம் கொண்டது வேதனைச்சுமை
பாரதி கண்ட புதுமைப்பெண்ணோ
இங்கே சுமைதாங்கியாக...
சுமைதாங்கி சாய்ந்தால்...?

சஹறுல் எம்.சலாஹுடீன், உக்குவெல.

## அரவணைப்பு

காணாமற் போனோர் பட்டியலில்
நீயுமோர் புள்ளியாய்
பட்டுவிடக்கூடாது என்பதற்காய்
தன் கடமை நேரத்திலும்
குழந்தைகளை
கட்டியணைக்கிறாள்
நிச்சயம்
இவளோர் தமிழ்ப்பெண் தான்!

க.ஜெசீதன், சண்டிலிப்பாய்.


# வாசக[ர்] சாலை

**முக்கனி முரசே!**

மன்னாதி மன்னன் 100வது நாளைக் கொண்டாட வாழ்த்துக்கள். மற்றும் எக்ஸ்ரே ரிப்போர்ட் நன்றாக இருந்தது. ஆசிரியரே! நாங்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகத் தபாலட்டைகளை அனுப்புவோம். வியாழன் தினமுரசு வரும். ஆனால், வியாழன் காலை கப்பல் புறப்படும். ஆனால், கடிதம் போட்டால் கடிதம் அடுத்த வியாழனே சேரும். ஆனால், அதற்குள் அடுத்த முரசு வந்துவிடும். ஆசிரியரே! முடிவு திகதியைச் சற்றுப் பின்போடலாமா?

ச.நிதிபன், யாழ்ப்பாணம்.

**என்னிதயம் கவர்ந்த இனிய முரசே!**



உனக்கு மீண்டும் எனது வந்தனங்களுடன் வசந்தகால வாழ்த்துக்கள் பல...

நீ சுமந்து வருகின்ற அனைத்து விடயங்களும் சூப்பர். குறிப்பாகத் தற்பொழுது சேர்க்கப்பட்டிருக்கும் "நெட்டிலிருந்து" என்ற பகுதி மிகவும் சுவையும் சுவாரஸ்யமும் நிறைந்துள்ளதுடன் சிந்திக்கவும் வைக்கின்றது. இதனோடு, "சிறப்புக் கவிதை" என்ற பகுதிக்குக் கூடுதலான ஆதரவு கிடைக்கும் என்பது உறுதி. இதனோடு உனது பணி புத்தம் புதிய அம்சங்களையும் சுமந்துவரும் என ஆவலுடன் காத்திருக்கும் உனது பிரியமானவன்,

மூக்கன் புனிதன், கோணகலை, பசறை.

**தமிழ் பேசும், இதயம் கவர்ந்த வாசமலரே!**

மலரே உனக்குள் தேனிலும் இனிமை தரும் அம்சங்கள் நிறைந்து வழிகின்றன. அடுத்த இதழைத் தேடும் எம் விழிகள். உலகம் சுற்றிப்பயணம் செய்யும் அரசியல் பகுதிகள், சிறுகதை, தேன் கிண்ணம் எம்மை உலுப்பி விடுகின்றன. தொடர்கதைகள், பாப்பா முரசு எம்மை மட்டுமல்ல குழந்தைகளையும் போட்டியிட்டுப் படிக்க வைக்கின்றன. அனிதாவின் காதல்கள் இதயத்தைக் கவர்ந்ததே! சிந்தியா பதில்கள், வாரம் ஒரு வார்த்தை சிரிப்பூட்டுவது மட்டுமல்லாது சிந்திக்கவும் தூண்டுகிறது. இரா.பத்மநாதனின் எழுத்தாற்றலை மாணவர்களுக்கும், பெரியோர்களுக்கும் பயனுடையதே! "சினிவிசிட்" இது கவராத உள்ளம் உலகில் இல்லை. அதிசயங்களோடு உண்மையினை விளக்கி சூடு, சுவை, சுவாரஸ்யம் அனைத்தும் ஒருங்கே சேர்ந்த இனிய முரசே! உன்னை எம்மில் ஒரு நண்பனாக ஏற்றுள்ளோம். உன்னை ஒவ்வொரு தடவையும் காணும் போது உள்ளம் கொள்ளை போய்விடும். இவ்வாறாக எங்கள் இதயங்களைத் திருடிய முரசே! பூமிக்கு மேல் வான் உள்ள வரைக்கும் உன் பணி ஓங்கிவளர மனமாற வாழ்த்தும் உன்னுயிர் நண்பிகள்,

த. சுமித்தா, ப. யசோதா, த. சிவாஜினி, நெடுந்தீவு மேற்கு.

**என் அபிமான முரசே!**

தமிழுக்குத் தனியிடமும், தரத்திற்கு முதலிடமும் பிடிக்கும் முரசே! பேனா நண்பர், கவிதைப் போட்டி அத்தனை ஆக்கங்களும் பிரமாதம். முரசே நீ வாழ்க! வளர்க!

ஆர்.வாணி, வாகரை.

**தினமுரசு ஆசிரியர் அவர்கட்கு,**

தினமுரசு வாசகனாகிய நான் இந்த மடல் மூலம் தொடர்பு கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். வளைகுடாவில் வாழும் தமிழர்களுக்கு எமது நாட்டின் நிலவரங்களைச் சூடும், சுவாரஸ்யமாயும் தாங்கி வந்து பறைசாற்றுகின்றது என்ற பெருமை முரசுக்கே, தினமுரசு ஒன்றுக்கே உரியது. கட்டார் தேசத்தில் வாழும் இந்தியத் தமிழர்களும் தினமுரசுப் பத்திரிகையை விரும்பிப் படிக்கிறார்கள். இன்னும் தினமுரசின் கைகள் தழைத்தோங்க உலகின் சகல தேசங்களிலும் தனிமுரசாக வலம் வர என் வாழ்த்துக்கள்.

எஸ்.ஜே.சதீஸ், டோஹா, கட்டார்.

**என்றும் எனது ஆருயிர் முரசே!**

மனம் விரும்புதே உன்னை முரசே! நான் காணும் உலகங்கள் யாவும் நீயே தென்படுகிறாய். நானே உன்னைப் பார்த்தேன் பார்த்தேன் சுடச்சுட ரசித்தேன் நீ சுமந்துவரும் அம்சங்கள் அனைத்தும் சூப்பரோ சூப்பர்! உன்னைப் பார்த்தபின்பு தான் எனது உள்ளம் கொள்ளை போகுதே. கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன். உனது சூடு,சுவை,சுவாரஸ்யம் அனைத்தும். என் மனவானில் சிறகை விரிக்கும் வண்ண முரசே! உனது பணி தொடர்ந்து நடைபெற எனது வாழ்த்துக்கள்.

சி.ரமேஷ் ஹஜந்தா, கொழும்பு-11.

**இனிய முரசே!**

உன்னை வார்த்தைகளால் வர்ணித்து வரிகளால் வடிவமைத்து விழிகளால் நோட்டமிட்டு விரல்களால் வரைந்து வாழ்த்துகின்றேன் வாழ்க! வாழ்க! நீ என்றும்!

கே.எம்.அனீஸ், புதிய காத்தான்குடி.

# உங்கள் பக்கம்

## கல்முனை இலங்கை வங்கி கணனியிருந்தும் பயனில்லை

கல்முனை இலங்கை வங்கி அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களைக் கொண்டு இப்பகுதியில் இயங்கி வருகிறது. கணனி மயமாக்கப்பட்டுள்ள இவ் வங்கியில் கடமையாற்றும் ஊழியர்கள் ஆமை வேகத்திலேயே தத்தமது பணிகளை மேற்கொள்கின்றனர்.

இதனால், இங்கு நீண்ட நேரம் வரிசைகளில் வங்கி வாடிக்கையாளர்கள் கால்கடுக்கக் காத்திருக்க வேண்டியுள்ளது. இங்கு கணனி இயந்திரங்கள் மூலம் கடமையை மேற்கொள்ளும் ஊழியர்கள் ஏதோ அற்புதங்களை அதில் அவதானிப்பதைப் போல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்குத் தெரிகிறது.

இனியும் இந்த நிலை தொடரக்கூடாது. கல்முனை இலங்கை வங்கியில் உள்ள கணனிகளின் துரித பயன் வங்கியின் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்க வேண்டும். இதற்கு இங்குள்ள கருமபீட கணனி இயக்குநர்கள் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். இல்லையேல் இத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தில் உடன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கசிப்பை ஒழிக்க யார் முன்வருவர்?

யாழ் குடாநாட்டில் கசிப்பு பிரியர்கள் அதிகரித்துவிட்டனர். அது ஒரு குடிசைக் கைத்தொழில் போன்று நடைபெறுகிறது. கசிப்பு விற்பவரைத் தடுக்கச் சென்றால் அங்கு எமக்கே அடிவிழும். காலை தொடக்கம் இரவு வரை கேளிக்கை விடுதிபோல் குடிகாரரின் கும்மாளம். பொலீஸ்வந்து கசிப்பு விற்பவரைக் கைது செய்து வீதியால் கூட்டிச் செல்லும். ஆனால், அடுத்த நாள் காலை பிடிபட்டவர் வீதியால் செல்வார். இது கைதா? அன்றி "பணம் விளையாடும் விளையாட்டா?" ஊர் மக்கள் ஏன் முன்வருவதில்லை? அதிலும், வைத்தீஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள அபூபக்கர் வீதியால் பெண்கள், சிறுமியர், குழந்தைகள் கூடச் செல்ல முடியாது. சிரிப்புக்கள், சேஷ்டை புரிதல் போன்றன கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

சனசமூக நிலையம் உள்ளது. அதில் எத்தனை பெரியவர் சபையைக் கூட்டித் தாமே தலைவர், செயலாளரைத் தெரிவு செய்து தாமே நடாத்துவர்! சரி, மக்கள் ஆணையைப் பெறாவிட்டாலும், தலைவராக இருந்தால் போதுமா? ஊரில் நடைபெறும் இக் கசிப்பை ஒழிக்கத் தலைவர் முன்வருவாரா? முன்வரவேண்டுமெனக் காத்திருக்கின்றேன்.

சந்திரன், யாழ்ப்பாணம்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# ஜூன் மாதம் முதல் வடக்கு-கிழக்கு பிரதேசத்தின்
# இடைக்கால நிர்வாகம் புலிகளின் கையில்

எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் இடைக்கால நிருவாகத்தைப் பொறுப்பேற்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் போச்சுவார்த்தைகள் மே மாத ஆரம்பத்தில் தாய்லாந்தில் நடைபெறுமென பெரும்பாலும் உறுதிசெய்யப்பட்டு விட்ட நிலையில் பேச்சுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்க தரப்பு தனது பிரதிநிதிகளை ஏற்கனவே தெரிவு செய்துள்ளது. புலிகள் சார்பில் அன்டன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட குழு பேச்சுக்களில் பங்கேற்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க அரசியல் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமயத்திலேயே வடக்கு கிழக்கு பிரதேசத்தின் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் பொறுப்பேற்க உள்ளதாக அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளதுடன், வடக்கு-கிழக்கு நிர்வாகத்தை பொறுப்பேற்று நடத்துவது குறித்த பூர்வாங்க ஆலோசனைகளில் புலிகள் தரப்பும் ஈடுபட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

புலிகள் இவ்வாறு இடைக்கால நிர்வாகத்தை பொறுப்பேற்கும் பட்சத்தில் அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகள் காலந்தாழ்த்தியே ஆரம்பிக்கப்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ●

## கெஸ்பர் அடிகளாருக்கு கனடாவுக்குள் பிரவேசிக்க அனுமதி மறுப்பு

தமிழர் புனர்வாழ்வு அமைப்பின் அழைப்பின் பேரில் வெரிடாஸ் வானொலியில் பணியாற்றும் வணக்கத்துக்குரிய கெஸ்பர் ராஜ் அடிகளார் கனடா சென்றபோது அந்த நாட்டு அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்.

கடந்த 27ம் திகதி அடிகளார் நியூயோர்க்கிலிருந்து விமான மூலம் கனடாவுக்குள் பிரவேசிக்க முயற்சித்த போது பியர்ஸன் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள தடுப்புக் காவல் நிலையத்தில் சுமார் 8 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அடிகளாரைக் கனடாவுக்குள் அழைத்துச் செல்ல எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

தமிழர் புனர்வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் மார்ச் 31ம் திகதி டொரென்டோ நகரில் உள்ள கந்தசாமி கோவிலில் நடைபெறவிருந்த நிதிசேகரிப்பு நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே கனடா சென்றார்.

விமான நிலைய அதிகாரிகளால் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்ட அடிகளார் உடனடியாக பிலிப்பைன்ஸ் திரும்பினார்.

அவர் பங்கேற்கவிருந்த நிகழ்ச்சியும் ரத்துச் செய்யப்பட்டது. ■

## 'அமெரிக்கப் படைகள் இலங்கையில்' நிலைகொள்ளும்
## சிங்கப்பூர் பத்திரிகை தகவல்

அமெரிக்கா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பத் தயாராகி வருவதாகச் சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் "த ஸ்டேட்ஸ் ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தமது படைகளுக்கு உதவியாகவும் பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திலுமே அமெரிக்கத் துருப்புக்கள் இலங்கையில் நிலைகொண்டிருப்பதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான ராஜாங்க செயலாளர் கிறிஸ்ரினா ரொக்காவும் மற்றும் கடற்படை பிரிகேடியர் ஜெனரல் திமிதி கோம்லி ஆகியோர் கடந்த மாதம் 15ம் திகதி யாழ் நகரில் வைத்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து உரையாடினார்கள். இதன் போது அமெரிக்க இராணுவத்தை இலங்கைக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஆராயப்பட்டதாக ஸ்ராட் ஃபோர் (Stratfor) என்ற அமெரிக்க உளவு நிறுவனம் ஒன்று கூறியிருப்பதாகவும் சிங்கப்பூர் செய்தித் தாள் எழுதியுள்ளது.

மத்திய கிழக்கிற்கும் கிழக்காசிய பிராந்தியத்திற்கும் இடையில் உள்ளதால் இலங்கையூடாக அமெரிக்கப் போர்க்கப்பல்களைக் கொண்டு செல்வதில் உள்ள வசதிகள் குறித்தும் போர் தளபாடங்களை நகர்த்துவதில் இருக்கும் சாதகத் தன்மை தொடர்பாகவும் அமெரிக்கா இலங்கையில் ஏற்கனவே ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன் ஆழமான இயற்கைத் துறைமுகமாகக் கருதப்படும் திருகோணமலை துறைமுகம் அமெரிக்காவின் பாரிய போர்க்கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பப் பொருத்தமான இடம் என அடையாளம் காணப்பட்டுள்ளது என்று அந்தப் பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ■

## பி.எஸ்.டி. தலைவரைக் கைது செய்யுமாறு உத்தரவு!

ஜனாதிபதி பாதுகாப்புப் படைப்பிரிவின் தலைவர் நிஹால் கருணாரட்ணவைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு கண்டி நீதவான் செவ்வாய் கிழமை பொலீஸாருக்கு உத்தரவிட்டார். நிஹால் கருணாரட்ணா நீதிமன்றம் செல்ல முடியாத நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாக வழக்கு விசாரணையின் போது மருத்துவச் சான்றிதழ் நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் திகதிக்குமிடையில் முரண்பாடு இருப்பதாகச் சுட்டிக்காட்டிய நீதிபதி பிரதீப் ஹெட்டியாரச்சி, அந்தச் சான்றிதழை ஏற்க மறுத்ததுடன் நிஹால் கருணாரட்ணவைக் கைது செய்யும்படியும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். நிஹால் கருணாரட்ண கடந்த 2001 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தல் தினத் தன்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்காவின் ஆதரவாளர்களைத் தாக்கியும், துப்பாக்கியால் சுட்டுமுள்ளார் என்ற குற்றச்சாட்டே அவர்மீது சுமத்தப்பட்டுள்ளது. ■

## முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கை
## அரசாங்கத்தினால் நிராகரிப்பு?

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களை சபை முதல்வர்களாக நியமிப்பதில் அந்தக் கட்சிக்கும் அரச தரப்பிற்கும் இடையில் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

புத்தளம் நகர சபை, பாணந்துறை நகரசபை ஆகிய இடங்களுக்கும் வேறு சில பிரதேச சபைகளுக்குமான தலைமைப் பதவி தமது கட்சி உறுப்பினர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கேட்டிருந்தது. ஆனால், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப் படலாம் எனத் தெரியவருகிறது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தலைவர்களைத் தெரிவு செய்யவென அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட குழு ஐ.தே.க உறுப்பினர்களையும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களையுமே சபைத் தலைவர்களாக நியமிப்பதில் ஆர்வம் காட்டிவருகிறது. ■

## அரசின் முதலாவது வாக்கெடுப்பிலேயே
## இரண்டாக உடைந்த தமிழ் கூட்டமைப்பு

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் நடத்திய முதலாவது வாக்கெடுப்பிலேயே தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு பிரிவாகச் செயற்பட்டனர்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு கடந்த 27ம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது தமிழ் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எம்.பிக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரா.சம்பந்தனும் வாக்கெடுப்பைப் பகிஷ்கரித்தனர்.

ஈபிஆர்எல்எவ் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஜோசப் பரராஜசிங்கமும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தார்கள்.

பாதுகாப்புச் செலவுகளுக்காக 6ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவளித்தது தொடர்பாக பி.பி.ஸி.தமிழோசைக்கு பேட்டியளித்த ஜோசப் பரராஜசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரவு செலவு நிதி ஒதுக்கீடுகள் குறித்துக் கூறிய நியாயங்கள் தமக்குத் திருப்தியளிக்கும் வகையில் இருந்ததால் அதனை ஆதரித்ததாகக் கூறியிருந்தார்.

இதேவேளை இந்த விடயம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற ஒன்றியங்களின் தலைவர் செல்வேந்திரன் ஐ.பி.ஸி.யிற்கு வழங்கிய பேட்டியில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதாகக் கூறி பாராளுமன்றம் சென்ற தமிழ் கூட்டமைப்பினர் தற்போது தங்கள் சொந்த அபிலாஷைகளை மட்டுமே கவனத்தில் கொண்டு செயற்படத் தொடங்கிவிட்டதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். ■

## அன்னை பூபதியின் அரசியலைப் பின்பற்றுமாறு வேண்டுகோள்

கிழக்கில் பணியாற்றும் பெண்கள் உதவி அமைப்புக்களுக்குப் புலிகள் புதிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளனர்.

கிழக்கில் பணியாற்றும் பெண்கள் சார்பான உதவி நிறுவனங்கள் தமது வழமையான நடவடிக்கைகளை இனிமேல், அன்னை பூபதி முன்னெடுத்த அரசியல் நடவடிக்கைகளைப் போன்று தொடரவேண்டுமென புலிகள் கண்டிப்பான கட்டளைகளை வழங்கியுள்ளனர்.

அன்னை பூபதியின் 14ம் நினைவு இறுதி நிகழ்வு ஏப்ரல் 19ம் திகதி இடம்பெறுகிறது. சமீபத்தில் கிழக்கில் செயற்பட்டு வரும் பெண்கள் அமைப்புக்களை அழைத்த புலிகள் அன்னை பூபதியின் நினைவு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பணித்துள்ளனர். ■

## சமாதான யாத்திரைக்கு எதிராகத் துண்டுப்பிரசுரம்

ஏப்ரல் முதலாம் திகதியன்று மட்டக்களப்பு-ஓட்டமாவடியில் சர்வமத சமாதானப் பேரணி ஒன்றை நடாத்துவதற்குச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டன.

முச்சக்கர வண்டிச்சாரதிகள் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சர்வ மத சமாதானப் பேரணியைப் பொது மக்கள் புறக்கணிக்க வேண்டுமென சமாதானத்திற்கான முஸ்லிம் அமைப்புக்களின் ஒன்றியம் எனும் அமைப்பு இரவோடிரவாகத் துண்டுப்பிரசுரமொன்றை விநியோகித்து பேரணி ஏற்பாடுகளைத் தடுத்து நிறுத்தியது.

அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சமாதானத்திற்கு முஸ்லிம்கள் எதிரிகளல்ல. ஆனால், இன்று அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் போதே முஸ்லிம்கள் மீது கெடுபிடிகளும், நெருக்கடிகளும் தொடர்கின்றன. இவற்றைப்பற்றி கலந்தாலோசிக்காமல் வெறுமனே எதுவித பிரச்சனைகளிலும் சம்பந்தப்படாத கோவில் குருக்களையும், தேவாலய பிதாவையும், பள்ளிவாசல் இமாமையும் வைத்து சர்வமதப் பேரணி நடாத்துவது வேடிக்கையானது என அந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் பரிசீலிக்கப்படும்

அரசும் புலிகளும் கடந்த மாதம் செய்துகொண்ட புரிந்துணர்வு யுத்தநிறுத்த உடன்படிக்கை இரு சாராலும் மீறப்பட்டதாக மட்டக்களப்பில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளபடி படையினர் நிலை கொண்டுள்ள வணக்கஸ்தலங்களிலிருந்து இன்னமும் வெளியேறவில்லை. அத்துடன் தமிழ் ஆயுதக்குழுக்களிடமிருந்து முழுமையாக ஆயுதக்களைவு நடைபெறவில்லை என்று புலிகள் சார்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டுகிறது.

இதனிடையே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இரவு பகல் என்று பாராது புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதாகப் படையினர் குறைகூறுகின்றனர்.

இது ஒரு புறமிருக்க முஸ்லிம்களிடமிருந்து கப்பம் பெறும் நடவடிக்கையைப் புலிகள் தொடர்வதாகக் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடமிருந்து பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. கப்பம் கோரி அனுப்பப்பட்ட கடிதங்கள் சில தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச கண்காணிப்புப் பிரதிநிதி அப்துல் றஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஆதாரங்களோடு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் குறித்துத் தமது குழு அக்கறை செலுத்துமென்று அவர் சொன்னார். வெகு விரைவில் அந்தந்த மாவட்டங்களில் கண்காணிப்பு அலுவலகங்கள் இயங்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ■

# முரசம்

## உடன்படிக்கையில் சிக்கவைத்தோர் அரபாத்தைக் கைவிட்டுவிட்டனரா?

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத் தனது வாசஸ்தலத்திலேயே இஸ்ரேலிய முற்றுகைக்குள்ளாகி உணவும் மின்சாரமுமின்றி உயிராபத்தான நிலையில் சிக்கியுள்ளார். அவரது மெய்ப் பாதுகாவலர்கலும் மடிந்துள்ளனர்.

எந்தவொரு கணத்திலும் இஸ்ரேலியத் துருப்புகள் அந்த உறுதிமிக்க வயதான தலைவர்மீது தமது எக்களிக்கும் துப்பாக்கிக் குண்டுகளைப் பொழியக்கூடிய பாரிய அச்சுறுத்தல் நிலவுகிறது.

அப்படியேதும் நிகழ்ந்தால் அதுவே இந்த நூற்றாண்டின் மாபெரும் வஞ்சகச் சூழ்ச்சியின் முத்திரையாக இருக்கும். அது வெறுமனே யசீர் அரபாத்துக்கு மீதானதாகவல்ல, முழுப் பாலஸ்தீன மக்கள் மீதான வஞ்சனையாகவுமே கணிக்கப்படும்.

அதற்கான முழுப் பழியும் இந்த உடன்படிக்கைக்கு பாலஸ்தீன தலைவரை இணங்கச் செய்த அமெரிக்காவுக்கும் அதற்கு சேவகம் செய்து பேச்சுவார்த்தையில் முன்னின்று செயற்பட்ட நோர்வேயையுமே சாரும். அமெரிக்காவின் திட்டத்துக்கு வழிசமைத்துக் கொடுத்த நோர்வே இதிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள எந்தக் காரணமும் காட்ட முடியாது.

அதேவேளை இன்று தனக்கு நிகழ்ந்த ஒரு அநீதிக்காக முழு ஆப்கானிஸ்தானையுமே தாக்கியழிக்கத் தனக்குத் தார்மீக உரிமை உண்டென விளம்பிக்கொண்ட அமெரிக்கா, யசீர் அரபாத்துக்கு நேர்ந்துள்ள இந்த அநீதிக்கு ஒரு துரும்பைத்தன்னும் உயர்த்த முன்வந்துள்ளதா என்பதையும் நாம் விசனத்துடன் நோக்க வேண்டியிருக்கிறது.

பயங்கரவாதங்கள் பற்றியே மட்டும் இப்போது கரிசனை காட்டும் அது நேர்மையான வழியில் நீதி மறுக்கப்படும்போதுதான், இவ்வாறு ஒப்பந்தங்கள் பகிரங்கமாகவே வஞ்சிக்கப்படும்போதுதான் பாதிக்கப் பட்ட சமூகங்கள் மாற்று வழிகளைத் தேட விளைகின்றன என்பதை உணருவதாயில்லை.

இலங்கையிலும் அதுவே வரலாறாயிருந்திருக்கிறது. அன்று முழு உலகமும் பாராட்டி, நோபல் பரிசும் வழங்கிய இஸ்ரேல் - பாலஸ்தீன உடன்படிக்கை இன்று சின்னாபின்னமாக்கப் பட்டது மட்டுமல்ல, அதில் சிக்கவைக்கப்பட்ட பாலஸ்தீனக் கிழச் சிங்கம் யசீர் அரபாத் முற்றுகைக்குள்ளாகித் தனித்து விடப்பட்டுள்ள நிலையில் முழு உலகுமே செய்வதறியாது கைபிசைந்து நிற்கின்றது.

இதற்கு வழிவகுத்த அமெரிக்காவும் நோர்வேயும் தமது பொறுப்பை மிக உதாசீனமாகத் தட்டிக் கழித்து வேடிக்கை பார்த்து நிற்கின்றன.

இலங்கைப் பாராளுமன்றத்திலும் இதுகுறித்து இப்போதுதான் விவாதம் எழுப்பப்பட்டுள்ளது. முன்னர் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற நடத்திய யுத்தத்தால் கிலிகொண்ட அரசாங்கம் இஸ்ரேலிய உதவியை நாடியபோதும், இஸ்ரேலின் ராஜாங்க உறவை ஏற்படுத்திக் கொண்டபோதும் எதிர்ப்பின்றி இருந்துவிட்ட இலங்கையின் முஸ்லிம் தலைவர்கள் இப்போது யசீர் அரபாத்தின் உயிருக்கே உலை வந்துவிட்ட தருணத்திலும் அதிக அக்கறையின்றி இருப்பது வேதனைக்குரியது.

கதியற்ற நிலையில் நாடிழந்து தஞ்சமடைந்திருந்த தனது இனத்துக்காக தனது வாழ்க்கையையே அர்ப்பணித்து ஒரு கையில் துப்பாக்கியும் ஒரு கையில் ஒலிவ் மரக் கிளையுமாக எழுந்துநின்ற அந்த மாவீரருக்கு நாம் எமது உளப்பூர்வ ஆதரவைத் தெரிவிப்போமாக!

அவரது உயிரைத் தர்மம் காக்கட்டும்!

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# அரசியல் பேச்சுக்கு அத்திவாரம் தயாரா?

விடுதலைப் புலிகளுடனான இலங்கை அரசாங்கத்தின் அரசியல் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான பலமான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோது எதிர்த் தரப்பில், குறிப்பாக ஜனாதிபதியிடமிருந்துகூட எழுந்த பிரதான குற்றச்சாட்டுகளில் இவ் ஒப்பந்தத்தில் பேச்சுவார்த்தைக்கான திகதி வரையறுக்கப் படவில்லையென்பதும் ஒன்றாக இருந்தது.

அப்படி அரசியல் பேச்சுவார்த்தை குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் எந்த வரையறையையும் செய்யாததானது வெறும் யுத்த நிறுத்தத்துடனேயே காலம் கடத்திச்செல்ல புலிகளுக்கு வாய்ப்பளிக்கும் ஒரு விட்டுக் கொடுப்பாக அமைந்து விட்டதென அவர்கள் ஆர்ப்பரித்தனர்.

ஆனால் இவர்களின் இந்தக் குற்றச்சாட்டுக்களையும் சந்தேகங்களையும் பொய்த்துவிடச் செய்யும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய இறுதியம்சங்களுக்கு விதிக்கப்பட்ட 90 நாட்கள் கெடுவுக்குள்ளேயே அடுத்த கட்டமான அரசியல் பேச்சுவார்த்தைகள் குறித்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான இடம், காலம் என்பனவும்கூட பெருமளவு உறுதிப்படுத்தப்பட்டுமுள்ளன.

எதிர்வரும் மே மாதமளவில் தாய்லாந்தில் பேச்சுவார்த்தையை நடத்த உத்தேச ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்த துரிதகதியான முன்னேற்றம் இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்ப்போர் எதிர்பார்க்காத ஒன்றாகவே அமைந்துள்ளது.

உண்மையில் அரசியல் பேச்சுவார்த்தை களுக்குச் செல்லப் புலிகள் விரும்ப மாட்டார்களென்றே இவர்கள் எதிர்பார்த்தார்கள்.

கடந்தகால சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் அன்றாடப் பிரச்சினைகளுக்கே முன்னுரிமை அளித்த புலிகள் அவை தீர்க்கப்பட்ட நிலையில்தான் அடுத்த கட்டமாக அரசியல் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடியுமென்று கூறியிருந்தனர். ஆனால் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே முரண்பட்டு, அரசியல் பேச்சுவார்த்தைக்குச் செல்லாமலே அப்பேச்சுவார்த்தை முறிவடைந்தது.

அதுபோல இதற்கு முன்னர் நிகழ்ந்த பிரேமதாஸா அரசுடனான பேச்சுவார்த்தையிலும் அரசியல் பேச்சுவார்த்தைகள் எதுவும் நடைபெறவில்லை.

இதே வகையில்தான் இப்போதும் அரசியல் பேச்சுவார்த்தைகளைத் தவிர்த்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அன்றாட விடயங்களிலேயே புலிகள் அக்கறை காட்டுவார்களென இவர்கள் ஒரு தப்புக் கணக்கைப் போட்டிருந்தனர்.

அரசியல் பேச்சுவார்த்தைகளுக்குச் சென்றால் தமிழீழத்தைக் கைவிடவேண்டிய பொறிக்குள் விழுந்துவிடுவார்களென்ற அச்சத்தின் காரணமாகவே புலிகள் அதனைத் தவிர்க்க விழைகிறார்கள் என்பது இவர்களது எண்ணமாக இருந்தது.

ஆனால் அரசியல் பேச்சுவார்த்தைக்குச் சென்றால் உண்மையில் சங்கடங்கடத்துக் குள்ளாக வேண்டிய நிலையில் இருப்பது அரசாங்கமேயன்றி புலிகள் அல்ல.

தமிழீழத்தைக் கைவிடுவதென்பது புலிகளுக்கு இயலாத காரியமென்ற எண்ணத்தில் இப் பேச்சுவார்த்தையில் புலிகளே முரண்படுவர் என எதிர்பார்ப்பவர்கள் உண்மையில் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்களாகத்தான் ஆவர்.

ஏனெனில் புலிகள் கூறுவது என்னவென்றால் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வென்றை முன் வைத்தால் தாம் தமிழீழத்தைக் கைவிடுவதையிட்டுத் தீர்மானிக்கத் தயாரென்றே.

அத்தோடு தாம் தமிழீழப் போராட்டத்தில் இறங்க வேண்டி ஏற்பட்டது ஒரு பிரிவினை வெறியினாலல்லமாறாக இலங்கை அரசாங்கங்களின் ஒடுக்கு முறையிலிருந்து தமிழ் மக்களைக் காத்து அவர்களுக்கான அரசியல் உரிமைகளை நிலைநாட்ட வேறு மார்க்கம் இல்லாமையாலேயே என்றே கூறி வருகிறார்கள்.

அதாவது தமிழீழப் போராட்டத்தை ஏற்படுத்தியதே இலங்கை அரசுதான், அதைக் கைவிட வேண்டுமானால் அதற்கு ஏற்ற தீர்வை முன்வைக்க வேண்டியதும் இலங்கை அரசு என்பதே அவர்களின் நிலைப்பாடு.

எனவே பேச்சுவார்த்தை மேசையில் அமர்வதற்கு தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டார்களா என்ற கேள்வி பொருத்தமானதோ அவசியமானதோ அல்ல.

பேச்சுவார்த்தை மேசையிலிருந்து எழும்பும்போது, புலிகள் தமிழீழத்தைக் கைவிடக்கூடிய தீர்வு ஒன்றுடன் எழும்புவார்களா என்பதே அக்கறைக்குரியது.

அப்படியான தீர்வை அரசாங்கமே வழங்க வேண்டியதாக உள்ளது.

எனவேதான் இதில் சங்கடத்துக்கு உள்ளாகப் போவது அரசாங்கமாகவே இருக்கும்.

ஏனெனில் அரசாங்கத்துக்கு தமிழ் மக்களின் அபிலாகைஷகளைத் திருப்தி செய்யக்கூடிய- புலிகளின் தமிழீழப் போராட்டத்தைக் கைவிடச் செய்யக்கூடிய ஒரு தீர்வை முன்வைக்க முடியுமா என்பதே இங்குள்ள அரசியல் சிக்கல்.

புலிகளுடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை நடத்துவதானால் தமிழ் மக்களின் அபிலாஷை என்ன என்பதில் புலிகளின் கருத்தையே எதிர்கொள்ள வேண்டும்.

புலிகளைப் பொறுத்தவரை இதுதான் தாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வென எதையும் வரையறுத்து வைக்காவிட்டாலும் இவை எம்மால் ஏற்க முடியாதவை என்று பலவற்றை நிராகரித்திருக்கிறார்கள்.

எனவே புலிகளால் ஏற்க முடியாதவற்றை அரசாங்கம் திரும்பவும் முன்வைக்கவிழைவது அர்த்தமற்றதாக அமையும்.

புலிகளைப் பொறுத்தவரை இதுவரை தீர்வுக்காக முன்மொழியப்பட்ட சகல திட்டங்களையும் திருப்தியற்ற தீர்வுகளாகவே நிராகரிக்கப்பட்டுள்ளன.

1997ல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் தீர்வினை அது ஒற்றையாட்சி முறைக்குக் கீழமைந்த தீர்வென்பதாலும் போதுமான அதிகாரமற்றதென்பதாலும் அவர்கள் அப்போதே நிராகரித்திருந்தார்கள்.

அதன் பின்னர் அவர்கள் முகம்கொடுத்த யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களைப் பலிகொடுத்திருக்கிறார்கள்.

அடுத்ததாக 1995ல் ஒரு அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை வெளிப்படையாக முன்வைத்தவர் சந்திரிகா.

அந்த ஆலோசனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முதற்கொண்டு பல தமிழ்க் கட்சிகளும் தீர்வுக்கு ஒரு அடிப்படையாக அமையக் கூடிய ஆலோசனைகளெனவும் ஒற்றையாட்சியமைப்பை மாற்றி சமஷ்டி அமைப்பை முன்மொழியும் தீர்வு எனவும் வரவேற்றிருந்தபோதும் புலிகள் அவற்றைக்கூட ஏற்புடையதல்லவென நிராகரித்தேயிருந்தனர்.

அதன்பின் அத்தீர்வு அமைச்சர் பீரிஸின் திருத்தங்களுடன் மலினமாக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சியாலேயே அது நிராகரிக்கப்பட்டது.

இப்போது கேள்வி என்னவென்றால் மலினப் படுத்தப்பட்ட அத்தீர்வையே நிராகரித்த ஐக்கிய தேசியக் கட்சியால் புலிகளால் நிராகரிக்கப்பட்ட 1995ம் ஆண்டு சந்திரிகா முன்வைத்த தீர்வை விட உயர்வான ஒரு தீர்வை வழங்க முடியுமா என்பதே.

இதில் பிரதானமான விடயமென்னவென்றால் ஐக்கிய தேசியக் கட்சி ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு அமைய வேண்டுமென்று கூறி சமஷ்டி முறையை நிராகரித்து வருகிறது.

ஆனால் புலிகளோ சமஷ்டி முறைக்குட்பட்ட ஒரு தீர்வைக்கூட ஏற்கெனவே நிராகரித்துள்ளார்கள்.

இந்தப் பெரும் இடைவெளிக்கு மத்தியில் எங்கே இவர்கள் சந்திக்கப் போகிறார்கள் என்பதுதான் இங்குள்ள அரசியல் சர்ச்சை.

இப்போது ரணில் உச்சரிக்கும் மற்றொரு தீர்வுக் கருத்து “தேவை அடிப்படையான தீர்வு” (Need based solution) என்பதாகும்.

அதாவது எந்தெந்தப் பகுதிகளுக்கு என்னன்ன தேவையோ, என்னென்ன தேவையில்லையோ, அவற்றைப் பொறுத்து வழங்கப்படும் தீர்வு என்பதாகும்.

உதாரணமாகச் சொல்வதானால் மலையகத்தை எடுத்தால் அங்கு கடல் இல்லை, எனவே அங்கு கடல் வளம் பற்றிய அதிகாரங்கள் தேவையில்லை. ஆனால் பெருந்தோட்டத்துறை உண்டு. எனவே பெருந்தோட்ட அதிகாரங்கள் தேவை. இந்த அடிப்படையில் வடக்கு கிழக்குக்கு என்ன தேவையோ அவற்றுக்கான விசேட அதிகாரங்களுடனான தீர்வொன்றை வகுத்தலே இவரின் கருத்தாகும்.

ஆனால் இது ஒரு பொருளாதார அல்லது புவியியல் நோக்கேயன்றி அரசியல் நோக்கல்ல.

வடக்கு கிழக்கிற்கு பொருளாதார, புவியியல் தேவைகள் மட்டுமன்றி, அங்கு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகள் என்பனவும் உண்டு- அவையே பிரதானமானவையும்கூட.

திம்புக் கோட்பாடுகளாகக் கூறப்படும், தமிழ் மக்கள் தேசிய இனமென்ற அங்கீகாரம், அவர்களின் சுயநிர்ணய உரிமை, தாயகக் கோட்பாடு ஆகிய விடயங்கள் அரசியல் அபிலாஷகளை மையமாகக் கொண்டவையே.

எனவே ஏனைய மாகாண சபைகளைவிட விசேட அதிகாரமென ரணில் ஆசை காட்டும் இந்த “தேவை அடிப்படையான தீர்வு” (Need based solution) என்பது புலிகளைத் திருப்திப் படுத்துவது சந்தேகத்துக்குரியது.

அத்தோடு அத் தீர்வுகூட ஒற்றையாட்சிக்குள் அமைந்த மாகாண சபைக்கு உட்பட்ட தீர்வே.

ஒற்றையாட்சியையும் நிராகரித்து, மாகாண சபையையும் நிராகரித்துள்ள புலிகளை இதனால் திருப்தி செய்ய இயலுமென நம்புவதற்கில்லை.

எனவேதான் பேச்சுவார்த்தையின்போது தகுந்த தீர்வைத் தேடிக் கொடுக்க வேண்டிய இக்கட்டு அரசாங்கத்துக்குத்தான் உண்டு.

அவ்வாறு முடியாதுபோனால் அரசியல் ரீதியில் அம்பலப் படுவதும் அரசாங்கமாகவேதான் இருக்கும்.

எனவே புலிகள் பேச்சுவார்த்தையில் பின் வாங்குவார்களெனத் தர்க்கிப்பவர்கள் தாம் தவறான எடுகோள் கொண்டிருப்பதை இம்முறை உணரக்கூடியதாக இருக்கும்.

எனினும் இந்த அளவுக்கு இப்போது நிலமை முற்றவில்லை.

பேச்சுவார்த்தைக்கான பேச்சுவார்த்தைகளே இப்போது ஆரம்பமாகவுள்ளன.

இதில் பேசப்படப்போகின்ற புதிய ஒரு பிரதானமான விடயம் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு புலிகளின் தலைமையில் ஒரு இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது பற்றியதாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இடைக்கால நிர்வாக சபை அரசியல் தீர்வை எட்டும் வரையிலான ஒரு தற்காலிக முன்னேற்பாடாகவே அமையும்.

அதுகூட புலிகள் எதிர்பார்க்கும் அதிகாரங்கள், அல்லது புலிகளைக் கட்டுப்படுத்தும் முட்டுக்கட்டைகள் நீக்கப் படுவது எந்தளவு தூரம் அவர்களுக்குத் திருப்திகரமாக அமையப்போகிறதென்பதைப் பொறுத்தே சாத்தியம்.

மேலும் இவ்வாறான இடைக்கால நிர்வாகத்தில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களினதும் சிங்களவர்களினதும் மாற்றுத் தமிழ்க் கட்சிகளினதும் பிரதிநிதித்துவங்கள் வேண்டுமென்றும் பல்வேறு தரப்புகளிலிருந்தும் கோரிக்கைகள் எழுகின்றன.

இவற்றைப் புலிகள் எந்தளவு ஏற்பார்கள் என்பதும் கேள்விக்குரியதே.

இதேவேளை இப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் தற்போதய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உடன்பட்ட சில விடயங்கள் நிறைவு செய்யப் படவேண்டுமென புலிகள் எதிர்பார்க்கிறார்கள்.

மீன்பிடித் தடையை முற்றாக அகற்றுவது, யாழ்ப்பாணத்துக்கான ஏ9 பாதை திறக்கப்படுவது, ஏனைய தமிழ் அமைப்புகளின் ஆயுதக் கையளிப்பு நிறைவு பெறுவது, பாடசாலைகள், ஆலயங்கள் போன்றவற்றில் முகாமிட்டுள்ள படையினர் வாபஸ் பெற்று அவற்றை பொதுமக்களுக்குத் திறந்து விடுவது போன்றவை இவ் விடயங்களாகும்.

இவற்றைவிட புலிகள் கடுமையாக இருப்பது தம்மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்க வேண்டுமென்பதே.

பொதுஜன ஐக்கிய முன்னணி புலிகள் தமிழீத்தைக் கைவிட்டால்தான் அரசாங்கம் தடையை நீக்க உடன்பட வேண்டுமென வலியுறுத்து கிறது.

எனினும் ரணிலின் அரசாங்கம் தடையை நீக்க முன்வரக்கூடுமென்றே எதிர்பார்க்கப் படுகிறது.

இவை பூர்த்தி செய்யப்படுவது பேச்சுவார்த்தைக்கு அத்தியாவசியமான விடயங்களாக உள்ளன.

எனினும் அரசாங்கத்தைப் பொறுத்தவரை பேச்சுவார்த்தைக்குச் செல்லாதிருக்க முடியாது.

எத்தகைய விதத்திலாவது இவற்றையெல்லாம் சமாளித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட அது முயற்சித்து வருகிறது.

எனவே எதிர்வரும் மேமதம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகலாமென எதிர்பார்க்கலாம்.

இதுவே திம்புப் பேச்சுவார்த்தைகளின் பின் மூன்றாவது நாடொன்றில் மூன்றாவது தரப்பொன்றின் அனுசரணையாளரான பங்களிப்புடன் நடைபெறும் பேச்சுவார்த்தையாக அமையும்.

அந்தவகையில் மிகவும் பரபரப்பான அரசியல் நிகழ்வாக இது உலகம் முழுவதாலும் அவதானிக்கப்படும். ▫

**நரன்**

# சாதாரணன் எழுதுவது.....



அண்ணன் ஆறுமுகன் அவர்களுக்கு,

மன்னிக்க வேணும். உங்கட பெயருக்குப் பின்னால தொண்டமான் எண்டு போட மனம் இடம் தருகுதில்லை. எனக்குத் தெரிஞ்சவரை அந்தப் பேருக்குரியவர் தன்ரை மக்களைக் கசக்கிப் பிழிஞ்சுதான் மேல வந்திருந்தாலும், மற்றத் தலைவர்களுக்கு மத்தியில தலைநிமிர்ந்து நிண்ட பெரும் ஆள்! குறிப்பாய் சிங்களத் தலைவர்மாருக்கு சிம்மசொப்பனமாய், தமிழ்தலைவர்மாருக்கு 'என் வழி தனி வழி" எண்டு ஆரும் சருவேலாத அடங்காக் காளையெனவும் திரிஞ்சவர்! சிங்கள மேடைகளிலேயே ஏறி பேரினவாதத்தை எடுத்தெறிஞ்சு பேசும் 'தில்லு'டன் இருந்தவர். தனக்குச் சரிவராட்டில் தமிழ் கூட்டமைப்பையும் உதறித்தள்ளிப் போட்டுத் தன்ரை கோட்டையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைச்சிருக்கத் தெரிஞ்சவர்!

ஆனால், அவருக்குப் பேரனாய் வந்த நீங்கள் "ஆசையே அலை போலே நாமெல்லாம் அதன் மேலே" எண்டு அடிக்கிற அலையளில எத்துண்டு மிதக்கிற துரும்பாய் போனியள்! சந்திரசேகரனுக்குச் சமனாய் துள்ளிமிதிச்சு அல்லாடுறியள்! கட்சி மாறுவதைக் கூடக் கணக்காய் செய்யத் தெரியாமல் பதற்றத்தில படுகேடாய் நடக்கிறியள்!

அண்மைக்காலமாய் அண்ணையின்ரை நடவடிக்கையளைப் பாத்து எனக்குச் சகிக்கேலாமல் போனதில தான் இந்தக் கடிதம்!

என்ன ஒரு கட்டுக்கோப்பாய் சங்கத்தை வைச்சிருந்தவர் தொண்டா! நீங்கள் சில்லம்பெல்லமாக்கிப் போட்டு நிக்கிறியள்.

உங்களுக்கு சமதையாய் சந்திரசேகரத்தாற்றை இந்த எழுப்பத்துக்குக் காரணம் அவர் குண்டுவைக்க வந்த அப்புச்சி வரதனை ஒளிச்சி வைச்சிருந்தது தான் எண்டு நீங்கள் பிழையாய் விளங்கிப்போட்டியள்.

அரசாங்கம் எப்பன் இளக்கி விட்ட உடனை ஆரைச்சந்திக்கிறது எண்டு தெரியாமல் விழுந்தடிச்சு ஓடிப்போய் மூதூரில ஐங்கரனைப் பாக்கிறியள்!

உங்கட ரேஞ்சுக்கு ஒரு கரிகாலனைச் சந்திக்கவே ஆள்மேல ஆள்விட்டு, அங்காலுப்பக்கம் வீட்டுத்திட்டத்துக்கும் காசொதுக்கி கெஞ்சிக்கூத்தாடிப் போய் ஒரு போட்டோவும் எடுத்துக்கொண்டு வந்து காட்ட வேண்டிக்கிடக்கு!

ஆனால், சந்திரசேகரன் எழும்பினது உங்களால தான் எண்டது உங்களுக்கு விளங்கவேயில்லை.தாத்தா ஒரு யானை வைச்சிருந்தார் எண்ட கதையாய் பாட்டனார் ஒரு சங்கம் வைச்சிருந்தார் அதுக்கு என்னை வாரிசு உரிமையாக்கிப் போட்டுப் போயிருக்கிறார். நான் சந்திரிகாவா? ரணிலா யார் மந்திரிப்பதவி தருகினம்மோஅங்க மாறி நிண்டுகொண்டால் சரி. மக்களிட்டப் போய் என்ன எழவைச் செய்யக் கிடக்கு.... எண்ட தலை கொழுத்த நடப்புத்தான் உங்களை மெல்ல மெல்ல உங்கட சனத்தை நம்பாமல் தம்பி பிரபாகரனை நம்பி ஓடுற நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கு.

எங்களுக்கும் ஏகப்பிரதிநிதி அவர் தான் எண்டு எழுதிக் குடுத்திட்டால் சந்திரசேகரனுக்குப் பிறகெங்கை சனம் இருக்கப் போகுது எண்ட குறுக்கு றோட்டில உங்கட மூளை ஓடுறமாதிரித்தான் தெரியுது.

எங்க பாட்டன் சொத்து. அதை நான் ஆருக்கு வேணுமெண்டாலும் விப்பன் எண்டு நிக்கிறியள்!

மலையக மக்களுக்குத் தலைவர் முதல்ல ரணில், அடுத்தது பிரபாகரன், அதுக்குப் பிறகு தான் நான் எண்டு போஸ்டரிலயும் அடிச்சுக்காட்ட வெளிக்கிட்டிட்டியள்.

இது எங்க போய் நிக்கப்போகுதெண்டது எனக்கு விளங்குது. உங்களுக்கும் இன்னும் கொஞ்ச நாட்களில விளங்கும்.

லெக்சரர் க. இந்த ஒரு விஷயத்தில வலுகிளியராய் சொன்னார். சாகிறதுக்கு அந்தப் பக்கத்தில ஆக்கள் தேவைப்படேக்க எல்லோருக்கும் எல்லாம் விளங்குமெண்டு. அப்பிடியொரு சாய்ப்புத்தான் சாய்க்கிறியளாம் மக்களை நீங்கள்!

நீங்கள் சனத்துக்கு ஊட்டுற பொங்கு தமிழாவேசமெல்லாம் சந்திரசேகரனுக்குத் தான் பொசிப்பாய் போய் முடியும் எண்டதும் பாவம் உங்களுக்கு விளங்குதில்லை.

அதையும் விட பேரழிவொண்டுக்கும் சனத்தை இழுத்துப்போறியள். சனத்தை முன்னேற விடாட்டிலும் முழுசாய் அழிவும் சீரழிவுமான அவலத்துக்குள்ள கொண்டுபோய் தள்ளாமல் தொண்டமான் எப்பிடிக் கட்டுக்கோப்பாய் வைச்சிருந்தவர் எண்டதை ஒருக்கால் நீங்கள் பழைய ஆக்களிட்ட கேட்டறியவேணுமண்ணை.

நீங்கள் என்னடாவெண்டால் செல்லச்சாமி ஏன் உங்களோடை இல்லை எண்டு கேட்டால், "ஆரது செல்லச்சாமி அப்பிடி ஒரு ஆளை எனக்குப் தெரியாதே" எண்டு பதில் சொல்லிச் செல்லச்சாமியையே சோத்துக்கை மறைச்சுப்போடலாம் எண்டு நினைக்கிற குழந்தைப் பிள்ளைப் புத்தி ஆளாய் இருக்கிறியள்.

வேட்டியை மடிச்சுக் கட்டிக்கொண்டு வெறும் தாதாவாய் இறங்கிறியளே தவிர, ரண்டாம் நிலைத்தலைவர்களையும் சனங்களையும் வளைச்சு வைச்சுக்கொண்டு 'தாத்தா'வைப் படிக்கிறியளே இல்லை. அவர் இருக்கேக்க உங்களுக்குப் படிக்கிற வயசில்லை. இப்பவாவது அவரோட இருந்தவையக் கூப்பிட்டு வைச்சுப் படிச்சுக்கொள்ளுறதில தப்பில்லை.

ஆனால், உங்கட குழப்படியளுக்கு உருப்படியானவை ஒருத்தரும் பக்கத்தில வராயினம் எண்டிறார் எங்கட லெக்சரர்.

எங்கட தமிழுக்காக உயிரையும் குடுக்கத் தயாராய் பொங்கு தமிழில இணைஞ்சிருக்கிற ஒருத்தரை நினைச்சனெண்டாலே நான் மூளையவிஞ்சு செத்துப்போவன்.

ஊத்தைச் செய்தியளைக் காவுறதுக்கும், தமிழனையே காட்டிக்குடுக்கிற மாதிரி நீதி நியாயமெண்ட பேரில விண்ணாணம் பேசுறதுக்கும் லெக்சரர் க. மாதிரி ஆக்களைத் துரோகியள் எண்டு சொல்லவும் நான் தயங்கிறேல்லை.

அண்ணையும் எங்களோட தமிழுக்காகத் தான் நிக்கிறியள் எண்டதில சந்தோஷம். ஆனால், சந்திரசேகரப் பீதியில சொந்தச் சனத்தை அழிவுக்குக் குடுத்துப் போடாதையுங்கோ எண்டு கேட்டுக்கொண்டு, சரியான நேரத்தில வாய்ப்பான பக்கம் பாய்ஞ்சு அண்ணை சகல சீரும் சிறப்புமாய்ச் சீவிக்கப் பிரார்த்தித்தபடி,

**சாதாரணன்.**

# புலிகளின் அரசியல் வருகை



**பு**ரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டபடி அரசியல் வேலைகளுக்காக புலிகள் இப்போது இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களுக்குத் தமது உத்தியோக பூர்வமான உறுப்பினர்களை அனுப்பிவைக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இதில் முதற்கட்டமாக வவுனியாவுக்கு புலிகளின் பிரதிநிதிகள் வருகை தந்துள்ளனர்.

இவர்களுக்கு கோலாகலமான வரவேற்பு வழங்கப்பட்டது. வவுனியா நகரெங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. புலிகளின் பொறுப்பாளர்களைத் தோள்களில் சுமந்து மேடைவரை அழைத்துச் சென்றனர். புலிகளை வரவேற்க கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும் தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்களும் உள்ளூர் பிரமுகர்களும் அங்கு குழுமியிருந்தனர்.

புலிகளின் இந்த அரசியல் பிரவேசமானது இதுவே முதற்தடவையுமல்ல.

முன்னர் பிரேமதாஸா அரசாங்கத்துடன் நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளின் போதும் புலிகள் அரசியல் வேலைகளுக்கான அலுவலகங்களை ஆரம்பித்தார்கள்.

அப்போது புலிகளின் அரசியல் வேலைகளுக்காக அன்றைய பிரதித் தலைவர் மாத்தையா தலைமையில் புலிகளின் அரசியல் கட்சியொன்றும் பதிவுசெய்யப்பட்டது.

ஆனால் பின்னர் ஏற்பட்ட யுத்தத்துடன் அக் கட்சியும் அரசியல் அலுவலகங்ளும் மூடப்பட்டு இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் புலிகளின் அரசியல் கட்சி இன்னமும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகவே விளங்குகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தலதா மாளிகை குண்டு வெடிப்பின் பின்னர் புலிகள் இயக்கத்தை தடை செய்த போதும்கூட புலிகளின் இவ் அரசியல் கட்சி தடைசெய்யப் படவில்லை.

எனினும் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை இவ் அரசியல் கட்சியின் பெயரிலல்லாது நேரடியாகவே மேற்கொள்வரென்றே கருத முடிகிறது.

புலிகளின் அரசியல் செயற்பாடுகள் எத்தகவையாக இருக்குமென்பதே இப்போது சகலரும் எதிர்பாத்திருக்கும் விடயமாகும்.

புலிகள் இராணுவ ரீதியில் திறமையை நிருபித்த ஒரு கட்டுக்கோப்பான சட்ட திட்டங்களுடனான அமைப்பினர். அவர்களது அரசியல் வேலைகளில் திறமையான நிர்வாகத்தை மேற்கொள்ள அத்திவாரமாக இது அமையலாம்.

எனினும் சாதாரண பொதுமக்கள் விடயத்தில் நெகிழ்வுத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு உண்டு.

புலிகளின் அரசியலானது, பாராளுமன்ற அரசியலா, அல்லது தொழிற்சங்க அரசியலா, மக்களின் சமூக நலன்கள் பாற்பட்ட அரசியலா, இல்லையேல் இவற்றிலிருந்து விலகி மக்களை எழுச்சியூட்டும் அரசியலா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

ஆயினும் இங்குள்ள அரசியல் நிர்வாகத்தில் புலிகள் மிகுந்த கண்காணிப்புச் செலுத்துவர் என்பதும்,நிர்வாக துஷ்பிரயோகங்கள் சீர்கேடுகளை சீர்படுத்த விளைவரென்பதும் எதிர்பார்க்கப் படுகிறது.

ஏனைய தமிழ்க் கட்சிகள் புலிகளின் அரசியல் வரவை வெளிப்படையாக வரவேற்கின்ற போதிலும் உள்ளூர மனப் பயங்களுடனும்தான் அவைகள் உள்ளன.

குறிப்பாக வவுனியா நகரில் முன்னாள் போராளிகளான சில தமிழ் அரசியல் கட்சிகள் வரி கப்பம் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் மக்களுக்கு பாரிய வாழ்க்கைப் பழுவைச் சுமத்தி வருகின்றன.

புலிகளின் அரசியல் பிரிவினர் இவற்றை நிட்சயம் கட்டுப்படுத்துவார்களென்பது அவர்களின் அச்சமாக உள்ளது. எனினும் மக்கள் தமக்கு உதவக்கூடிய ஒரு சக்தியை இவ்விடயத்தில் எதிர்பார்த்திருப்பது உண்மை.

# தோல்விகளை சந்திக்கும் பாரதீய ஜனதாவை ஜெயலலிதா ஆதரிப்பாரா?

அண்டை மண்டலத்திலிருந்து

கானகன்

மாநிலத்தில் பாரதீய ஜனதாவுடன் உறவு கிடையாது. ஆனால், அகில இந்திய அளவில் தேசீய ஜனநாயகக் கூட்டணியில் திமுக உறவு தொடரும் என்று கருணாநிதி கூறினாலும் கூறினார். இனி அடுத்த கட்டம் அந்த உறவும் முறிந்துவிடும். அஇஅதிமுகவுடன் தான் பாஜக கூட்டணி வைத்துக்கொள்ளும் என்று ஊகங்கள்.

அஇஅதிமுகவே தங்களது இயற்கையான சகா என்று பகிரங்கமாகக் கூறும் தலைவர்களும் அந்த நன்னாளை ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர். ஆனால், பாஜகவுடன் உறவினைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு கட்டத்தில் துடியாய் துடித்த ஜெயலலிதா மௌனம் தான் சாதிக்கிறார் இப்போது.

சமீபத்திய சில நிகழ்வுகளைப் பார்க்கும் போது, முன்பு போல அவர் கூட்டணியில் ஆர்வம் காட்ட வாய்ப்பில்லை என்கிறார்கள் ஆய்வாளர்கள். அந்த அளவு பாரதீய ஜனதா தோல்விகளைச் சந்தித்து வருகிறது. தோற்றுக்கொண்டிருக்கும் கட்சியுடன் கூட்டுவைத்துக்கொள்ள ஜெயலலிதாவிற்குப் பைத்தியமா என்ன?

தோல்வி மேல் தோல்வியைச் சந்தித்து வருகிறது பாஜக. முதலில் உத்திரபிரதேச சட்டமன்றத் தேர்தல்கள். மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது. பரமவைரியான முலாயம் சிங்கின் சமாஜ்வாதி கட்சிக்கே முதலிடம். இரண்டாவது இடம் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சிக்கு. பல்வேறு தந்திரங்களைக் கையாண்டும் பயனில்லை. தேர்தல் நேரத்தில் அயோத்திப் பிரச்சனை மீண்டும் பெரிதாகியது. அப்படியும் 425 உறுப்பினர் கொண்ட அவையில் 80 இடங்களைக் கூட எட்டமுடியவில்லை பாஜகவால்.

அதே நேரத்தில் பஞ்சாபிலும் தேர்தல்கள். பாஜக கூட்டாளியான சீக்கிய தீவிரவாதம் பேசும் அகாலிதளம் தோல்வியடைந்தது. பாஜகவிற்கு 5 இடங்கள் கூடக் கிடைக்கவில்லை. மணிப்பூரிலும் தோல்வி. இறுதியாக இப்போது புதுடெல்லி மாநகராட்சி தேர்தல்களில் படுதோல்வி.

இந்திய தலைநகரில் எப்போதுமே பாஜகவிற்கு நல்ல செல்வாக்கு. மாநிலம் காங்கிரஸ் கையில் இருந்தாலும் கூட, காவி நிறத்தாரின் கூட்டம் அங்கே அதிகம். காங்கிரஸ் அரசின் செயல்பாடுகள் மீது அதிருப்தி இருப்பதாகக் கருதப்படும் இந்நேரத்தில் படுமோசமானதொரு தோல்வியினை பாஜக சந்தித்திருக்கிறது. காங்கிரஸ் 106 இடங்களிலும் பாஜக 16 இடங்களிலும் வெற்றிபெற்றிருக்கின்றன.

அயோத்தி, கோத்ரா, குஜராத் இந்தப் பின்னணியில் நடந்த புதுடில்லி தேர்தல்களில் அப்படியொரு வீழ்ச்சியைச் சந்தித்ததில் பாஜகவிற்குப் பெரும் அதிர்ச்சி. எங்கே தவறவிட்டுவிட்டோம் என்று மண்டையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

முடிவுகள் வந்தவுடன் புதுடில்லி கட்சித் தலைவர்கள் எல்லாம் பட்ஜெட்டால் வந்தவினை என்ற ரீதியில் அறிக்கை விட்டார்கள். சமீபத்திய மத்திய பட்ஜெட் மத்தியதர வர்க்கத்தினரையும், ஏழைமக்களையும் கடுமையாகப் பாதித்திருப்பதாகவே கருதப்படுகிறது.

குறிப்பாகச் சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலையை உயர்த்தி வருமான வரியை ஏற்றி, சிறுசேமிப்புக்கான வட்டியைக் குறைத்து எப்போதுமே பாஜகவை ஆதரிக்கும் மத்திய தர மக்களின் வெறுப்பை மத்திய அரசு சம்பாதித்துக்கொண்டு விட்டதாகப் புலம்புகின்றனர் பாஜகவினர்.

மக்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. பொருளாதாரத்தினைச் சீர் செய்வது தான் எனது கடமை என்று நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா வீரம் பேசினாலும், தாராளமயமாக்கல் பற்றிப் பாஜகவினர் மத்தியில் ஆத்ம பரிசோதனை துவங்கிவிட்டது எனலாம்.

ஒரு கட்டத்தில் சுதேசியம் பேசியவர்கள், உள்நாட்டு முதலாளிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தவர்கள், பன்னாட்டு நிறுவனங்கள் கொழிப்பதால் மக்களின் ஏழ்மை அகலப்போவதில்லை என்று சுட்டிக்காட்டியவர்கள், உலக வர்த்தக அமைப்பிற்கு முன் மண்டியிடக்கூடாது, உலக வங்கி பேச்சுக்கேற்றாற்போல் நாம் ஆடக் கூடாது, நமது பொருளாதார முன்னேற்றத்திற்குரிய வழிகளை நாம் தான் நிர்ணயிக்கவேண்டும் என்றெல்லாம் முழக்கமிட்டவர்கள் தான் இப்போது ஒரேயடியாக பன்னாட்டு வங்கிகளிடமும், வர்த்தக நிறுவனங்களிடமும் சரணாகதியடைந்திருக்கின்றனர்.

காங்கிரசை விடவும் தீவிரமாக தாராளமயமாக்கல் கொள்கைகளை அமல்படுத்துகிறது.

மத்தியில் ஆளும் பாரதீய ஜனதா தலைமையிலான கூட்டணி அரசு, இதில் மிக மும்முரமாய் இருப்பவர் தொழிற்துறை பொறுப்பேற்றிருக்கும் நமது முரசொலிமாறன் தான் என்பதை இங்கே நினைவுகூரலாம்.

தமிழ நாட்டில் சேலம் உருக்காலை, நெய்வேலி லிக்நைட் சுரங்கம் தொடங்கிப் பல்வேறு பொது நிறுவனங்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்படுகின்றன.

இதன் விளைவாகப் பொருளாதாரம் எந்தளவு மேம்படுகிறது என்பது ஒருபுறமிருக்க, பாதிக்கப்படும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் விரோதத்தினை நிச்சயம் அரசு சம்பாதித்துக்கொள்ளும்.

உலகளவில் எல்லா வல்லுநர்களும் தாராளமயமாக்கல் தவிர்க்க முடியாதது என்று கூறினாலும் கூட, உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதிநிறுவனம் ஆகியவற்றின் நிர்ப்பந்தத்தில் பொருளாதார சீர்திருத்தங்களை மேறகொள்ளும் எந்த மூன்றாம் உலக நாடும் உருப்பட்டதாகத் தெரியவில்லை.

அரசு நிறுவனங்கள் மூடப்படுவதால் ஏற்படும் இழப்புகள் தவிர்க்கப்பட்டாலும் கூட அவ்வாறு சேமித்து வைக்கப்படும் பணத்தை வைத்துக்கொண்டு மக்களுக்கு புதிய சேவைகளை அரசுகள் செய்துவிடுவதில்லை. தாராளமயமாக்கல் விளைவாக இழக்கப்படும் வேலை வாய்ப்புக்கள், கொழிக்கும் வேறு துறைகளில் ஈடுசெய்யப்படுவதில்லை.

சீனாவில் கூட ஒரு கட்டம்வரை பொருளாதாரச் சீர்திருத்தங்கள் வியத்தகு முன்னேற்றத்திற்கு வழிவகை செய்திருந்தாலும், இன்றைய நிலையில் பரந்துபட்ட அளவில் அதிருப்தியும், துயரங்களும் அதிகரித்திருப்பதாக வே கருதப்படுகின்றது. இதேபோலத் தான் 1991ல் மன்மோகன் சிங்கால் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் ஒரு கட்டம்வரை பொருளாதார மேம்பாட்டடிற்கு வழிவகுத்திருந்தாலும், இன்று பல்வேறு துறைகளில் தேக்க நிலையினையே தோற்றுவித்திருக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடையத் துவங்கியிருக்கின்றது.

ஒரு பக்கத்தில் நிறுவனங்கள் மூடப்படால் இன்னொரு புறம் தனியார் நிறுவனங்கள் பெருகவேண்டும். அங்கே வேலை வாய்ப்புக்கள் நிறைய இருக்க வேண்டும். அவை லாபமீட்டும் அளவு மக்களிடையே பணப்புழக்கம் இருக்க வேண்டும். ஆனால், அப்படியெல்லாம் நடப்பதாகத் தெரியவில்லை.

எந்த ஓர் அரசும் இந்தியாவில் பெரிதாக மாற்றத்தைக் கொண்டு வந்துவிடப் போவதில்லை. ஜவகர்லால் நேரு போன்றவர்களே சாதிக்காததை மற்றவர்கள் செய்து கிழித்துவிடப் போவதில்லை என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும். ஆயினும் கூடத் துயரங்கள் அதிகமாகும் போது அவர்கள் ஆத்திரம் ஆட்சியாளர்கள் மீதுதானே திரும்பும். அந்த வகையில் பாஜக அதனது பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக ஒவ்வொரு மாநிலமாக அடுத்தடுத்துத் தோல்விகளைத் தழுவி வருகிறது.

அடிப்படைக் கொள்கையான சுதேசியத்தை வாஜ்பேயி அரசு புறக்கணிப்பதன் காரணமாக கோபமுற்றிருக்கும் சங்கபரிவாரம் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கிறது.

பிரதமரைச் சுற்றியிருக்கும் அதிகார, அறிவுஜீவி வர்க்கம் எதிர்ப்புக்களைச் சட்டைசெய்யவே மறுக்கிறது. இந்தச் சூழலில்தான் மத வெறியைக் கிழப்பியாவது பாஜகவின் செல்வாக்கினை அதிகப்படுத்திக் கொள்ளலாம் என பரிவாரத்தினர் சிலர் கணக்குப்போடுகின்றனர். அந்தக் கணக்கின் ஒரு பரிமாணமே உத்திரபிரதேரசத்தின் தேர்தலின் போது முஸ்லிம்களுக்கு எதிரான சில செயல்பாடுகளும், அயோத்திப்பிரச்சனை தீவிரப்படுத்தப்பட்டதும். அங்கே அது பயனளிக்கவில்லை.

இன்று மூன்றேமூன்று மாநிலங்களில் தான் பாரதீய ஜனதா ஆட்சியிலிருக்கிறது. குஜராத் சங்கபரிவாரததின் சோதனைக்கூடமாகக் கருதப்படுகிறது. எந்த அளவு வரை சிறுபான்மையினருக்கெதிராக செயல்பட முடியும். இந்துத்துவா கொள்கைகளை பிரச்சனைகளில் மாட்டிக் கொள்ளாமல் அமல்படுத்த முடியும் என்பதை அம் மாநிலத்தின் வழியாகவே காவிக்கட்சியினர் கண்டுணர்கிறார்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அங்கேயே சமீப காலம் வரை பாஜக வீழ்ந்து கொண்டிருந்தது.

அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தலிகளில் தோல்வியடையும் என்பதே பொதுவான கணிப்பாக இருந்தது. அத்தகையதொரு நிலையினை மாற்றுவதற்கெனவே கோத்ராவைத் தொடர்ந்து பெரியளவில் முஸ்லிம்கள் வேட்டையாடப்பட்டனர். அவர்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. முஸ்லிம்களுக்கு எதிரான துவேஷத்தினை பெரிதாக்குவதன் விளைவாக பாஜகவிற்கு ஆதரவு பெருகும் என்று நம்பியே இத்தகைய கலவரத்தை நடத்தி வைத்திருக்கின்றனர்.

ஒரு மாதம் கழித்தும் அங்கே அமைதி திரும்பியபாடில்லை. 700ற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கின்றனர். பல்லாயிரக் கணக்கில் முஸ்லிம்கள் அகதிகளாகியிருக்கின்றனர். அவர்களது முகாம்களில் நிலமை மோசமாக இருக்கின்றது. வழங்கப்படும் கோதுமையிலிருந்து எல்லாமே அவலமாயிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பேயில்லை. வீட்டிற்குத் திரும்ப அவர்கள் அச்சப்படுகிறார்கள். முதலமைச்சர் மோடி மெத்தனமாயிருக்கிறார் என மத்திய அரசு அதிகாரிகளே ஒத்துக்கொள்கிறார்கள்.

அப்படிப்பட்ட சூழலில் விரைவில் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்தலாம் என பாஜக தலைவர்கள் யோசிக்க நிலை மையினை முதலில் கட்டுக்குள் கொண்டு வாருங்கள் என பிரதமரே சொல்ல வேண்டியதாயிற்று.

இந்தப் பின்னணியில் தான் புதுடில்லி தேர்தலில் தோல்வி. அப்படித் தோல்வியுற்றுவரும் பாஜகவுடன் அவ்வளவு அவசரப்பட்டு ஜெயலலிதா கூட்டுவைக்க முன்வருவார் எனத் தோன்றவில்லை. கடந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் அஇஅதிமுக வெற்றி பெற்றதற்குக் கூட மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் என நம்பப்படுகிறது என்பதையும் இங்கே நினைவு கூரலாம்.


அடுத்த பொதுத் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றிபெறக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். அப்படியிருக்கும்போது ஜெயலலிதா ஏன் சோனியாவைப் பகைத்துக்கொள்ள வேண்டும் என்று வினவுகின்றனர் ஆய்வாளர்கள்.

இந்தக்கட்டத்தில் திமுகவை கழற்றிவிடலாம். அவ்வளவு தான். அகில இந்தியாவிலும் பாஜகவின் கை ஓங்கினால் தான், மீண்டும் புரட்சித்தலைவியின் அருள் அதற்குக் கிடைக்கும். ◻


## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP**

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



**லண்டன், பாரிஸ்**
**இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்**

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும்
*இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்*

**டாக்டர் ஆர்.தியாகராஜன் DHMS,AMRSH (LON.).**

26.03.2002 முதல் லண்டன் பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்த்துமா (Asthuma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes) எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை- பேரின்மை (Sterrility) ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.

ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற்கொண்டு மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

**முன்கூட்டி பதிவுக்கு**

லண்டன் தொலைபேசி: 07984803488 / 07833341693
**email: homoeocare @ rediffmail. com**
தொடர்பு: 0091-9843051099 (இந்தியா) 0094-77602513 (இலங்கை)
பாரிஸ் விஜயம் 30.03.2002 முதல் 31.03.2002 வரை
பாரிஸ் தொலைபேசி: 0610225386, 0611401882
இலங்கை விஜயம் 24.04.2002 முதல் 27.04.2002 வரை



**Vella Maxi Credit**

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு
**கந்தராஜா பிரபு**
**Vella Credit**
Spltalgasse 16 (4th மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509



**உலக பேனா நட்பு புத்தக வெளியீடு**

உலக பேனா நட்பு புத்தகம் ஒன்று வெளியீடு செய்யப்பட இருப்பதால் தாங்களும் இப்புத்தகத்தில் பேனா நண்பராக பிரசுரிக்கப்பட வேண்டுமாயின், தங்களது பெயர், விலாசம், படம் சிறு விபரம் போன்றவற்றை அனுப்பி வைத்து தங்களுக்கு விருப்பமான நண்பர்களுடன் பேனா நட்பை ஏற்படுத்திக் கொள்ளவும். உலகின் பல பாகங்களிலிருந்தும் நண்பர்களை பெற விரும்புவர்கள் விபரம் அனுப்ப வேண்டிய முகவரி.

T.J. KUMAR
302-30- TEESDALE -PL
TORONTO-ONT
MIL IL2, CANADA.



**மனோதத்துவ வைத்தியம்**

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஏப்ரல் 21 முதல் 27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஏப்ரல் 28 - 29 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டிT.P.074-474156

**கல்முனையில் மார்ச் 30, 31 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஏப்ரல் 06, 07 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா.T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

# வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள்!

அலசுவது-இராஜதந்திரி

இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் விரிவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைத் தேடுவதற்காக பூகோளத்தையே வலம் வருகின்ற ஒரு நிலையே தற்போது காணப்படுகின்றது.

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலும் பின்னர் பூட்டானிலும் சமரச முயற்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பின்னர் தற்போது புவியின் வடமுனை நாடான நோர்வேயையும் இலங்கைப்பிரச்சனை எட்டியுள்ளதோடு, லண்டனிலும் அதனைத் தொடர்ந்து மாலைதீவு வழியாக தற்சமயம் தாய்லாந்து தேசத்தை நோக்கியும் சமரசத் தீர்வுக்கான பயணம் திரும்பியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

சமரச நடவடிக்கைகள் குறுக்கீடுகளோ, குழப்பங்களோ ஏற்படாத ஒரு சூழலில் இடம்பெறுவதே அவசியமானதாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் கடந்த டிசம்பர் மாதம் பதவிக்குவந்தது முதல் இனப்பிரச்சனைத் தீர்வில் காட்டிவரும் அக்கறை வரவேற்கத்தக்கதாகவே இருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த சகல தமிழ் அமைப்புகளும் தம்மை நிராயுதபாணிகளாக்கி இனப்பிரச்சனைத் தீர்வ முயற்சிகளுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளன.

அண்மையில் தென்னிலங்கையில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில்கூட மக்கள் வழங்கிய தீர்ப்பு இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளுக்குப் போராதரவைத் தெரிவிப்பதாகவே இருந்தது.

இருந்தபோதிலும் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குரிய தீர்வு முயற்சிகள் ஆக்கபூர்வமானதாகவும், அப்பிரதேசத்திலுள்ள அனைத்துத்தரப்பு மக்களையும் திருப்திப்படுத்தும் விதத்தில் இருப்பதை உறுதிசெய்வதாகவும் இருக்க வேண்டியதாகின்றது.

அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோது சமரசத்தீர்வு முயற்சிகளில் வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களது தனித்துவம், பாதுகாப்பு என்பவை பற்றிய தமது கட்சியின் நிலைப்பாட்டையும் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் அனைத்துப் பிரதேசங்களிலுமே இருந்து வருகின்றனர். இலங்கையில் முஸ்லிம் மக்கள் மதம் மற்றும் பண்பாடு பழக்கவழக்கங்கள் என்பவற்றில் ஏனைய மக்களிலிருந்து வேறுபட்டிருந்த போதிலும், மொழியைப் பொறுத்தவரை தமிழையே தாய்மொழியாகக் கொண்டுள்ளார்கள்.

ஆனால் அண்மைக்காலங்களில் தென்னிலங்கையில் முஸ்லிம் மக்கள் மத்தியில் சிங்கள மொழி மோகமும் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்ற காரணத்தினால் சிங்கள மொழிப் போதனையிலும் முஸ்லிம் மக்கள் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

இருப்பினும் இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழையே தாய்மொழியாகக் கொண்டுள்ளதோடு, சிறுபான்மை மக்கள் என்ற ரீதியில் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் போன்றே முஸ்லிம் மக்களும் துவேசத்தனமான நடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேச மக்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டம் ஆரம்பித்த காலத்தில் மொழி ரீதியாக தமிழ், முஸ்லிம் மக்கள் இணைபிரியாதவர்களாகவே இருந்தனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேசத் தமிழ்த் தலைவர்களோடு முஸ்லிம் தலைவர்களும் இணைந்தே மொழியால் ஒன்றுபட்டவர்கள் என்ற ரீதியில் அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தனர்.

இதுதவிர சமூக, பொருளாதார விடயங்களில் கூட வடக்கு-கிழக்கு மக்களிடையேயான உறவு மிக அன்னியோன்யமானதாகவே இருந்துவந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், மறைந்த அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப்பின் அரசியல் பிரவேசமும் தமிழரசுக்கட்சியிலேயே ஆரம்பமானது.

தமிழ் அரசியல் தலைவர்களுடன் இணைந்து காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப் வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்திருந்தார்.

இருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களது அரசியல் போராட்டம் தீவிரவாதமாக மாற்றமடைந்த காலப்பகுதியிலேயே முஸ்லிம், தமிழ் மக்களிடையே புரிந்துணர்வற்ற நிலை தோற்றம் பெற்றது.

காலப்போக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆரம்பமும், அதன் நிலைப்பாடும் முஸ்லிம் மக்கள் என்றவரையறைக்குள்ளேயே குறுகி விடும் துரதிர்ஷ்ட நிலையும் ஏற்பட்டிருந்தது.

கடந்த வாரம் கல்முனையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இனப்பிரச்சனைத் தீர்வில் முஸ்லிம் மக்களது பாதுகாப்பு, தனித்துவம் என்பவையும் உரிய விதத்தில் உறுதி செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்கள் நிறையவே கசப்புணர்வுகளுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

யாழ்ப்பாணக்குடா நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவம் மற்றும் கிழக்கில் காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலைச் சம்பவம் என்பவை முஸ்லிம் மக்கள் எதிர் கொண்ட மிகக் கசப்பான அனுபவங்களாகவே இருந்தன.

வடக்கு-கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே துரதிர்ஷ்டவசமாகத் தோன்றிய புரிந்துணர்வற்ற நிலையைத் தென்னிலங்கையின் பேரினவாதசக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் தவறவில்லை.

ஆயினும் வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல. தென்னிலங்கையில் கூட முஸ்லிம்கள் இனவாத சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் உள்ளாகியிருந்தனர்.

மாவனல்லையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் பல வருடங்களுக்கு முன்னர் புத்தளம் பள்ளிவாசலில் நிகழ்ந்த சம்பவம், இது தவிர கடந்த டிசம்பர் பொதுத்தேர்தலின்போது கண்டி உடத்தலவின்னவில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் மிகமூர்க்கத்தனமான முறையில் கொலை செய்யப்பட்ட சம்பவம் போன்றவை பேரினவாத சக்திகளின் முஸ்லிம்களுக்கெதிரான போக்கையும் நன்கு எடுத்துக்காட்டியிருந்தன.

இந்நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களது பாதுகாப்புப் பற்றிப் பிரஸ்தாபிக்கின்ற அதேசமயம், தென்னிலங்கையில் தமது சமூகத்தவர் எதிர்நோக்குகின்ற நெருக்கடிகளையும் கருத்தில் கொள்ளவேண்டியவராகின்றனர்.

முன்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் முக்கிய புள்ளிகளாகவிருந்த கிழக்கிலங்கை அரசியல்வாதிகள் அக்கட்சியிலிருந்தும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரே அமரர் அஷ்ரப். ஆனால் இன்று அவரது பாரியார் பேரியல் அஷ்ரப்பிற்கும் அக்கட்சியில் உரிய முக்கியத்துவம் இல்லாதிருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அமரர் அஷ்ரப் வாழ்ந்த காலப்பகுதியில் ஒரு பலம் மிக்க நிலையில் இருந்ததோடு, வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பெரிதும் பிரதிபலிப்பதாகவும் இருந்தது.



ஆயினும் தமது இறுதி நாட்களில் காலஞ்சென்ற எம்.எச்.எம். அஷ்ரப் தென்னிலங்கையில் எதிர்நோக்கிய அரசியல் நெருக்கடிகளில் அவரது சமூகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்களோடும் முரண்பட வேண்டிய நிலைக்குள்ளாகியிருந்தார்.

தென்னிலங்கையில் பிரதான அரசியல் கட்சிகளோடு சேர்ந்திருந்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள், அமரர் அஷ்ரப் தேசிய ரீதியில் முஸ்லிம் மக்களிடையே ஒரு சக்தியாக உருப்பெறுவதைச் சகிக்க முடியாதவர்களாகவும் இருந்தனர்.

எது எப்படியிருப்பினும் இன்றைய புதிய அரசியல் சூழ்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வுக்கே கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ள நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சமரச முயற்சிகள் குறித்த பங்களிப்பும் மிக இன்றியமையாததாகவே இருக்கின்றது.

இக்கட்டத்திலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காலஞ்சென்ற தலைவர் தமது இறுதி நாட்களில் கூறிச் சென்ற ஒரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

அமரர் அஷ்ரப் கூறியது இதுவே: "வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாகக் கிடைக்கக்கூடிய தீர்வே அப்பிரதேச முஸ்லிம் மக்களுக்குரிய தீர்வாகவும் அமைய முடியும்."

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வுக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள சமரச முயற்சி தமிழ் மக்களோடு முஸ்லிம் மக்களையும் கருத்திற் கொண்டதாகுமென்பதையே இன்றைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உணரவேண்டியதாகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



"*சிவப்பணி* அரசர்" எண்டொரு புனிதமான பட்டப் பெயரை யாருக்குக் குடுக்கிறது பொருத்தம்? உங்களைக் கேட்டால் யாருமொரு சமயப் பெரியாரை யோசிப்பியள். ஆனால் மொடேனாத் திங் பண்ணிப் பாத்ததில கடவுளுக்கே யாபாரம் செய்த கடைஞ்செடுத்த ஒரு மோசடி யாவாரியை தேடிப் பிடிச்சு இந்தப் பட்டத்தைச் சூட்டி ஒரு வித்தியாசமான சாதனை நடத்தியிருக்குது எங்கட காரைநகர் கோயில் ஒண்டு. யாழ்ப்பாணத்தில வெத்தில 10 ரூபா வித்த 98 வாக்கில அங்க இராணுவப் பொறுப்பதிகாரியாயிருந்த மெண்டிசைப் பேய்க்காட்டி நல்லூர் திருவிழாவுக்கு தாமரைப்பூ தருவிக் கிறதா அனுமதி வாங்கி, தாமரைக் கூடைக்க வெத்தில பதுக்கியெடுத்து வித்த ஒரு திருத்தொண்டருக்குத்தான் இந்தப் பட்டமெண்டால் பொருத்தம் தான். அட மகேஸ்வரா! நீ கண்ணைத்திறக்காமல் கைலாசத்திலயே நிஷ்டையிருந்திடறது பெட்டரடா!

**ஒரு கொஞ்சக்காலத்துக்கு** முந்தி எங்கட கூட்டணிக் காரற்ற நோட்டீஸ், போஸ்டர் ஏன் பத்திரிகை விளம்பரமெல்லாம் பார்த்திருந்தால் ஒருத்தர் விடாமல் தாங்கள் ஏதோ சேந்துநிண்டு போட்டோ எடுத்த மாதிரி போட்டுத்தள்ளின ஒரு பெரிய மனிசற்ரை படத்தைக் கனகாலத்துக்குப் பிறகு கண்டிருப்பியள். அது வேற யாருமில்லை, எங்கட தந்தை செல்வாவின்ர போட்டோ தான். அது அப்ப பாராளுமன்றத் தேர்தல் காலமுங்கோ. ஆனால் பாருங்கோ, போன ஞாயிற்றுக்கிழமை அந்த மனிசனின்ர ஒரு ஞாபகக் கூட்டம் கொட்டாஞ்சேனை விவேகானந்தா ஹில்ஸில நடந்தது. எத்தினபேர் வந்திருப்பினம் எண்டு ஒரு கெஸ்ஸிங்கில சொல்லுங்கோ? நம்ப மாட்டியள். ஆறே ஆறு பேர் தான்! அதில கூட உந்தக் கூட்டணிக் கூட்டத்தில ஒருத்தரைத்தன்னும் மருந்துக்கும் காணேல்ல. எப்பிடியிருக்குது எங்கட ஆக்களின்ர விசுவாசம்!

**ஏப்ரல் ஃபூலுக்கு** ஆளையாள் ஃபூலாக்கியிருப்பியள். ஆனால், அரசாங்கம் தன்ரை கணக்குக்கு உங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாய் ஃபூலாக்கிப் பெரிய சாதனையைச் செய்து போட்டு நிக்குது. அது தான் பட்ஜெட்டில விலையுயர்வெதையும் காட்டாமல் நல்ல பிள்ளை வேஷம் போட்டு ஏப்ரல் ஃபூலெண்டு பாத்து கரண்ட் ரேட்டை உயர்த்தியிருக்குது. இதால உலகத்தில கரண்டுக்கு அதிகூடின கட்டணம் வாங்கிற நாடுகளில ஒண்டா இலங்கையும் சேந்து சாதனை படைச்சிருக்குது. பெருமைப்படவேண்டாமே சொல்லுங்கோ?

**தாரு சலாம்** மலைமையகத்தில தலைவருக்கு நெருக்கடியாம். கிழக்கில கெடுபிடி. இவர் அமைச்சராயிருந்து எங்கட முஸ்லிம் சமுதாயத்துக்கு என்ன லாபமெண்டு கெம்பினமாம் ஒரு பகுதி. தலைவருக்கோ இருதலைக்கொள்ளி எறும்பின்ர நிலை. கெம்பிறவையலின்ர லைனெடுத்தால் அரசாங்கத்தைப் பகைக்க வேணும். அமைச்சையும் குடுக்க வேணும். இதால சமாதானப் பேச்சுக் குழம்பிப்போனால் குழப்பின் பழியும் சேந்து விழும். சும்மா இருந்தாலோ, இவர் கண்டிக்காரரெண்டபடியாத் தான் கிழக்காற்ர பிரச்சனைகளைக் கண்டு கொள்ளாமலிருக்கிறாரெண்டு ஒரு பிரதேசவாதம் பூதமாய் கிழம்பப் பாக்குது. இதுக்கு நடுவில புலிகள் வேற இவரை முஸ்லிம்களின்ர ஏகபிரதிநிதியில்லையெண்டு நிராகரிச்சுப் போட்டினம். எல்லாத்துக்கும் மேலா ஆளை விழுத்த எப்படா ஒரு சான்ஸ் கிடைக்கும் எண்டு தருணம் பாத்தபடி இருக்குது உடைஞ்சுபோன மற்றப் பக்கம். எப்படிச் சமாளிக்கப் போறாரோ? வெயிட் அன்ட் ஸீ!



## யாரிந்த அழகியென்று தெரிகிறதா?

“உலக அழகு ராணிப் போட்டியில் வெற்றிபெற்று முடிசூடிக் கையசைக்கும் இந்த அழகியை இதற்கு முன்னர் எங்கேனும் பார்த்த ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் இவரை அழகியாகக் கண்டிருக்க நியாயமில்லை. ஏனெனில் அழகராக இருந்து சமீபத்தில் தான் அழகியாக மாறினார்.

ஆம்! ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர்களுக்கான அழகிப் போட்டியில் (Miss Tifani) வெற்றி பெற்றவர் தான் இவர்.

இந்தக் கண்றாவிப் போட்டி தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக்கில் கடந்த வாரம் இடம் பெற்றது. உலகம் முழுவதிலும் இருந்து பலர் கலந்து கொண்டனர். போட்டியாளர்கள் எல்லோரும் முன்னாள் ஆண் மக்கள் இன்றைய பெண்மக்கள். பால் மாற்று சத்திர சிகிச்சை செய்து கொண்ட அழகிகளைத் தெரிவு செய்யும் போட்டிகள் ஆண்டு தோறும் நடைபெற்றுவருகின்றன.

இத்தகைய போட்டிகளை வைத்து முடிசூடி அழகு பார்த்து உலகம் முழுவதும் இதனைப் பிரபலப்படுத்துவதால் இயற்கைக்கு மாறான இத்தகைய பால் மாற்று செயற்பாடுகள் வகைதொகையின்றி அதிகரித்து வருகின்றன என்ற மதவாதிகளின் கண்டனங்களுக்கு மத்தியில் பல நாடுகள் இத்தகைய போட்டிகளை தேசிய ரீதியில் நடாத்தி இப்போது சர்வதேச மட்டப் போட்டிகளுக்கும் தமது பிரதிநிதிகளை அனுப்பி வருகின்றன. உலகம் உருப்பட்ட மாதிரித்தான்!

## இணையவிருந்து



உங்கள் பொதிகளை உரிய இடத்துக்கு அவசரமாகக் கொண்டுபோய் சேர்க்க இதோ இலகுவான வழி. ஏற்கனவே வேகமான நடைக்கும் சுறுசுறுப்பான செயற்பாட்டுக்கும் பெயர் போன ஆமையின் முதுகில் இத்தனை பெரிய சுமைகளையும் ஏற்றிவிட்டிருக்கிறார்கள்.

நெட் பட உதவி:- ஏ.எம்.கிசாந்-டுபாய்.

## கல்விக்கு முன் காதல்

**சா**ர்ஸ்-டயானா தம்பதிகளின் புதல்வர் இளவரசர் வில்லியம் பிரிட்டனிலுள்ள மிகவும் பிரபலமான செ ன் அன்ரூஸ் கல்லூரியில்



உயர்கல்வி மேற்கொண்டு வருகிறார். வில்லியம் இப்போதைக்கு கல்வியில் மட்டும் தான் ஆர்வம் காட்டுகிறார் என்று நிம்மதியுடன் இருந்து வந்த பிரிட்டிஷ் அரச குடும்பத்தினருக்கு அண்மைக்காலமாக அரசல் புரசலாக அடிபடும் சில தகவல்கள் நெஞ்சைப் பதற வைத்திருக்கிறது.

வில்லியமும் அப்பனின் வழியில் (அம்மாவின் வழியும் தான்) காதல் சமாச்சாரங்களில் “வீக்”கான ஆசாமியாகவே வளர்ந்து வருகிறாரோ என்ற பயம் அரச குடும்பத்தைத் தொற்றிக்கொண்டுள்ளது.

இளவரசர் வில்லியம் கல்வி கற்கும் சென் அன்ரூஸ் கல்லூரியில் ஏராளமான உள்ளூர், வெளிநாட்டு மாணவிகளும் பயிலுகிறார்கள். பிரிட்டிஷ் இளவரசர் பார்க்கவும் அழகாக இருக்கிறார்! விடுவார்களா?

கல்லூரியில் வில்லியமுக்கு ஏராளமான அன்புத் தொல்லை. அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கல்லூரி மாணவிகளுக்குப் படித்துப் படித்துச் சொன்னாலும் படிக்காமல் சுற்றும் சில யுவதிகளுக்கு சைட் அடிப்பதே வேலையாகிப் போய் விட்டது என்று அலுத்துக்கொள்கிறது கல்லூரி நிர்வாகம்.

தனிமையையும், அமைதியையும் வெகு



வாக விரும்பும் வில்லியம் ஓய்வு நேரங்களில் கலாசாலை வளாகத்துக்குள் இருக்கும் கிளப்பில் நேரத்தைச் செலவிடுவார். இப்போது அங்கே தான் நிலைமை மிகவும் சீரியஸாக இருக்கிறது.

வில்லியம் ‘பியர்’ அருந்தும் அழகை ரசிக்க வந்துசேரும் குமரிகள் தமது கடைக்கண் பார்வையை மட்டுமன்றி மொத்தமாக இருகண் பார்வையையும் அவர் மீது செலுத்தி வலை வீசுகிறார்கள். இதுவரை இரண்டு மாணவிகளுடன் வில்லியத்தின் பெயர் இணைத்துப் பேசப்படுகிறது. ஒருவர் எமிலா டி ஏலென்ஜா மற்றவர் எனபல் கிளைன். இருவரும் இரண்டாம் ஆண்டு மாணவிகள். ‘பிரஜெக்ட் வேர்க்’ என்று வகுப்பாசிரியர் ஒரு குழுவை அழைத்தபோது வில்லியத்துடன் இந்த இரண்டு பேரும் ஒரே குழுவில் இடம்பெற்றனர். ஆனால், அங்கே பிரஜெக்ட் வேர்க்கைத் தாண்டி பாடம் நடந்ததாகக் கூறுகிறது ஒரு பிரிட்டிஷ் இணையத்தளம் ஒன்று.

முளைத்து மூன்று இலை விட முன்னரே தமது பேரப்பிள்ளைகளின்



பேரில் வெளியாகும் இத்தனை கிசுகிசுக்கள் குறித்து அப்பா சாள்ஸ்சை விடவும் எலிசபெத் மகாராணி மனம் நொந்துபோயிருக்கிறாராம்!

## மொடல் அழகி நயோமிக்கு ‘மிரர்’ நட்டஈடு வழங்க வேண்டும்

**“ப**த்திரிகைக்காரர்கள் என்றால் என்ன வேண்டுமானாலும் எழுதலாமா.....?” கண்டிப்பான கேள்வியோடு பிரிட்டிஷ் மொடல் அழகி நயோமி கம்பெல்லுக்கு லண்டன் மாநகர உயர் நீதிமன்றம் 3,500 ஸ்டேலிங் பவுண்களை நட்ட ஈடாக வழங்குமாறு தீர்ப்பளித்திருக்கிறது. லண்டனிலிருந்து வெளியாகும் ‘மிரர்’ பத்திரிகை நயோமி பற்றி அவதூறான கட்டுரை ஒன்றைப் பிரசுரித்தமைக்காகவே லண்டன் உயர்நீதிமன்ற நீதியரசர் மோர்லண்ட் இந்த அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

நயோமி கம்பெல் உலகிலேயே மிக அழகான மொடலாகக் கருதப்படுபவர். அத்துடன் இவர் ஒரு கறுப்பினத்தவர். இவரைச் ‘சொக்கலேற் சோல்ஜர்’ என்று அந்த நாளிதழ் வர்ணித்துள்ளது.

நயோமி போதை மருந்துகள் பயன்படுத்தி வந்தவர் என்றும் அப்பழக்கத்திலிருந்து மீள்வதற்காக மருத்துவ உதவிகள் பெற்றுவந்துள்ளார் என்றும் ‘த மிரர்’ கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நயோமி அவ்வாறு மருத்துவ உதவி பெற்று வந்த வேளையில் பிறிதொரு பத்திரிகைக்கான பேட்டியில் தான் போதை வஸ்து பயன்படுத்துவதில்லை என்று பொய்கூறியுள்ளார் என்றும், மிரர் தினசரி சார்பில் எடுத்துக் கூறப்பட்டதுடன், அதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளார் என்றும் வாதாடப்பட்டது.

பிரதிவாதியின் கருத்தை ஏற்றுக்





கொண்ட போதும் “நயோமி கம்பெல் பொது மக்கள் மத்தியில் உயர் அந்தஸ்தில் மதிக்கப்படுவதனாலும் அத்தகைய கட்டுரை பிரசுரிக்கப்பட்டமையினால் அவருடைய குடும்ப வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளமையினாலும் அவருக்குப் பத்திரிகை நிர்வாகம் இத்தொகையை வழங்கியே ஆக வேண்டும்” என்றும் நீதியரசர் தனது தீர்ப்பில் தெரிவித்திருக்கிறார்.

மிரர் நாளிதழ் 2001 பெப்ரவரியில் நயோமி கம்பெல் போதை வஸ்து பாவனையாளர்கள் திருந்துவதற்கான ஆலோசனை வழங்கப்படும் நிலையங்களுக்குச் சென்றுள்ளார் என்பதைப் படம் பிடித்துப் பிரசுரித்துள்ளது. இதனைச் சுட்டிக் காட்ட உரிமை உண்டென்ற போதும் மக்களிடம் ஓரளவு செல்வாக்குப் பெற்ற ஒரு நபருடைய பொதுவாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலான கட்டுரைகளைப் பிரசுரிப்பதற்கு அப்பத்திரிகைக்கு உரிமை கிடையாது என்றும் நீதியரசர் மோர்லண்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உடற்பயிற்சி

➝**வி**மானத்தில் தொடர்ச்சியாக நீண்ட நேரம் பயணிப்பவர்களும், அடிக்கடி விமானப் பயணம் மேற்கொள்பவர்களும் குருதி உறையும் நோயால் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து பிரிட்டிஷ் எயார்வேஸ் நிறுவனம் தனது விமானமோட்டிகளுக்கு பயிற்சிகளை வழங்கும் புதிய திட்டம் ஒன்றை செயற்படுத்துகின்றது. உடலை ஒரே நிலையில் வைத்தவாறு அதிக நேரம் விமானத்தில் பயணம் செய்யும் போது மனித உடலில் அதிகம் பாதிப்புக்குள்ளாவது இரத்தச் சுற்றோட்டத்தொகுதியே என்று விளக்கமளிக்கும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள், குருதி உறையும் தன்மையை தடுக்க தற்போது இருக்கும் இலகுவான வழி அதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட உடற்பயிற்சிகளை மேற்கொள்வதுதான் என சுட்டிக் காட்டியுள்ளனர். பிரிட்டிஷ் எயாக்வேஸ் பெண் விமானமோட்டி ஒருவருக்கு உடற் பயிற்சி வழங்கப்படுவதையே காண்கிறீர்கள்.





# இனிப்பான முட்டை

↑**டை**னோசர் முட்டைகளை வரிசையாக அடுக்கி வைக்கிறார்கள் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை இங்கிருப்பது முற்றிலும் இனிப்பான முட்டை. அதாகப்பட்டது சொக்லட் முட்டை, அண்மையில் ரோம் நகரில் இடம்பெற்ற ஐரோப்பிய சொக்லட் கண்காட்சி ஒன்றின் போது ஸ்பெயின் நாட்டு சொக்லட் உற்பத்தியாளர் ஒருவர் தன்பங்குக்கு தயாரித்திருந்த முட்டைகள்தான் இவை இவ்வாறு சுமார் 3000 சொக்லட் முட்டைகளை தயாரித்து வரிசையாக அடுக்கி வைத்து ஒட்டுமொத்த பார்வையாளர்களையும் வாயுறவைத்தார் அந்த ஸ்பானியர்.

# வயிற்றுப் பசிக்கு

➝**ஏ**ழைக்கு மழையென்ன வெயிலென்ன? மழையினால் வீதிமுழுவதும் நீர் நிரம்பியிருக்கிறது. ஆனால் தன் வீட்டில் அடுப்பெரிய வேண்டும் என்பதற்காக ரிக்ஷா இழுக்கும் ஒரு வயோதிப வறுமைப்பட்ட மனிதரைத்தான் இங்கே காண்கிறீர்கள். இது இந்தியாவின் கோல்கத்தா நகரில் 'க்ளிக்' செய்யப்பட்ட படம். இந்திய நகரங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமது ஜீவனோபாயத்துக்காக இந்த ரிக்ஷா இழுக்கும் தொழிலில் ஈடுபடுகின்றனர். சிறுவர்களும், முதியவர்களுமாக வயது வேறுபாடின்றி வயிற்றுப் பிழைப்புக்காக இந்த கடினமான தொழிலை மேற்கொள்கின்றனர். இவர்களுக்கு மிகவும் குறைந்தளவு கூலியே வழங்கப்படுவதுண்டு. முழுநாளும் கொழுத்தும் வெயிலில் அல்லது கொட்டும் மழையில் ரிக்ஷா இழுத்துவிட்டு தனது மூவேளை உணவுக்குப் போதுமானதை சம்பாதிக்க முடியாமல் பட்டினியுடன் உறக்கத்துக்குச் செல்லும் அப்பாவிகள்தான் எத்தனை பேர்!



# தகவல் பெட்டி

# அதிர்ஷ்டம்



←**ஆ**ற்றில் உல்லாசமாக படகில் பயணித்துக் கொண்டிருந்த தாயும் பிள்ளையும் தங்களை மறந்த பயணத்தில் நீர்வீழ்ச்சி ஒன்றை நோக்கி படகை செலுத்திவிட்டார்கள். வேகமாக சென்ற படகு நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் உள்ள கல்லொன்றில் சிக்கி தெய்வாதீனமாக இடையில் நின்றது. பயணித்தவர்களின் அதிஷ்டம்! உடனே தமது கையில் இருந்த செல்போனில் பொலிஸுக்கு தகவல் கொடுத்தார்கள். மறுகணமே ஹெலிகொப்டரில் வந்த மீட்புப் பணியாளர்கள் படகில் இருந்த தாயையும் சிறுபிள்ளையையும் மீட்டெடுத்தனர். இந்த சம்பவம் அமெரிக்காவின் இந்தியானா மாநிலத்தில் உள்ள 'வைட்ரிவர்' என்ற ஆற்றில் நிகழ்ந்தது. நமது நாட்டிலென்றால் பொலிஸுக்கு தகவல் போய்ச்சேரும்போது அனேகமாக தாயும் பிள்ளையும் எமலோகம் போய்ச் சேர்ந்திருப்பார்கள்.

# குழந்தை வியாபாரம்

➘**ஆ**ட்கடத்தல் குற்றத்திற்கு சீனாவில் மரணதண்டனை வழங்கப்படுவதுண்டு. ஆனாலும் அந்த நாட்டில் இத்தகைய குற்றச்செயல்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. அண்மையில் சீனாவின் யன்மான் மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்து வாங்கப்பட்ட 10 கைக்குழந்தைகளை வெளிநாட்டவர்களுக்கு விற்க முயற்சித்த சிலரை பொலிஸார் கைது செய்தனர். சுற்றுலா பயணிகள் போல் சீனாவுக்குள் பிரவேசிக்கும் பெண்கள் அங்கிருந்து வெளியேறும் போது இவ்வாறு பணத்திற்கு வாங்கப்பட்ட குழந்தைகளை தமது குழந்தைகள்போல் எடுத்துக்கொண்டு வெளியேறுகின்றனராம். ஏழை விவசாயிகளிடமிருந்து வாங்கப்பட்ட குழந்தைகளை கடத்தல் காரர்களிடமிருந்து மீட்ட பொலிஸார் குழந்தைகளை கொஞ்சி மகிழ்வதையே இங்கு காண்கிறீர்கள்.



# கமல் ஒரு ஜென்டில்மேன் என்கிறார் சிம்ரனின் தங்கை

"பார்வை ஒன்றே போதுமே" படத்தின் மூலம் பாலிவுட் நகரத்திலிருந்து கோலிவுட்டுக்கு வந்த மோனல், முடிந்த மட்டும் சிம்ரனின் தங்கை என்கிற சிபாரிசு முத்திரையைத் தவிர்க்கப் பார்க்கிறார். தனக்கென்த் தனித்துவம் தேடுகிறார். எதையும் தீர்மானமாகச் சொல்லி, துறுதுறுப்பாகப் பேசுகிறார். அவருடன் ஒரு சுருக் பேட்டி:

**கிளாமரான நடிகையாகவே இருக்கப் போகிறீர்களா?**

ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லோருமே என் சிஸ்டர் சிம்ரன் உட்பட கிளாமர் ஹீரோயின்களாகத் தான் அறிமுகமாகிறார்கள். எல்லா ரசிகர்களும் வீட்டிலிருக்கிற அக்கா, தங்கை, மனைவி இவர்களைத் தான் புடவையில், சல்வார் கம்மீஸில் பார்க்க விரும்புவார்கள். கிளாமர் பார்க்க விரும்பும் போது தியேட்டருக்கு வர்றாங்க. அவர்களைத் திருப்திப்படுத்த கிளாமர் முக்கியம்.

**சிம்ரனுடன் சண்டையா?**

இல்லவே இல்லை! தொழில், பணம், புகழ் இதையெல்லாம் மீறிய விஷயம் பாசம். நடிப்பை விட்டுவிட்டு நான் வேறு எந்த வேலை பார்த்தும் கூட பணம், புகழைச் சம்பாதிக்க முடியும். ஆனால், சிம்ரன் மாதிரி பாசமான சகோதரியைச் சம்பாதிக்கவே முடியாது.

**கமல்–சிம்ரன் காதல் என்று கிசுகிசுக்கப்படுகிறதே?**

முன்பு சிம்ரன்-ராஜு" சுந்தரம்னு சொல்லிக்கிட்டு இருந்தாங்க. இன்னைக்கு கமல்-சிம்ரன்னு சொல்றாங்க. ஆனா, கமல் ஒரு பக்கா ஜென்டில்மேன்!



பிரபுதேவா-ஆஷிமா
படம்: அலாவுதீன்

# சம்பளத்தைக் குறைக்...

ஜோதிகாவின் (செல்லமாக ஜோ) ச...
ஆனால், சம்பளம் உயர்ந்தவுடன் பட...
உணர்ந்தார் ஜோ.

படங்கள் குறைந்தாலும் கூட த...
இருந்தார் ஜோ. இந்நிலையில் தி...
த்துவிட்டதாகத் தயாரிப்பாளர்களு...

இந் நிலையில் அஜீத் நடிக்க...
படத்தில் அவருக்கு ஜோடியாக...
45 லட்சம் ரூபா வரை சம்ப...
முதலில் ஜோ கேட்ட...
இருந்ததாம். அதன் பிறகு...
கொண்டு வந்து நிறுத்தி...
இருந்தாலும், இன்னு...
இறங்கிவந்தால் நன்...
என்று தலையைச்...
கொண்டிருக்கி...
களாம் செரின்
மூவி மேக்
கர்ள்.

# கெப்டனை குளிர்விக்கும் ஷமீதாவின் அணைப்பு

ராஜ்ஜியம் திரைப் படத்தில் விஜயகாந்துக்கு ஜோடியாக நடிக்கும் ஷமீதா செட்டி "கெப்டனின்" மனதை ரொம்பவுமே திருடிவிட்டாராம்.

இயக்குநர் எதிர்பார்த்ததை விடவும் தாராளமாக ஒத்துழைக்கும் ஷமீதா விஜயகாந்துடன் நடிப்பில் காட்டும் நெருக்கம் யூனிட்டில் உள்ள பலரையே மெய்சிலிர்க்க வைத்திருக்கிறதாம். அணைப்பில் காட்டும் ஆர்வமும், முத்தக்காட்சிகளில் இயல்பாகவே ஷமீதா வெளியிடும் முனகலும் கெப்டனை வெகுவாக குளிர்வித்திருக்கிறது. அதனால் விஜயகாந்தின் அடுத்த படத்திலும் ஷமீதாவுக்கு இடமுண்டு என்பது ஏற்கனவே உறுதியாகிவிட்டதாம்.

இந்த ஷமீதா செட்டி ஷில்பா செட்டியின் தங்கை என்பது குறிப்பிடத்தக்கது.



## 'பாபா' படப்பிடிப்பு ஆரம்பம்

# தொழிலாளியாக ரஜினி; ஜப்பான் நடிகையும் பங்கேற்பு

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தின் "பாபா" படத் தொடக்க விழா ரசிகர்களின் உற்சாக ஆரவாரத்திற்கு மத்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 24, 2002) தொடங்கியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை "பாபா" படத்தின் பூஜை நடந்து, அதன்பின் உடனடியாகப் படப்பிடிப்பும் தொடங்கியது. அன்று காலையில் பாரிமுனை காளிகாம்பாள் கோவிலுக்குச் சென்ற ரஜினிகாந்த் அங்கு பயபக்தியுடன் அம்மனைத் தரிசித்தார். சில வாரங்களுக்கு முன்பும் இதே கோவிலுக்கு ரஜினி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஜினி கோவிலுக்கு வருவது குறித்து அறிந்த ரசிகர்கள், அந்த அதிகாலை நேரத்திலும் நூற்றுக்கணக்கில் கூடிநின்று ரஜினியை வாழ்த்தி வரவேற்றனர். ரஜினியின் பாதுகாவலர்களையும் மீறி அவரைத் தங்களது தோள்களில் தூக்கி ஆரவாரித்தனர்.

அவர்களிடமிருந்து மீண்ட ரஜினி பின்னர் பூஜை நடந்த ஏவிஎம் ஸ்டூடியோவிற்குக் கிளம்பினார். அங்கு திரையுலகப் பிரமுகர்கள் பலர் திரண்டிருந்தனர்.

தனது குருவான பாலச்சந்தரின் காலில் விழுந்து ரஜினி ஆசி வாங்கிய பின்னர் பூஜை, படப்பிடிப்புத் தொடங்கியது. விநாயகர் கோவில் முன்பு ரஜினி தேங்காய் உடைப்பது போல முதல் காட்சி படமானது.

ரஜினியுடன் பாபா படத்தில் நடிக்கவுள்ள ஜப்பானிய நடிகை யாஷி மெர்லி ஜுலியும் படப்பிடிப்பில் கலந்து கொண்டார். ஜப்பானியப் பெண்ணாக இருந்தாலும் நம்மூர் பெண் போல வெட்கம் முகத்தில் தாண்டவமாட உற்சாகத்துடன் காணப்பட்டார்.

## 'தயா' மொழிமாற்றம்...

பிரகாஷ்ராஜ் "டூயட் மூவிஸ்" என்ற தன் பட நிறுவனம் சார்பாகத் தயாரித்து நடித்த "தயா" கமர்ஷியலாக வெற்றிபெற்றிருக்கிறது. எனவே, அதைத் தெலுங்கில் டப் செய்யப்போகிறார் அவர். தெலுங்கிலும் தயா தான். இதை இந்தியில் ரீமேக் செய்யவும் போகிறாராம். அதோடு தமிழில் அடுத்த பட ஆயத்த வேலைகளிலும் இருக்கிறார் பிரகாஷ்ராஜ்.

சினி விசிட்

★★

# மினி சினி

★"சார்லி சாப்ளின்" நாயகியான காயத்திரி ரகுராமுக்குப் படங்கள் வந்து குவியத் தொடங்கி விட்டன. இப்போது அவருடைய தங்கை சுஜா ரகுராமும் அவருடன் இணைந்து பெரிய திரையைக் கலக்க வருகிறார். அக்காவும் தங்கையும் இணைந்து "மனசெல்லாம் நீயே" என்ற படத்தில் ரசிகர்களைப் படபடக்க வைக்க வருகிறார்கள். அடுத்த நக்மா-ஜோதிகா?

★ கமலஹாசன் தனது மருதநாயகம் ஸ்கிரிப்டைத் தூசி தட்டிக்கொண்டிருக்கிறார். எப்போது வேண்டுமானாலும் படத்தை ஆரம்பிப்பார் என்று அவருக்கு நெருங்கிய வட்டாரத்தில் கிசுகிசுக்கப்படுகிறது.

★ ஜெயா டிவியின் "அண்ணி" மெகா தொடரில் கலக்கி வரும் சௌம்யா பெரிய திரைக்கு வர ரொம்பவும் தயங்குகிறார். வருகிற பல வாய்ப்புக்களைத் தட்டிக்கழித்து வருகிறாராம். பெரிய திரைக்குச் சென்றால் தனது பிரைவசி பாதிக்கப்படும் என்று பயப்படுகிறாராம். "சின்னத்திரையே போதுமப்பா" என்ற திருப்தியான மனதுடன் இருக்கிறாராம். அடடே...!

★ இளைய தளபதி விஜய்யின் "யூத்"தில் மும்பை மொடல் சாஹீன் ஹீரோயினாக நடிக்கிறார். படப்பிடிப்பு வெகு விரைவாக நடந்து வருகிறது. "தமிழன்" நன்றாக வந்திருக்கும் சந்தோஷத்தில் உற்சாகமாக நடித்து வருகிறாராம் விஜய். படமும் பெயருக்கு ஏற்றாற்போல் "யூத் ஃபுல்"லாக இருக்குமாம்.

★அஜித் நடிக்க "மஹா" என்ற படத்தை நிக் சினி ஆர்ட்ஸ் சக்கரவர்த்தி புதிதாகத் தயாரிக்கவுள்ளார். "ராஜா" மற்றும் "திருடா" ஆகியவை முடிந்த பிறகு இந்தப்படம் துவங்குமாம்.

★ மம்முட்டியுடன் பெரியளவில் மோதல் உருவாகி பின்னர் சமாதானம் அடைந்த பிறகு "ஜூனியர் சீனியர்" படம் முடிந்தது. இப்போது பாடல்களும் வெளியாகிவிட்டன. படம் ஏப்ரலில் ரிலீஸாம். படத்தில் மம்முட்டியின் ரோல் வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டதாம். அம்சவர்தனை வெயிட்டான கேரக்டராக மாற்றிவிட்டாராம் தயாரிப்பாளர் - இயக்குநர் சுரேஷ்.


## பிர...
## பிறந்தநா...

பிரசாந்த்-சிம்ரன் நடிக்கு...
பிரசாந்தின் பிறந்த நாளா...
ஆரம்பிக்கப்பட்டது. ...
நான்கிலிருந்து ஆறு மா...
ஆனால், இந்தப் படம் ...
இடையூறுகள். சிம்ரன் கா...
பிரசாந்துக்கு ஏற்பட்ட வி...
கொஞ்சம் நீடித்துவிட்டது ...
படத்தின் தரத்தைக்கூட்...
இயக்குநர் ஹரி.

இவர் ...
பெற்று ...
இரு...

முகப்பில்

லைலா & ரமேஷ்



குணால்-மோனல்

## கிறார் 'ஜோ' – மார்க்கெட் சரிகிறதா...?

ம் வானைத் தொடும் தூரத்திற்குச்சென்றுவிட்டது தெரிந்தது தான். ின் எண்ணிக்கை படுபயங்கரமாகக் குறையத் தொடங்கிவிட்டதை

சம்பளத்தைக் குறைப்பதில்லை என்று பிடிவாதமாக ரோதயம் ஏற்படவே, மீண்டும் சம்பளத்தைக் குறை அவர் ஓலை அனுப்பினார்.

சேரின் மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் ராஜா டிக்கிறார் ஜோ. இதற்காக அவருக்கு பேசியுள்ளார்களாம்.

பளம் பிரசாந் ரேஞ்சுக்கு டிப்படியாகப் பேசி 45ல் ர்களாம்.

கொஞ்சம் ஜோ இருக்கும் ரிந்து




## மீண்டும் சுகன்யா

ஒரு சர்ச்சைக்குப் பிறகு தமிழிலிருந்து காணாமல் போன சுகன்யா நீண்ட இடைவெளிக்குப் பின் "ஆஹா" படத்தின் மூலம் திரும்பி வந்தார். அப்படி ஒரு படம் வந்ததா என்று கேட்குமளவிற்கு அந்தப் படம் அமைந்ததால் மீண்டும் காணாமல் போனவரை "கிருஷ்ணா கிருஷ்ணா" படத்தில் எஸ்.வி.சேகர் அழைத்துவந்தார். கிருஷ்ணனும் கைவிட்ட நிலையில் சுகன்யா இப்போது நம்பியிருப்பது முனீஸ்வரனைத் தான். அவசரப்பட்டு முனீஸ்வரனுக்கு அவர் "கிடா" வெட்ட நேர்ந்துகொண்டதாக நினைக்க வேண்டாம். "முனீஸ்வரா" ஒரு படம். நடிகரான கடவுள் கண்ணன் இயக்குனராகும் படம் இது. இயக்குனர் வேலு பிரபாகரனின் உதவியால் இயக்குனரானவர் இவர். அவரிடம் இவர் உதவி இயக்குனராக இருந்தாரா? என்றெல்லாம் கேட்க வேண்டாம். அவர் இயக்க, இவர் பெயரைப் போட்டுக் கொண்டார் என்ற உண்மையெல்லாம் எதற்கு?

## 'நைனா'வாகிறார் ஜெயராம்!

"நைனா" என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? மெட்ராஸ் பாஷையில் "அப்பா". படத்தில் மகன் ஜெயராமுக்கும், நைனா ஜெயராமுக்கும் இருவருக்கு இரட்டை வேடம்) ஆகவே ஆகாது. ஒரு கட்டத்தில் நைனா கொல்லப்பட ஆவியாகிவிடுகிறார். ஆவி ஒரு மனிதனுடன் பழங்க ஒரு மீடியம் வேண்டுமல்லவா? ஆவியுடன் பேசுவதாகக் கதைவிட்டுக்கொண்டு காசு பார்க்கும் வடிவேலு உதவியால் நைனா பண்ணும் லூட்டிகள் தான் கதை. நைனா ஜெயராம் ஆவியாகி அலைய, மகன் ஜெயராமோ அழகான ராட்சசி மான்யாவோடு அலைகிறார். ஏன் இந்த ஒரவஞ்சனை? என்று டைரக்டர் மனோபாலாவிடம் கேட்டால் "அது தான் டைட்டிலையே நைனாவுக்கு விட்டுக் கொடுத்தாகி விட்டதே!" என்கிறார்.



## ...ந்தின் ...ல் 'தமிழ்'

தமிழ்' படப்பிடிப்பு ப்ரல் 6ம் தேதியன்று கமாகப் படங்கள் ளுக்குள் முடிந்துவிடும். ந பிரசாந் படங்களின் ிட் பிரச்சனைகள் மற்றும் த. இந்தக் காரணங்களால் ந்தாலும், இந்தா நீடிப்பைப் பயன்படுத்திக் கொண்டார்

குநர் பாலச்சந்தரிடம் பயிற்சி ன் படங்களில் அசோசியேட்டாக ர். இந்தப் படத்தில் வேட்டி ் பிரசாந்தையும், பாவாடை டை போட்ட சிம்ரனையும் அறிமுகப்படுத்தப் போகிறேன் என்கிறார்.

சரி! படம் எப்ப ரிலீசாம்? இந்த வருஷம் பிரசாந்த் பிறந்த ளைக்காம்.



திரையுலக மறுபக்கம்

229

தமிழ்நாட்டிலிருந்து பயன்

## மனமறிந்து சேவை செய்த கண்ணழகி!

குட்டி பத்மியின் கணவர் பிரபு நேபால். பத்மினியை விட பிரபுநேபால் வயதில் இளையவர். புத்திபேதலிக்கும் இளவயதில் குட்டிபத்மியினின் கும்தளக்கா கும்மாளங்களில் மயக்கி அவரைக் காதலித்து கர்ப்பமாக்கி பின்னர் கலியாணம் செய்துகொண்டார். தூரத்தில் இருந்து பத்மினியின் பிரமாண்டங்களை ரசித்து விளையாடியவருக்கு சொந்தவீட்டில் மனைவியாக வைத்து அனுபவிக்கும் போது சலிப்புத் தட்டத்தொடங்கியது. வித்தியாசமான ரசனைகளுக்குப் பழக்கப்பட்ட பிரபுநேபால் "நாட்டாமை" குமாரரின் மனைவியாகத் தற்போது வாழும் "சித்தி"யிடம் சிலகாலம் சாந்தியடைந்து வந்தார். இதையறிந்த குட்டி பத்மினி "சித்தி"யுடன் சண்டையிட்டு மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் இருவரையும் பிரித்தார்.

ஆடிய காலும், பாடிய வாயும் சும்மா இருக்குமா...? மீண்டும் புதிதாக ஒன்றைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பிரபுநேபாலுக்கு மீனமான கண்ணழகியின் கடைக்கண் பார்வை கிட்டியது. பிரபு நேபால் போன்று "அந்த" விஷயத்தில் "வீக்"கானவர்களை க்ளீன் போல்ட் செய்வதில் கண்ணழகி படுகில்லாடி! சொர்க்கத்தின் வாசல் வரை கூட்டிச்சென்று குடேற்றி விட்டு மொத்தமும் வேண்டும் என்றால் இன்னதெல்லாம்தர வேண்டும் என்று இக்கட்டான நேரத்தில் அழகான கண்டிஷன் போட்டு பிடுங்கத் தெரிந்தவர்.

தன்னுடைய படத்தில் கண்ணழகியை புக் செய்த பிரபுநேபால் படப்பிடிப்பு என்ற சாட்டில் தென்னாபிரிக்காவுக்குச் கூட்டிச்சென்று அங்கே வைத்து அன்பைப் பெற்றிருக்கிறார்.

வில்லாதி வில்லன்கள் பலர் அத்வைதம் பெற்ற மீனத்திடம் மோட்சம் காணும் பாக்கியம் தென்னாபிரிக்க ஹோட்டல் ஒன்றில் வைத்து பிரபுநேபாலுக்குக் கிட்டியது. கூர்மையான டிஸ்கஷனுக்காக கண்ணழகியை தனது அறைக்கு அழைத்த பிரபுநேபாலுக்கு பூர்வஜென்மப் பலன் கிட்டியது.

இவரை விட பலசாலிகளையே தன் காலடியில் சுருண்டு விழச்செய்த கண்ணழகிக்கு பிரபுநேபாலின் மனமறிந்து சேவை செய்வதில் எவ்வித சங்கடமும் இருக்கவில்லையாம்.

அந்த "மலை முகடுகளில்" கிறங்கிப்போன பிரபுநேபால் இந்தியா திரும்பிய பின்னரும் மும்பாய், ஊட்டி என்று சுற்றித்திரிந்து மீனத்தின் அற்புதங்களை அனுபவித்து வருகிறார்.

குட்டி பத்மினியின் நெற்றிக்கண், கண்ணழகியை நோக்கி திரும்பியிருக்கிறதாம்.

## ரவிக்கையில்லாமல் சிம்ரன்!

நகர நாகரிகத்தில் வளர்ந்த நடிகைகளையெல்லாம் பாரதிராஜா கிராமிய நாகரிகத்திற்குக் கூட்டிப் போய் ரவிக்கையில்லாமல் நடிக்க வைத்துக்கொண்டிருப்பார்.

அந்த டிரெண்ட் முடிவடைந்து விட்டதால் இபபோதுள்ள நடிகைகளுக்கு அந்த வாய்ப்புக்கிடைக்காமலிருந்தது. அந்தக் குறையைக் "கோவில்பட்டி வீரலட்சுமி" படம் தீர்த்து வைக்கிறது.

கோவில்பட்டியில் நடந்த உண்மைச் சம்பவமொன்றை அடிப்படையாக வைத்து இந்தப்படத்தை இயக்குபவர் கே.ராஜேஸ்வர். கதையைக் கேட்டு மெய்சிலிர்த்த சிம்ரன் இப்படி ரவிக்கையில்லாமல் நடிப்பதற்கு ஓகே சொல்லியிருக்கிறார். ரசிகர்களுக்கோ டபுள் ஓகே. சொல்லக் கூடும்.

## சமாதானம் பேச....

ஆயத்த மணி அடித்தாயிற்று
சின்னமுரசு கொட்டியாயிற்று
நாங்கள் ஆடுகளத்தில்
நீங்கள்...?
♣♣
இவை
போரிற்காக அல்ல
சமாதானத்திற்காக!
♣♣
உங்கள் கத்திகளைத் தீட்டி
முதகில் சொருகிக்கொண்டு
சமாதானம் பேச வாருங்கள்
♣♣
உங்கள் கத்திகளைத் திட்டி
முதுகில் சொருகிக்கொண்டு
சமாதானம் பேச
வாருங்கள்.
♣♣
இது மைதானம்
இது திறந்தவெளி
நீங்கள் எங்கிருந்தும் வரலாம்
ஆனால்,
சமாதானம் பேசவும்
முதுகுக்குப் பின்னால்
வந்து விடாதீர்கள்
♣♣
உங்களால் முடிந்தளவு
குறைந்த எண்ணிக்கையுள்ள
நேர்மை மிகுந்தவர்களே
வாருங்கள்
நாங்களும் அப்படித் தான்!
♣♣
பேச்சுக்காரர்கள் கூடினால்
கருத்து வேறுபட்டு
கத்திகள் மூட்டப்பட்டுவிடும்
♣♣
எதிர்காலம் ஊகிக்கப்படக் கூடியது
ஆதலால்,
எதிர்காலம் திருத்தியமைக்கப்படக் கூடியது!
♣♣
சத்தியத்தின் வழியில்
இது சாத்தியமாகும்
♣♣
உங்களின் பின்னால்
ஒரு கூட்டம் இருப்பது பற்றியோ
உங்கள் முதுகிலுள்ள
கத்தியின் கூர்மை பற்றியோ
நீங்கள் மறந்துவிடுங்கள்.
நாங்களும் மறந்துவிடுகிறோம்!
♣♣
ஏதோ பெரிதொன்றை
இழந்துவிட்டவர்களாய்
அனுபவங்களில் ஞானமடைந்தவர்களாய்
அறிவாளிகளாய்
மெதுவாகப் பேசித் தீர்ப்போம்
முடிந்த மட்டில்
உண்மையை உணர்ந்து கொள்வோம்
♣♣
முடியாவிட்டால்
முரண்பட்டுவிட்டால்
எங்கள் தன்மான உணர்வுகள்
அதிகமாய் கிளர்ந்துவிட்டால்
உண்மையாகவே எங்களுக்குக்
காய அனுபவம்
போதவில்லை என்ற கவலையில்
முண்டிக்கொள்வோம்
♣♣
தீர்ப்போம் அல்லது தீர்வோம்
சமாதான ஆடுகளத்தில்
நாங்கள்...
நண்பர்களே நீங்கள்...?

அரிந்தமன், இருபாலை.

## காலணிகள்

பள்ளியில்
வெள்ளிவிழாவென்று
கலைக்காய் தலைகளைச்
சேர்த்தனர் ஆசான்கள்
சேர்ப்பிலோ ஓட்டை!

நாடகம் நர்த்தனம்
தாளலயம்... என்றெல்லாம்
எதிலும் நானில்லை
"நானும்... நானும்..." என்று
என் மனம் கூவியது
என் சப்தம் நிசப்தம்!

ஊனமானேன்
திறமைக்கு முன்னிடமாம்
அதிபரின் மூச்சு
மூச்சிலோ ஓட்டை!

மரித்த காலங்கள்
மண்ணுக்குள்
கண்கசக்குகின்றன
இன்றுவரை....

நகருகின்ற நாட்களில்
யாரோ - ஓர்
ஆன்மா மட்டும்
ஏணிப்படிகளை வைக்கிறது
அதிகாரம்!

பள்ளி என் இச்சைகளை
காலாவதியான
காலணிகளாய்
உருவாக்கியபோதும்
முதுகு தட்டி
முதுகெலும்புக்கு உருத்தந்த
முரசுக்கு என் நன்றிகள்!

ஷர்மிலா.ஏ.எஸ், அனுராதபுரம்.

## எல்லோருமே!

வெட்கங்கெட்ட
கனவுகளில்
வீழ்ந்து தினம்
எழுகிறோம்...!

கண்கள் வழிகண்ட
காட்சிப்பிழைகளெல்லாம்...
கனவுகளிலும்
காட்சிப்பிழைதான்!

சொல்லமுடியாத
வார்த்தைகளைக் கொண்டு
சொல்லத்துடிக்க வைக்கும்
சில கனவுகள்!

பாம்பு தீண்டுவதாய் ஒரு கனவு...
வானில் மிதப்பதாய் மறு கனவு...
நீரில் எரிவதாய் ஒரு கனவு...
புழுவாகிப் போவதாய் புதுக்கனவு...

சூழ்ச்சிகள் செய்தும்
பிறன்மனை நோக்கியும்
நிர்வாணமான
உணர்வுகளின்
உச்சக்கட்டம்...!

கனவுகளிலும்
கற்பில்லை...
நிஜங்களிலும்
நேர்மையில்லை...
என்றோ புதைத்த
எச்சில் நினைவுகளால்,
நிகழும்...
வெட்கங்கெட்ட
கனவுகளில்...
எல்லோரும்
வீழ்ந்து தினம்
எழுகிறோம்...!

ஆகஸா, கட்டார்.

## நினைவஞ்சலி

அன்பெனும் வேதம் கொண்டவளே
அஞ்சலி செலுத்த வைத்துவிட்டாயே
அடுக்கடுக்காய் ஆண்டுகள் வந்தாலும்
அழுகை இன்னும் மாறவில்லையடி!

ஏப்ரல் ஒன்று
முட்டாள் தினமென எண்ணி
மறுநாள் உன்
மரணத்தை உறுதிப்படுத்திக் கொண்டாயா?

தினமுரசு மூலம் அறிமுகமாகி
தபால் சேவையைப் புனிதப்படுத்தி
நட்பிற்கு நாட்களைப் பாலமாக அமைத்து
பேனாவிற்குப் பெருமை சேர்த்து
பேனா நட்புக்கொண்டவளே!

உன் மரணத்தால் என்னை உலகிற்கு
வெளிக்காட்டிவிட்டு
உறங்குகின்றாயா கல்லறையில்?

இறுதிவரை உன்
முகம் காணாத நான்
அயல் நாட்டில் இருந்தாலும்
அஞ்சலி செலுத்த மறவேன்!

எஸ்.சிவகுமார், பெரியகல்லாறு-02
(டோஹா-கட்டார்)

## எரிமலைத்துகளாய்

உக்கிப்போன மனத்திலும்
உன்னதப் பூப்பூக்கும்
வெடித்துக் கிளம்பிய
எரிமலைத் துணுக்குகள்!
ஈரப்பசையின்றி
இறுகிப்போன
நெஞ்சப் பாளம்!
சீற்றம் இன்னும்
ஆற்றப்படாத
உள்ளம்!
எத்தனை மாற்றங்கள்!
ஏற்றங்கள்
ஏமாற்றங்கள்
பொய்மைத் தோற்றங்கள்!
ஆயினும்
கூற்று வந்து உயிர்
குடித்தாலும்
குறுக்க முடியாத கொள்கைச்
சுவடுகள்!
காது கிழிக்கும் இரைச்சல் நடுவே
புல்லாங்குழலின் புன்முறுவல்,
ஒரு கண் வெம்மையில்
மறுகண் வெறுமையில்
குறுகுறுத்த இதயம் இடையிடையே
ஆடுகின்ற குரங்காட்டம்!
மறுத்துப் பேசும் மரபு
மரத்துப் போன மனம்
பூத்து நின்ற நினைவுகளில் பூஞ்சணக்கூடு
சக்கரவேகமே சரித்திரமானதால்
உக்கிரங்கொண்டது உள்ளம்!
மாரியை மறந்து மரம் வாழலாம்
வேரினை வெட்ட முடியுமா?
யாரினைச் சுழற்றி வைக்கும் கூர்மை
இருப்பதால் இந்த
உக்கிப்போன உள்ளத்திலும் இனி
உன்னதப் பூப்பூக்கும்
அதனால்
வசந்தகாலம் வசப்படவில்லையெனக்
கசந்து போகவில்லை!

ந.சத்தியவேந்தன், மானிப்பாய்.


## பேனா நண்பர்கள்



பெயர்: கே.தர்ஷன்,
வயது: 22
முகவரி:
C/O S.W.J.FERNANDO,
8/2 MOSQUE LANE
MOUNTLAVINIA,
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
ஆர்.ஐங்கரன்
வயது: 20
முகவரி:
1ம் பிரிவு மண்டூர்,
பொழுது போக்கு:
சித்திரம் வரைதல்,
கிரிக்கெட், உதை பந்து.



பெயர்:
A.B.SABEULLA,
வயது: 26
முகவரி:
DOHA QATAR,
பொழுது போக்கு:
பத்திரிகை,
வானொலி.

## கனவை விதைத்தவளே!

என் விழிகளிலே தெரிகிறாய்
கனவிலே வந்து என்னுடன்
காதல் கொள்கிறாய்
கடல் அலைபோல் உன்நினைப்பு
என் இரத்தக்குழாய்களில்
என் நிழலிலே உன்னுருவம் தெரிகிறது
எனக்குள் விதைத்து வேர் விட்டு
முளைத்துவிட்ட ஆலமரம் நீ
உன்நினைப்பில் இருந்து விடுபட
நாடினேன் வைத்தியனை
மருந்து இல்லை என்று மறுத்துவிட்டான்
தீயை அணைக்க நீரை
நாடுவது போல் உன்னால்
ஏற்பட்ட காயத்திற்கு உன் பதிலே
மருந்து!

ஆர்.சுதன், பிரான்ஸ்.

## காத்திருக்கும் காதல்

காத்திருந்தாள் ஒரு கண்மணி!
ஆழ்கடல் நடுவே
ஊழித் தீயாய் - அவள்
மனஅலைகளின் மோதல்கள்
விண்ணை வலம்வரும்
வானத்து முழக்கமாய்
அவள் காதுகளில் ஒலிக்கும்
இதயத்துடிப்பின் சத்தங்கள்

குறிஞ்சி மலர்களின்

மேனியில் படிந்திருக்கும்
பனித்துளிகளின் விரிப்பாய்
அவள் முகத்தில் படர்ந்திருக்கும்
வியர்வை மொட்டுக்கள்

ஜப்பானிய தொழில்நுட்பத்து லேபலாய்
அவள் விழியோரத்து மச்சம்
உள்ளத்தில் மட்டும்
ஓரமாய் எட்டிப் பார்க்கும் அச்சம்

சௌந்தர்யமான அவளின்
சின்ன இடையில்
ஆலம் விழுதின் முறுக்காய்
மென்துகிலின் ஊர்வலம்

பிங்கலர் சாரிக்குள்
பின்னல் தெரிந்த போதும்
மின்னலாய் புறப்பட்ட
அவள் விழிக்கணைகள்

காத்திருந்தாள்...
புரியாத வாழ்க்கைப் புத்தகத்தின்
புதுமையானவன் வரவுக்காய்

கடலோரத்து மணல் மேட்டில்
எழுதியளித்த வரிகள்
சொந்தக்காரனுக்காய்
வள்ளத்தின் மீது தன்னுள்ளத்தை
ஏற்றிச் சென்ற மன்மதனுக்காய்.

நாஸீர் எம். இர்ஷாத், தோப்பூர்-03.

## கவனி முன்னேறு நில்

**வி**யாபாரத்தில் லாபத்தை விட சேவைக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். ஆனால் அதே சமயத்தில் சேவை சேவை என்று எண்ணி லாபத்தை மறந்து விடக்கூடாது.

லாபம் கிடைக்காவிட்டால் சேவை செய்ய இயலாது!

சேவை மனத்துடன் திறமையாக வியாபாரம் நடத்தினால் லாபம் தானாகவே வந்து சேரும். சேவை எண்ணத்துடன் லாபம் சம்பாதிப்பது சிறப்பானது.

வியாபாரத்திலே போடப்படும் பணம் வேலை செய்வதற்கு ஒரு கருவி தான். லாபமானது அந்த வேலையின் பயனாகக் கிடைக்கக் கூடியதுதான்.

வியாபாரத்தில் கிடைக்கும் லாபம் மூன்று வழியில் பயன்படும் படியாக அமைவது சிறப்பானது.

வியாபாரத்திற்கு ஒரு பகுதியும், ஊழியர்களுக்கு ஒரு பகுதியும், விற்பனையை ஊக்குவிக்கும் மக்களுக்கு ஒரு பகுதியும் சேர வேண்டும்.

வியாபாரத்தில் கிடைக்கும் லாபத்தில் வாங்குபவர்களுக்கும் பங்கு உள்ளது என்பதை உணர்த்த வேண்டும்.

பயத்துடன் வியாபாரத்தைச் செய்யக் கூடாது. சென்ற காலத்தைப் பற்றி எண்ணி வேதனைப்படக்கூடாது.

நஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து, பயந்து ஒரு செயலை செய்யக் கூடாது. தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் இருக்க வேண்டும்.

இதனைக் கண்டு அஞ்சாமல் நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டு தெளிவாகச் சிந்தித்து, விடா முயற்சியுடனும் தைரியத்துடனும் செயலாற்ற வேண்டும்.

நமக்கு இணையாக போட்டியாக வியாபாரம் செய்பவர்களை அலட்சியம் செய்யாமல் இருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்களை விருந்தினர்களைப் போன்று வரவேற்று உபசரித்து கௌரவப்படுத்தி மகிழ்சி அடையச் செய்தால் விரைவில் போட்டியை சமாளித்து விட முடியும்.

அவர்களுக்கு வேண்டிய பொருளைச் சரியான விலைக்கு விற்று அன்பான முறையில் பேசினால் வாங்குபவர்கள் ஏராளமானவர்களாகிவிடுவார்கள்.

நம்முடைய வியாபாரம் முன்னேறி வருவதைக் கண்டு சிலர் பொறாமைப் படலாம்; சிலர் இடையூறுகள் செய்ய முற்படலாம்.

ஆனால் நாம் இதற்காக கதிகலங்கிப் போய்விடக்கூடாது. திகைத்துப் போய் நிற்கவோ மலைத்துப் போய் நின்று விடவோ, சளைத்துப் போய்விடவோ கூடாது.

அப்பொழுதுதான் நாம் அசையாமல் கம்பீரமாகவும் துணிச்சலுடனும் செயலாற்ற வேண்டும்.

உண்மையுடனும் அன்புடனும் நேர்மை யுடனும் வியாபாரம் செய்ய வேண்டியது நம்முடைய கடமை.

அந்தக் கடமை நமக்குத் தருவது லாபம் மட்டுமல்ல! புகழும் பெருமையும்!

வியாபாரம் வெற்றியின் ஆதாரமாக என்றும் நிலைத்து நிற்க பணிவு, துணிவு கனிவு இருக்க வேண்டும்.

## சேவை தருவது இலாபம்!

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

**இவ்வார சிறப்புக் கவிதையாக, தமிழ் நாட்டின் புதிய தலைமுறைப் பெண் கவிஞரான ப.கல்பனாவின் "பார்வையிலிருந்து சொல்லுக்கு" என்னும் தொகுதியில் இருந்து மூன்று கவிதைகள் தரப்படுகின்றது.**

## சிறப்புக் கவிதை

### கீறல் விழுந்த மாலைக் காலங்கள்

இன்று வர நேரமாகும்
புரிகிற மொழியில்தானே சொன்னேன்
பின் ஏன் வாசலருகே
கால் கடுக்கக் காத்திருக்கிறீர்கள்?

காத்திருக்கும் தோற்றமே நினைவைத் தூர்க்க
நூலகம் வகுப்பறை சாலைகள் முழுக்க
அலைகிறேன் பரிதவித்து

இலையசைவுகளும் பறவையொலிகளும்
மாறும் மேகங்களும்
கடந்து செல்லும் நொடியை நினைவுபடுத்த
எதிலும் ஒன்றாமல் கடிகாரத்தைச் சபிக்கிறேன்

பேருந்து நிலையத்தில்
வேண்டுமென்றே நேரம் கேட்கும் விஷமிகள்
நடுக்கத்தால் பாதங்களில் நசுங்கும் மண்

புத்தகங்களை முறைத்தும்
அற்பமான கேள்விகள் எழுப்பியும்
உள்ளூர நமைச்சலை ஏற்படுத்தும் சக பயணிகள்

நெரிசலுக்கிடையில்
வியர்த்து வதங்கித் தவிக்கையில்
ஆமையாய் நகரும் பேருந்து...

தெருவிளக்குகளின் வெளிச்சத்தில் வீடு சேர்ந்து
மரணதண்டனை பெறப்போகும் கைதிபோல் நிற்க
என் நெஞ்சைக் கீறத் தயாராய்
உங்கள் ஆயுதம்

ஏன் என்னால்
மடியில் கட்டிக்கொண்ட நெருப்பாக
போன பிறவியின் பாவப்பலனாக மட்டுமே
இருக்க முடிகிறது?

பூவாக புன்னகையாக
உங்கள் ஆயுதம் மாறும் காலம்
வராதென்ற நம்பிக்கை உறுதிப்படுகிறது
ஒவ்வொரு நேரங்கழித்து வரும் மாலையிலும்

அபத்தமில்லையா, பெண்ணாக இருப்பது?

ப.கல்பனா.

### ஆட்டோ கிரா:ப் புத்தகம்

ஒரு கணம் குழம்பிப் போனேன்
திடீரென்று நீட்டியபோது

இப்போது எதற்காக இது?
முகவரியை எழுதும்போது
மெல்லிய சோகம் தாக்க
தவறிழைத்தது போலொரு குற்ற உணர்வு...

இவ்வளவு உள்ளங்களை
எப்படி உணராமல் இருந்தேன்
இத்தனை நாட்களும்?

எப்படி சிலரின் வட்டத்துக்குள்ளேயே
சிக்கிக் கிடந்தேன்?

நீங்கள் விளையாட்டாய்க் காட்டிய கோபம்
சில அர்த்தமற்ற பேச்சுகள்
வேண்டுமென்றே கூறிய கிண்டல்கள்
நான் புன்னகைத்தபோது பார்க்காமல்
போனமை...

வருந்தியிருக்கிறேன் இவற்றை எண்ணி

உங்கள் சிரிப்பொலிகளும் காலடியோசைகளும்
பொங்கி வழிந்த காரிடர்கள்...
உங்கள் கவனங்கள் ஒரு முகப்படுத்தப்பட்ட
வகுப்பறைகள்...

இவையே நினைவுச் சின்னமாய்
வரும் காலங்களில்
கிரகித்து கொண்ட தூண்களிடம்
வகுப்பறைகளிடம்தான்
போய் நிற்க வேண்டுமோ

உங்கள் பேச்சுகளை, சிரிப்பொலிகளை
மீண்டும் கேட்க?

அச்சமாயிருக்கிறது நண்பர்களே
நானும் ஒரு நாள் போயாக வேண்டும்
இந்த இனிமைகளைவிட்டு
என்பதை நினைக்கையில்.

ப.கல்பனா.

### பகல் தூக்கத்தின் முடிவில்

இறுதி மூச்சுக்கு முன்வரை
எதையோ சாதிக்கப்
போகிறோமென்று
எதுவுமே செய்யாமல் விட்டத்தை
வெறிக்கும்
உங்களின் தலைக்கனம் தவிர

வேறென்ன எஞ்சியிருக்கிறது
என்னிடம்

சுமந்தது தாலாட்டியது ஊட்டியது
காத்திருந்தது..
எல்லாவற்றிலும்
அம்மாதான் நினைவில் நிற்கிறாள்
குழந்தை முதல் இன்றுவரை

எந்தக் கவலையுற்றுத்
துண்டை உதறித் தோளில் போட்டுப்
போனது போனதுதானே...

வீட்டிலிருக்கும் ஒவ்வொருவரையும்
நெற்றியைச் சுருக்கிக் கொண்டு
மேலும் கீழுமாக ஒரு பார்வை

வாய் திறக்காமலேயே
குறிப்பறிந்து
காலடியில் நிற்க வேண்டும் எல்லாரும்
தினமும் தான் பார்க்கிறோம்
உருவத்தை
மனதில் எந்தச் சுவடுகளும் இன்றி

பின்னிப் பிணைந்திருக்கும்
உறவின் ஆழங்களை உணரத்
தெரியாமல்
எதற்கு வீண் அலட்டல்கள்?

இருட்டறைக்குள் அமர்ந்து
கண்ணீர் கொட்டுகிறேன் மீண்டும்
மீண்டும்....

சிறுவனாக இருந்தபோது கால்
பிடிக்கவும் சுமக்கவும்
பத்து வேலையாள் இருந்திருக்கலாம்
பெரிய தலைவராகக் கூட்டங்கள்
பேசியிருக்கலாம்

ஏன் புரிய மறுக்கிறீர்கள்

உங்கள் உணர்வுகளும்
என்னுடையதும் வேறு வேறு என்பதை.

ப.கல்பனா.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## குழந்தைகளுக்கு மருந்துகொடுக்கும்போது...



குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கும்போது கவனக்குறைவாகப் பெற்றோர் செய்யும் சில தவறுகளும், அவற்றின் விளைவுகளும்...

**மருந்தை உணவுடன் கலந்து கொடுப்பது,**

மருந்து சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைகளுக்கு அதை உணவுடன் கலந்துகொடுப்பது பல பெற்றோரது வழக்கம். சில வகை மருந்துகள், உணவுடன் கலக்கப்படும் போது செயல் திறனை இழப்பதாகத் தெரிவிக்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். எனவே, மருத்துவரைக் கலந்தாலோசித்த பிறகே அப்படிக்கொடுப்பது நல்லது. அப்படியே கொடுப்பதானாலும் முன்கூட்டியே உணவையும், மருந்தையும் கலந்து வைக்காமல் சாப்பிடக்கொடுப்பதற்கு முன் கலக்கவும்.

**நோயெதிர்ப்பு மருந்துகளை விரைவில் நிறுத்துதல்**

உங்கள் குழந்தைக்கு மருத்துவர் பத்து நாட்கள் கொடுக்கச் சொல்லி "ஆண்டிபயாடிக் மருந்துகளைப் பரிந்துரைக்கலாம். குழந்தையின் உடல்நலம் தேறுவது தெரிந்ததும், ஐந்து அல்லது ஆறு நாட்களிலேயே மருந்துகளை நிறுத்தக்கூடாது. இதனால், அரைகுறையாகத் தேறிய குழந்தையின் உடல்நிலை இன்னும் மோசமாகலாம்.

**தேவைப்படாத போது மருந்து கொடுத்தல்**

சாதாரண தும்மல், இருமல் போன்றவற்றுக்கெல்லாம் மருந்து மாத்திரைகளைக் கொடுத்து குழந்தைகளைப் பழக்க வேண்டியதில்லை. நோய் தீவிரமாகிவிடுமோ என்ற பயத்தில் மருந்துகளைக் கொடுப்பது பக்க விளைவுகளையே ஏற்படுத்தும்.

**பழைய மருந்துகளைக் கொடுத்தல்**

போனமுறை உங்கள் குழந்தைக்கு ஏற்பட்ட அதே பாதிப்பு இந்த முறையும் ஏற்படலாம். அறிகுறிகள் ஒரே மாதிரியாக இருப்பதைப் பார்த்து போனமுறை கொடுத்த அதே மருந்து மாத்திரைகளைக் கொடுப்பது ஆபத்தானது. அதே போல காலாவதியான மருந்து மாத்திரைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.

**பெரியவர்களுக்கான மருந்தைக் கொடுத்தல்**

பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் பெரியவர்களது மருந்து மாத்திரைகளின் அளவைக் குறைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்க நினைப்பதும் பயங்கரமானது. மருந்தின் சக்தியை எதிர்கொள்ள முடியாமல் அது குழந்தையின் உயிருக்கே ஆபத்தாக அமையலாம்.

**மருந்துகளின் மேலிருக்கும் லேபிள்களைப் படிக்காமை**

மருத்துவர் பரிந்துரைத்த பட்டியலில் உள்ளவையும, கடையில் வாங்கியவையும் ஒரே மருந்துதானா என்பதை முதலில் சரிபார்க்க வேண்டும். பிறகு அதன் லேபிளின் மீதுள்ள எச்சரிக்கைகளை, கொடுக்கும் முறைகளைப் படிக்க வேண்டும்.

**ஒரு குழந்தையின் மருந்தையே எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுத்தல்**

ஒரு குழந்தைக்கு ஏற்பட்ட உடல் நலக் கோளாறு, உங்கள் இன்னொரு குழந்தைக்கும் ஏற்படும் போது முதல் குழந்தைக்குக் கொடுத்த மருந்துகளையே கொடுக்கக்கூடாது. அறிகுறிகள் ஒரே மாதிரித் தென்பட்டாலும், வயது, எடை, உடல்கூறு ஆகியவை குழந்தைக்குக் குழந்தை வேறுபடும். எனவே, ஒவ்வொரு முறையும் மருத்துவரின் ஆலோசனைக்குப் பிறகே குழந்தைகளுக்கு மருத்துவம் செய்யவும்.


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் M

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13- 04-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


### இந்த வாரம் யாருக்கு சல்வார்? வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

திருமதி ஏகாம்பரநாதன் உமாதேவி,
07, கோணேசபுரம், உவர்மலை, திருமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




அனிதா காலை சாந்தோம் வீட்டுக்குத் திரும்ப வந்தபோது வீடு தலைகீழாக இருந்தது. அவளைக் கண்டதும், அங்கே தனியே காகிதங்களைப் பொறுமையாகப் பிரித்துப் படித்துக்கொண்டிருந்த இளம் சி.பி.ஐ அதிகாரி, "உங்களுக்கு மாத்திக்கிறதுக்கு டிரஸ் ஏதாவது எடுத்துக்கணும்னா அதுக்கு மட்டும் அனுமதிக்கிறோம். ஆனா, லட்சுமணன், வைரவன் இவங்க ரெண்டு பேருடைய ஆபீஸ் அறைகளுக்குப் போக அனுமதி இல்லை. எல்லா டாக்குமெண்ட்ஸையும் லிஸ்ட் பண்ணிப் பட்டியல் போட்டுக்கிட்டிருக்கோம்."

"அவர் என்ன குற்றம் செய்தார்?"

"மோசடி" என்றார் சுருக்கமாக.

அனிதா, சரோஜாம்மாவின் அறைக்குள் சென்ற போது அங்கிருந்த புத்தக அலமாரியில், சரோஜா குறிப்பிட்ட How Things Work என்கிற புத்தகம் இருந்தது. அதன் உள்ளே பக்கங்கள் சில தோண்டப்பட்டு ஒரு சாவி பதிக்கப்பட்டிருந்தது.

அனிதா அந்தச் சாவியை எடுத்துக்கொண்டு வேணியிடம் போய் "அவுட் ஹவுஸ்ல அம்மா லாக்கர் இருக்குதுன்னாங்க. உனக்குத் தெரியுமா வேணி?"

"தெரியும்மா... எந்த ரூம்னு தெரியும்... ஆனா, நான் உள்ளாற போனதில்லை..."

"அங்க என்னைக் கூட்டிட்டுப் போவியா வேணி?"

அனிதாவை அழைத்துச் செல்லும் போது, "அம்மா... ஐயாவுக்கு ஏதாவது ஆபத்துங்களா?" என்று கேட்ட வேணியின் கண்களில் நீர் முட்டியது.

"நாளைக்குத் தான் சொல்வாங்களாம்."

"சின்னய்யாவுக்கு?"

"அவர் எங்க இருக்கார்னே தெரியலை வேணி" என்றாள் அனிதா வருத்தத்துடன்.

"பாவம்... உங்களுக்குத்தாம்மா ரொம்ப மனக்கஷ்டம்...!"

"எல்லோருக்கும் தான் வேணி... இந்த மாதிரி இதுக்கு முன்னாடி இந்த வீட்டில ஆயிருக்கா? போலீஸ் வந்து எல்லாத்தையும் கலைச்சுப்போட்டு..."

"இல்லைம்மா... ஆனதே இல்லைம்மா... அதான் எல்லோருக்குமே ஆச்சரியம். போலீஸ்காரங்க வந்தா என்ன மருவாதியா நடந்துக்குவாங்க தெரியுமா? உள்ளே நுழைஞ்சதே இல்லைங்க. பெரிய பெரிய போலீஸ் அதிகாரிங்க எல்லோரும் லட்சுமணன் ஐயான்னா அவ்வளவு மருவாதி..." என்றாள் வேணி.

அந்த அறையில் கண்டாமுண்டா சாமான்கள் போடப்பட்டிருந்தன. இவற்றுக்கு நடுவே இருந்த அந்த சாக்லெட்கலர் பீரோவுக்கு அந்தச் சாவி பொருந்தியது. பீரோவினுள் இருந்த சின்ன லாக்கருக்கு சாவி அதன் வாயிலேயே இருந்தது. அதைத் திறந்தாள். ஏகப்பட்ட காகிதங்கள் இருந்தன. அச்சடித்த காகிதங்கள், பத்திரங்கள், கடிதங்கள், டைரி... மற்றொரு சாவிக்கொத்து இருந்தது.

அனிதா அவற்றை எடுத்து ஒரு துணிப்பையில் போட்டுக்கொண்டாள். அதன் மேல் புடைவை, துணிமணிகளை வைத்துக்கொண்டாள்.

அனிதா, வீட்டை விட்டு வெளியே போகும் போது வாசலில் காரை நிறுத்தி போலீஸ்காரர்கள் "என்னம்மா எடுத்துகிட்டுப் போறீங்க?" என்று கேட்டனர்.

"என் துணிமணிகள்" என்றாள்.

"காட்டுங்க..." என்று அவர்கள் கேட்ட போது, அந்த சி.பி.ஐ அதிகாரி வந்து "வுட்ருப்பா" என்றார். அனிதாவுக்குச் சற்று வியர்த்துவிட்டது. அனிதா லஸ்முனையைத் தாண்டும் போது "வைரவன் கைது" என்று பெரிய எழுத்தில் செய்தித்தாளின் போஸ்டர் தொங்குவதைப் பார்த்தாள்.

மகாதேவன், ஜிம்பு, சீதாராமன், அம்மா யாவரும் வைரவன் வீட்டு விவகாரம் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்திருக்க வேண்டும். அனிதா வந்ததும் சட்டென்று பேச்சை நிறுத்தி விட்டார்கள்.

"அனிதா... எங்கம்மா இங்க வந்த?"

"பேப்பர் பாத்தியோடி கண்ணு... என்னம்மா ஆச்சு?" ஆளாளுக்கு அனிதாவைக் கேள்வி மேல் கேள்வி கேட்டனர்.

"ராத்திரி நீங்க ரெண்டு பேரும் ஜப்பான் புறப்பட்டுப் போயிட்டதா சொன்னாளே?" மகாதேவன் கேட்டார்.

"போகலைப்பா... பாதில போலீஸ் வந்து தடுத்துட்டா..."

"இப்போ வைரவன் எங்கே?"

"எங்கையோ அழைச்சுண்டு போயிருக்கா..."

"எல்லாம் சரியா போயிடும்மா. கவலைப்படாதே... நல்ல லாயரா பார்த்து...

"அம்மா" என்று கமலத்தின் தோள் மேல் முகம் பதித்து "எனக்கு ஒண்ணுமே புரியலைம்மா... நடக்கறது ஏதும் புரியலைம்மா. அந்த வீடு புரியலை. அந்த வீட்டு மனுஷா புரியலை" என்று அழுதாள் அனிதா. அம்மா அனிதாவின் முதுகைத் தடவிக் கொடுத்து சமாதானப்படுத்தி அறைக்கு அழைத்துச் செல்ல...

"செக்யூரிட்டி ஸ்காம்ல எவ்வளவு பேர் மாட்டிண்டிருக்கா தெரியுமோ? அதில வைரு சார் மாதிரி அப்பாவி ஆசாமிகளைப் பிடிச்சுக் கொடுமை பண்றாங்க. அதான் சோகம்" என்ற ஜிம்பு,

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**



"எங்க அத்தனை கம்பனியையும் ரொம்ப க்ளீன் தெரியுமோல்லியோ... பொறாமைக்காரங்க மொட்டை பெட்டிஷன் எழுதிப் போட்டுடறாங்க... உடனே சி.பி.ஐ க்காரங்களும் கண்ட மேனிக்கு அரஸ்ட் பண்ணித்தள்ளறாங்க... அதும் "தடா" வேற இருக்கா... பவர்ஃபுல்" என்றான்.

"இந்தப் பையை எடுத்து பத்திரமா வை" என்று சீதாராமனிடம் கொடுத்தாள் அனிதா.

படுக்கையில் சுகந்தி வந்து உட்கார்ந்து கொண்டு "பேப்பர்ல என்னென்னவோ மோசடின்னெல்லாம் போட்டிருக்கேடி அனிதா? எனக்கு வயத்தை பிசையறதே... உங்க மாமனாருக்கு ஹார்ட் அட்டாக் வந்துடுத்தாமே?"

"ஆமாம்... ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணியிருக்கா. அம்மா.. சூடா ஒரு கப் காபி கொடும்மா.." அனிதா கேட்டாள்.

ஜிம்பு "அதெல்லாம் கவலைப்படாதே. எல்லாமே பொய்குற்றச்சாட்டுக்கள்... இப்பவே பாம்பேலேருந்து காலம்பற ஃப்ளைட் புடிச்சுப் பெரிய வக்கீல் வாராராம். சாயங்காலத்துக்குள்ள வைரவன் ரிலீஸ் ஆயிடுவார்... பார்த்துக்க.." என்றான்.

"அது அத்தனை சுலபமில்லை ஜிம்பு. சி.பி.ஐ பொறுப்புல இருக்கிற விஷயம் இது... அவங்க தரப்புல, எல்லாத்துக்கும் பெப்பேன்னுடுவாங்க" என்றார் சுகந்தியின் கணவர் ராஜாராம்.

"ஜெத்மலானி, வேணுகோபால் எல்லோரும் வாராங்க... தெரியுமோ அத்திம்பேரே?"

"ஐயோ... என்னைத் தனியா விடுங்களேன்" என்றாள் அனிதா.

சீதா, "சொல்றேன்னு கோவிச்சுக்காதே அனிதா... நீ கொடுத்த பேப்பர்ஸ் எல்லாம் ரொம்ப முக்கியமானது போல இருக்கு. இதை வீட்டுல வெச்சுக்கணுமா? இல்ல, லாக்கர்ல கீக்கர்ல வெக்கணுமா? வைரவன் என்ன சொன்னார்?"

"அவர் ஏதும் சொல்லலை...மாமியார் தான் எடுத்துண்டு போய் எங்கயாவது பத்திரமா வெச்சுக்கச் சொன்னார்..."

"பார்த்தா சென்ஸிட்டிவ் டாகுமெண்ட்ஸ் போல் இருக்கு. எதுக்கும் நான் பார்த்துக்கறேன்" என்றான் சீதா. அவன் தான் ஏதும் பதற்றப்படாமல் ஏதும் அபத்தமாகப் பேசாமல் இருந்தான். அவன் அனிதாவைப் பார்த்த பார்வையில் அனுதாபம் இருந்தது.

மத்யானம் வரை ஏதும் தகவல் வரவில்லை. ராத்தூக்கமில்லாததால் அனிதா குளிக்காமல் சாப்பிடாமல் அப்படியே தூங்கி இரண்டு மணிக்கு எழுந்தாள்.

காலையா, மாலையா என்று குழப்பமாக இருந்தது. ஜன்னலைத் திறந்த போது, அந்த சி.பி.ஐ அதிகாரி "இந்த வீடு தானா.." என்று விசாரித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

கொஞ்சநேரத்தில், "அனிதா... அந்த சி.பி.ஐ ஆபீஸர் உன்னோட பேசணுமாம். அப்புறம் வரச் சொல்லட்டுமா?" மகாதேவன் கேட்க,

"இல்லை... இதோ வரேன்" என்று புடவை மாற்றிக்கொண்டு, அழிந்த பொட்டை மறுபடி இட்டுக்கொண்டு ஹாலுக்குள் வந்தாள் அனிதா.

"மிஸஸ் வைரவன்! உங்க கிட்ட சரோஜாம்மாவோ, லட்சுமணனோ முக்கிமான டாகுமெண்ட்ஸ் ஏதும் கொடுத்தாங்களா?"

"டாகுமெண்ட்டா... அப்படின்னா?" அனிதா கேட்டாள்.

"ஏதாவது காகிதம்... நீங்க வீட்டை விட்டு வெளியே வரப்ப பைல துணிமணிகள் தானே எடுத்துக்கிட்டு வந்தீங்க?"


"ஆமாம்."

"உங்க சாந்தோம் வீட்ல இருக்கிறதா நாங்க நம்பின சில முக்கியமான தடயங்களைக் காணோம். அதுக்காகத்தான் இங்க வந்தோம். அந்தப் பையைக் காட்டுங்க..."

[அனிதா வருவாள்...]



தேனை மறந்திருக்கும் வண்டும்–ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும்–இந்த
வைய முழுதுமில்லை தோழி!
–சுப்பிரமணிய பாரதியார்–



## பாப்பா முரசு சிறுகதை

# திருந்திய உள்ளம்

**டிங்..**டிங்..டிங் என்ற பள்ளியின் மணியோசை கேட்டு அங்கங்கே விளையாடிக்கொண்டிருந்த மாணவ, மாணவிகள் பிரார்த்தனைக் கூடத்திற்கு ஓடிவந்தனர். ஆசிரியர்களும் வகுப்புத் தலைவர்களும் மாணவர்களை ஒழுங்குபடுத்தினர். பத்தாம் வகுப்பு மாணவர்களை ஒழுங்கு செய்யும் பணியை வகுப்புத் தலைவன் சரவணன் செய்தான்.

ஒவ்வொருவரையும் வரிசைப்படுத்தும் போது வரிசையை விட்டு ஒழுங்கீனமாக நின்ற ராமலிங்கத்தை, “ஏய்! ராமு கொஞ்சம் வரிசையா நில்லு” என்று அவன் கையால் ராமலிங்கத்தை வரிசையில் தள்ளினான். உடனே “டேய்! ஏண்டா எம்மேல கையை வைச்ச கீழ்ஜாதிப் பயலே!” என்று சத்தம் வராமல் அதே சமயம் சரவணனுக்குக் கேட்குமாறு ஏசினான். இதனைச் சற்றும் எதிர்பாராத சரவணன் திடுக்கிட்டு நின்றான். ஆராதனை மணியடிக்கவே வரிசையில் நின்றான். இருப்பினும் மனம் ஆராதனையில் லயிக்கவில்லை.

ஆங்கில பாடத்தின் மனப்பாடல் ஒன்றை நடத்தினார் ஆசிரியர் குணா. ஆங்கிலம் உட்பட அனைத்துப் பாடங்களிலும் ஆர்வமும் விரைவில் புரிந்து கொள்ளும் தன்மையும் கொண்ட சரவணனை வகுப்புத்தலைவராக்கியதே ஆசிரியர் குணா தான். பாடத்தை முடித்த ஆசிரியர் “சரவணா நீ தேர்ச்சி அட்டையை எல்லாம் வாங்கிட்டியா?” என்றார். “எல்லோரும் கொடுத்திட்டாங்க சார். ராமலிங்கம் மட்டும் உங்ககிட்ட தர்றேன்னு சொல்லிட்டான் சார்” என்றான் தாழ்ந்த குரலில்.



“ராமலிங்கம்! நீ ஏன் அட்டையைக் கொடுக்கலை?” அதட்டும் தொனியில் ஆசிரியர் கேட்டபோது “மறந்துவந்துட்டேன் சார்! நாளைக்குக் கண்டிப்பா எடுத்துட்டு வர்றேன் சார்” என்றான். “சரி... சரி... நாளைக்கு மறந்துடாதே” என்றார் ஆசிரியர்.

சரவணனுக்கு மட்டும் புரியும் ராமலிங்கம் தன்னிடமிருந்து எதையும் பெறவோ கொடுக்கவோ மாட்டான். ஏனெனில், சரவணன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன், ஏழை. ராமலிங்கம் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த பணக்காரன். தேர்ச்சி அட்டையை சரவணன் தொடுவது கூடப் பாவம் என நினைப்பவன்.

பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான கட்டணம் கட்ட வேண்டும் எனத் தகவல் பலகை தகவல் சொன்னது. சரவணன் தன் வகுப்பில் கட்டணம் வசூலிக்கப் பணிக்கப்பட்டிருந்தான். கடைசி நாள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அனைவரும் சரவணனிடம் பணம் கட்டினர். தினமும் காலையில் அனைவரிடமும் கட்டணத் தொகை கட்டக் கடைசி நாளைக் கூறி வசூலித்தான். வழக்கம் போலவே ராமலிங்கம் பணம் கட்டவில்லை. அவனிடம் பையில் பணமிருந்தும் சரவணனிடம் கொடுக்கக்கூடாது என்பதால் பணம் கட்டவில்லை. பெப்பிரவரி 17 பணம் கட்டக் கடைசி நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது.

பெப்ரவரி 14ம் திகதிவரை ராமலிங்கம் பணம் கட்டவில்லை.அன்றிலிருந்து பள்ளிக் கூடம் வரவில்லை. சரவணனுக்கு ஒரே குழப்பம் இருப்பினும், ராமலிங்கத்திற்குப் பணம் கட்டி கணக்குகளை ஆசிரியரிடம் ஒப்படைத்தான். பெப்ரவரி 18ம் திகதி ராமலிங்கம் வீட்டிலிருந்து ஒருவர் வந்து அவன் டைபாய்டு காய்ச்சலில் இருப்பதால் வரவில்லை எனக் கூறிச்சென்றார்.

சுமார் 15 நாள் விடுமுறைக்குப் பின் ராமு தேய்ந்து போய் பள்ளிக்கு வந்தான். ராமு உடம்பு எப்படியிருக்கு என்றான் சரவணன். ஆனால், சரவணன் கைகளை ராமு பற்றிக் கொண்டு “ஸாரிடா சரவணன்! உன்னை எவ்வளவு கீழ்தரமா நான் திட்டியதையும் பொருட்படுத்தாமல் பரீட்சைக்குப் பணம் கட்டி எனக்குச் சரியான பாடம் கற்பிச்சுட்டே. ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட மனிதநேயம். அதை உணர்ந்த நீதாண்டா மேல் ஜாதி. நான் தான் கீழ் ஜாதி” என்றான் சரவணனை அணைத்தவாறே! ◻

# விடுகதைகளும் விடைகளும்

01. காற்றைக் குடிப்பான், காற்றாலேயே பறப்பான். அவன் யார்?
02. ஒட்டுத் திண்ணையில் பட்டுக் காயுது. அது என்ன?
03. எரிப்பான், ஆனால் எரியாதவன். அவன் யார்?
04. உயிரில்லாப் பறவை, ஊர்ஊராகப் பறக்கிறது. அது என்ன?
05. தண்ணீரில் நீந்தி வருவான், தரையில் தாண்டி வருவான். அவன் யார்?
06. விண்ணின் வீதியிலே விளையாடிச்சிரிப்பாள், மண்ணில் மாந்தரின் கண்ணையும் பறிப்பாள். அவள் யார்?
07. கோடையிலே ஆடி வரும், வாடையில் முடங்கிவிடும். அது என்ன?
08. என்னைச் சுற்றி ஒரு கோட்டை, நான் கிட்டப் போனால் அது எட்டப்போகும். அது என்ன?
09. ஒட்டுக்குள் வீட்டுக்குள் ஒருவாய் தண்ணீர். அது என்ன?
10. உடல் இல்லாமல் ஊரெல்லாம் திரிவான். அவன் யார்?

### விடைகள்

01. பலூன் 02. மூக்குத்தி
03. சூரியன் 04. விமானம்
05. தவளை 06. மின்னல்
07. மின்விசிறி 08. வானம்
09. தேங்காய் 10. புகை

# நாக்கும் பிராணிகளும்!



**ம**னிதனின் நாக்கு சுவை அறியவும்,உணவை விழுங்கவும்,பேசுவதற்கும் பயன்படுகிறது. ஆனால், விலங்குகளின் நாக்கு எப்படி, எதற்குப் பயன்படுகிறது தெரியுமா?

தவளை, பல்லி போன்றவைகளின் நாக்கு இரையைப் பிடிக்கப்பயன்படுகிறது. பல்லியின் நாக்கு நீளமானது. அதை மடக்கி தன் வாயினுள் வைத்திருக்கும் பல்லி, இரையாகும் பூச்சிகளைக் கண்டதும் தன் நாக்கை நீட்டி இரையைப் பிடித்துச் சாப்பிட்டுவிடும்.

எறும்பு தின்னியின் நாக்கு நீளமாகவும் பசையுடனும் இருக்கும். கறையான் புற்றில் தன் நீளமான நாக்கை விட்டுத் துழாவி புற்றிலிருக்கும் எறும்புகளை பசையால் ஒட்டிக்கொள்ளும்படி செய்து எறும்புகளைச் சாப்பிட்டுவிடும்.

பாம்பு தன் நாக்கை மேப்பம் பிடிக்கப்பயன்படுத்துகிறது. அப்போது பாம்பு அடிக்கடி தன் நாக்கை உள்ளேயும் வெளியேயும் இழுக்கும். அப்போது சுற்றுப்புறப் பொருட்களின் வாசனை பாம்பினள் வாயின் மேற்பகுதியில் அமைந்துள்ள ஜேக்கப் சென்ஸ் என்ற உறுப்பை நாக்கின் மூலம் அடைய பாம்பு மோப்பம் பிடித்துவிடும்.

ஆபிரிக்காவில் காணப்படும் ஒகாபி என்ற ஒட்டகச்சிவிங்கி போன்ற ஒரு பிராணி தன்னுடைய நீண்ட நாக்கினால் நக்கி அதன் முழு உடம்பையும் சுத்தம் செய்துவிடுமாம். தன் காதின் உட்புற அழுக்கைக் கூட அப்படி எடுத்துவிடுமாம் ஒகாபி.

உலகிலேயே அதிக எடையுள்ள நாக்கு உள்ள பிராணி திமிங்கிலமாகும். அதன் நாக்கின் எடை மட்டும் ஒரு யானையின் எடைக்குச் சமமாக இருக்குமாம். ■

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **13.03.2002.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 440**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 438


பரிசுக்குரியவர்:
செல்வராசா ரிஸ்காந்,
அட்டப்பள்ளம், நிந்தவூர்–10.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **கா.மேனகா தர்ஷினி**<br>48/14, தெனியாய வீதி, இறக்குவானை. | **எஸ்.ரஜீவ்காந்,**<br>முதலாவது பெய்லி குறுக்குத்தெரு, மட்டக்களப்பு. |
| **ஜெரிசன் வெல்ற**<br>மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. | **திவ்யா மோகன்ராஜ்**<br>தபாற்கந்தோர் நிலையவீதி,மன்னார். |
| **சாம்பவி சந்திரகுருக்கள்**<br>தமிழ் மகளிர் மகாவித்தியாலயம், பதுளை. | **மொகமட் பாஸ்**<br>கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு-15. |
| **ஜி. மிகல்**<br>வொகன் எஸ்டேட், இட்டயோட பிரிவு,மதுகம. | **பாதிமா நிஷ்மா நஜீம்**<br>இரத்தினபுரி வீதி, பலாங்கொடை. |
| **இரா.விஷாலினி**<br>க/ இந்து தேசிய கல்லூரி,புசல்லாவை. | **முஹம்மத் றபீத் நளீம்**<br>முதலாம் ஒழுங்கை, ஸ்பீல் வீதி, புத்தளம். |

# இந்த வாரப் புதிர்

1 முதல் 12 வரையுள்ள எண்களை இந்த வட்டங்களுக்குள் நிரப்பி, எந்த நேர்வரிசையிலும் கூட்டினாலும், கூட்டுத்தொகை 26 வரும்படி செய்ய வேண்டும். உங்கள் உதவிக்கு 1,3 மற்றும் 9 ஆகிய எண்கள் வட்டங்களுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. முடிந்தவர்களும், முடியாதவர்களும் வரும்வாரம் வரை பொறுத்திருங்கள். விடையை ஒப்பிடுவதற்கும், தெரிந்துகொள்வதற்கும்.




## சென்றவாரப் புதிருக்கான விடை



முதலாவது படத்தில் காட்டப்பட்டது போல் அட்டையை வெட்டியெடுத்து இரண்டாவது படத்தில் காட்டப்பட்டிருப்பது போல் சதுரத்தை அமைக்கவேண்டும்.

# சிம்பிள் சயின்ஸ்

**என்சைம் என்றால் என்ன? நம் உடலில் அதன் பங்கு என்ன?**

உடலில் வேகமாக ரசாயன மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு பொருள் தான் என்சைம். ஆனால், அது எந்த மாற்றத்தையும் அடையாது. உதாரணமாக காரில் புகையை வெளியேற்றும் பணியில் கேட்டலிஸ்ட் இடம் பெற்றுள்ளது. இந்த கேட்டலிஸ்ட் தான் சுற்றுப்புற சூழலை கெடுக்கும் காற்றை சுத்தம் செய்து ஆபத்தில்லாத புகையாக வெளியேற்றுகிறது.

நம் உடலிலும் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான ரசாயன மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அதனை செய்யும் கேட்டலிஸ்ட் தான் என்சைம். நம் உடலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வகை என்சைம்கள் உள்ளன. ●

# மனிதநேயம்

**மா**ர்கழி மாதப் பெரும்மழை இடைவிடாமல் பெய்துகொண்டிருந்தது. வரட்சியின் பிடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்த பயிர்களெல்லாம் இப்போதுதான் உயிர் பெற்றுவிடத் தொடங்கியிருக்கின்றன.

பொன்னம்பலம் வயலுக்குள் நின்றபடி புறுபுறுத்துக் கொண்டிருந்தார். அவர் கண்கள் பக்கத்து வயற்காரன் சுந்தரத்தையே .தேடிக்கொண்டிருந்தன. அவர் தேடலுக்கு இரை கிடைத்தாற்போல் சுந்தரமும் சற்றுத் தொலைவிலேயே தென்பட்டான். "அடே... உன்ர வயல் தண்ணியெல்லாம் என்ர வயலுக்குள்ள வெட்டி விட்டிருக்கிறாய். யாரிட்டக் கேட்டு இதைச் செஞ்சனி? உன்ர வேளாண்மை நல்லாயிருக்கோணும், என்ரது சாக வேணுமா? சுந்தரம் உன்னைத் தான் சொல்லுறன்... தண்ணிய உடனே மறிச்சுக்கட்டு. இல்லாட்டால் மேற்குப் பக்கத்தால வழியை எடுத்துத் தண்ணிய அனுப்பு." பொன்னம்பலம் வேட்டியை மடிச்சு முழங்காலுக்கு மேல் கட்டிக் கொண்டு சத்தம் போட்டார்.



அ.கோகுலதீபன்-கல்முனை

களை பிடுங்கிக்கொண்டிருந்த சுந்தரம் அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே விறுவிறுவென நடந்து அவருக்கு எதிரில் போய் நின்று கொண்டான். இஞ்ச பாருங்க மேற்கால தண்ணிய அனுப்புறதெண்டால் வாய்க்கால் எவ்வளவு தூரத்திற்கு வெட்ட வேணுமெண்டு உங்களுக்கே நல்லாத் தெரியும். அதோட... பக்கத்து வயல்காரன் அந்த நிலத்தை விட்டுக் கொடுப்பானா? நீங்களும் நானும் ஒரே ஊர்க்காரன்கள். அதால நீங்க தான் கொஞ்சம் பொறுக்க வேணும்" என ஆறுதலாகக் கேட்டுக்கொண்டான்.

"அதுக்காக என்ர விளைச்சல் அழியவேணுமா? எனக்கு உந்தக் கதை பேச்செல்லாம் விட்டிட்டு தண்ணிய மறிச்சுவிடு." பொன்னம்பலம் விட்டுக் கொடுப்பதாக இல்லை. உங்கட வரம்பின் பின்புறத்தை வெட்டிவிட்டிட்டால் தண்ணியெல்லாம் ஆத்துக்குள்ள ஓடிடுமே! அப்பிடித் தானே போன வருஷமெல்லாம் செஞ்சு வந்தம். இப்ப மட்டும் ஏன் நீங்க சண்டைக்கு வாறியள்? என்ர வயல் நல்லாவிளைஞ்சிருக்கெண்டு உங்களுக்குப் பொறாமை. கடவுள் நல்ல மனசிருக்கிறவங்களுக்குத் தான் விளைச்சலைக் கொடுப்பாரு. நீங்க இருந்து பாருங்க" என்று சுந்தரம் சொல்லிக்கொண்டே போன போக்கில் மண்வெட்டியை எடுத்து வரம்பைக் கட்டித் தண்ணீரை மறிச்சுவிடத் தொடங்கினான்.

பொன்னம்பலம் மேற்கொண்டு எதுவும் பேச விரும்பாதவராக ஒரு ஏளனச் சிரிப்போடு தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக்கொண்டு திரும்பிப்போனார். அதிஷ்டவசமாக அன்றைய பிரச்சனை வாய்ப்பேச்சோடு மட்டுமே முடிந்துபோனது. பொன்னம்பலத்தார் ஊரிலுள்ள பெரியவர்களில் ஒருவரென்றாலும், இப்படியான பிரச்சனைகளில் ஈடுபடுவதால் அவரது செல்வாக்குக் குறைந்துகொண்டே போகின்றது. காசு, பணம் எவ்வளவு தான் இருந்தாலும் மரியாதையை மற்றவர்களுக்குக் கொடுத்துத் தான் அதை வாங்க முடியும் என்பது பலருக்குத் தெரிவதில்லை. அந்த வகையில் பொன்னம்பலத்தாரும் ஒன்றும் விதிவிலக்கானவர் அல்ல.

ஒரு வாரம் போயிருக்கும் சுந்தரம் வழக்கம் போலவே அதிகாலையிலேயே வயலுக்குள் நுழைந்தபோது அங்கிருந்து முனகல் ஒலியொன்று கேட்டவண்ணமிருந்தது. சுந்தரம் ஓடிப் போய்ப் பார்த்தான். அங்கே, பொன்னம்பலம் இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தார். அவர் தன்னுடன் சண்டை போட்டவர் என்பதை விட மனிதநேயம் மட்டுமே அவன் உடம்பெல்லாம் ஊற்றெடுத்தது. "பொன்னம்பலம் அண்ணே என்ன நடந்தது?" அவரின் கையை ஆதரவோடு பற்றிக்கொண்டு கேட்டான். "சுந்தரம்... மண்வெட்டியால வரம்புகட்டும் போது அது தவறிக் காலில பட்டிட்டுது" பொன்னம்பலத்தாரின் வேதனை அவர் படும் அவஸ்தையிலேயே புரிந்தது.

"என்ன அண்ணே! பார்த்து வெட்டக் கூடாதா? வயல்காரன் செய்ய வேண்டிய வேலையெல்லாம் நீங்க ஏன் செய்தீங்க... நான் கண்டதால நல்லதாப் போச்சு... என்ர தோளைக் கட்டிப் புடியுங்க... ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறன்" என்றவாறு அவரை வாரித் தூக்கிக்கொண்டு நகர்ந்தான்.

பொன்னம்பலம் சுந்தரத்தின் கன்னத்தை அன்பாகத் தடவிக் கொண்டு அவன் கண்களை ஏறிட்டார். "சுந்தரம் காசு, வயல், சொத்து இதையெல்லாம் விட மனுசன் தான் முக்கியமெண்டு நீ இப்ப கண்ணைத் துறந்து காட்டிட்டா... உனக்கு அன்றைக்கு நான் செஞ்ச வேலையெல்லாத்தையும் மன்னிச்சிடு சுந்தரம்... உன்னைப் போல நல்ல குணம் யாருக்குமேயிருக்காது... என்ர கால்வலி கூட இப்போது எனக்குப் பெரிசாப்படல்லை தெரியுமா? ...ஆனால், உனக்குச் செஞ்சது தான் துரோகமெண்டு நெஞ்சுக்குள்ள வலிக்குது" பொன்னம்பலம் கண்களால் மட்டுமல்ல, இதயத்தாலும் அழுது கொண்டார்.

"பிழைவிடுவது மனித இயல்பு. அதை எப்பொழுது அவன் உணர்ந்து கொள்கின்றானோ அன்றே அவன் திருந்திவிடுகின்றான்" தத்துவம் ஒன்று சுந்தரத்தின் மனசுக்குள் வந்து போனது.

# இப்படிக்குத் தென்றல்.....

**ஆ**பீஸ் முடிவதற்கு இன்னும் அரைமணி நேரமிருந்தது. அப்பொழுதே சாடையாகத் தலையிடி ஆரம்பித்திருந்தது. வீட்டிற்குப் போனதும் முதல் வேலையாகப் பனடோல் போடவேண்டும் என நினைத்தேன்.வீட்டில் இன்னொரு தலையிடி இருக்கிறது என எனக்கு அப்போது தெரியாது.

நான் வீட்டிற்குப் போகும்போது வழியில் பழைய நண்பன் ஒருவன் சந்தித்தான். அவனோடு சிறிது நேரம் கதைத்த பின்னர் வீட்டிற்குப் போனேன். வீட்டை அண்மிக்க அண்மிக்க சண்டைச்சத்தம் எனக்குக் கேட்டது. இதென்ன புதுத்தலைவலியாக இருக்கின்றது என நினைத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைய, நான் கண்ட காட்சி இங்கே ஜமுனாவும், அம்மாவும் வாய்ச்சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் அம்மா, "வாடா கஜன்... உன்ரை புதுமனுசியை என்னெண்டு கேள். வந்து ஒரு மாதம் கூட ஆகேல்லை, அதுக்குள்ள அவளுக்குத் திமிர்" என்று சொல்லவும், ஜமுனா இடைமறித்து "என்ன எனக்குத் திமிர்? எனக்கு இட்லி அவிக்கத் தெரியாது. அதுக்குப் போய் என்னைப் பேசிறா..." என என்னிடம் முறையிட்டாள். அதற்குள் அம்மா முணுமுணுத்து "தெரியாதெண்டால் செய்து பழகுறது தானே! எல்லோரும் பழகிக்கொண்டே பிறக்கினம்?" என்றாள். உடனே ஜமுனா பதிலுக்கு "பாருங்கோ... இப்படித் தான் என்னைக் குத்திக்காட்டுகிறா!" என்றாள். நான் மௌனமாக எல்லாவறறையும் கேட்டுக்கொண்டிருந்தேன். அம்மாவும் அவளை விடுவதாக இல்லை. "பிழை விட்டிட்டம். முதலே எல்லாவற்றையும் அறிந்து போட்டுத் தான் செய்திருக்க வேணும். எல்லாம் எங்கடை தலைவிதி" எனவும், ஜமுனா, "அது தானே சரியாகக் கதைக் காமல் விட்டிட்டுப் பிறகு குத்திக்குத்திக் காட்டுறது" என்றாள்.

இப்படியாகச் சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது எனக்கு முன்னாலேயே. அம்மா ஒரு கதை சொல்லுவதும், ஜமுனா மறுகதை சொல்லுவதுமாக இருந்தார்கள். எனக்குத் தலையிடி அதிகரித்திருந்தது. ஆனால், தலையிடியைப் பனடோல் போட்டு மாற்ற முடியாது. அதற்குத் தான் இவர்கள் விடமாட்டார்களே! இருவரையும் மாறிமாறிப் பார்த்தேன்.

"ஜமுனா! ஏன் சண்டைபிடிக்கிறாய். அம்மா வயசில கூடினவ ஒரு மாதிரி அஜஸ்ட் பண்ணிப் போகலாம் தானே!" என நான் கூறினேன், உடனே



அம்மா, "அது தானே!" என்றாள். பதிலுக்கு ஜமுனா, "பாருங்கோ இப்பிடித்தான் குத்திக்காட்டுறது. எனக்குப் பொறுக்கேலாது" என்றாள். பதிலுக்கு அம்மாவும் தொடங்கினார்.

எனக்குப் பொறுக்க முடியவில்லை. ஜமுனாவை அறைக்குள் கூட்டிக் கொண்டு போனேன். அறைக்குள் இருந்தும் இருவருடைய சண்டை தொடர்ந்தது. சேர்ட்டைக் கழற்றிப் போட்டுப் பார்த்தேன். இன்னமும் ஜமுனா ஹோலில் இருந்த அம்மாவுடன் பேச்சுப்பட்டுக்கொண்டிருந்தாள். உடனே எனக்கும் பொறுமை எல்லை மீறியது. எழுந்து ஜமுனாவின் கன்னத்தில் "பளார்" என்று ஒரு அறைவிட்டேன். அந்தச் சத்தம் அம்மாவின் காதிலும் கேட்டிருக்க வேண்டும். உடனே அம்மா, அறைக்குள் ஓடிவந்தார். "என்ன? என்ன?" என்று கேட்டார். அறைக்குள் ஜமுனா கன்னத்தில் கையை வைத்து அழுது கொண்டிருந்தாள். நான் மேல் முகட்டைப் பார்த்தபடி கட்டியில் படுத்திருந் தேன். இருவரையும் பார்த்த அம்மா, "ஏன்ரா அவளுக்கு அடிச்சனி?" என்றார்.

"முதல்ல சண்டைபோடுவியள். பிறகு ஏன் அடிச்சனி எண்டு கேட்பியள். இதென்ன தலைவலியாகக் கிடக்கு. வீட்டிலை நிம்மதியாக இருப்பம் எண்டு வந்தால், இங்கேயும் நிம்மதியில்லை" என்றேன். அம்மா ஜமுனாவை அணைத்து ஆறுதல் சொன்னார். "நீ வீணாய் அவளை அடிச்சுப் போட்டாய். நாங்கள் ரெண்டு பேரும் "இப்படிக்குத் தென்றல்" நாடகத்திலை மாமி-மருமகள் சண்டை மாதிரி செய்து பார்த்தனாங்கள்" என்றார் மெல்லிய குரலில். நான் உடனே ஜமுனாவைப் பார்த்தேன். இன்னமும் அழுது கொண்டிருந்தாள். உடனே அம்மா அறையை விட்டு போனார்.

நான் ஜமுனாவை அணைத்தவாறு, "ஜமுனா சொறி எனக்குத் தெரியாததாலை அடிச்சிட்டன் அழாதை" என்று

அகசி-சுந்தரம் நரேந்திரஜித்தன்

தேற்றினேன். பிறகென்ன அந்த இரவு அவளை ஆறுதல்படுத்துவதிலேயே போனது. அடுத்த நாள் வேலைக்குப் போகவில்லை. அதற்கு அடுத்த நாள் தான் போனேன். என்னைக் கண்டதும் ஆபிஸ் வேலை செய்கிற ராஜன் "என்ன கஜன் நேற்று காணவில்லை" என்றான்.

எனக்கு "இப்படிக்குத் தென்றல்" நாடகத்தைச் சொல்லவா? அல்லது வீட்டில் நடந்த நாடகத்தைச் சொல்லவா? எனத் தெரியவில்லை. பொய்யாக "கொஞ்சம் காய்ச்சல். அது தான் லீவு எடுத்தனான்" என்றேன். அவன் ஒண்டிக்கட்டை அவனுக்கெங்கே தெரியப்போகுது "இப்படிக்குத் தென்ற"லின் தாக்கங்கள் என நினைத்துக் கொண்டேன்.

# உயிரில் கலந்த உறவே



து.பிரபாஹர், ஹப்புத்தளையூர்

**பு**திதாக வேலைக்குச் சேர்ந்தவள் என்றாலும் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத் தரமாகவும், திறம்படவும் செய்வதில் தன்னிறைவு கண்டிருந்தாள் மீரா.

அன்றும் மனேஜரின் அவசரமான வேலையில் மூழ்கியிருந்த மீராவுக்கு சுஜியின் நினைவு வந்து வந்து வாட்டிக்கொண்டிருந்தது. சுஜிக்கென மீரா தன்னையே தாரைவார்த்துக் கொடுத்து இன்னமும் ஒரு வருடம் கூட பூர்த்தியாகவில்லை என்பதாலோ என்னவோ இருவரது நெருக்கத்திலும் இன்னும் விரிசல் ஏற்படவில்லை. இன்று எப்படியாவது நேரத்தோடு வீட்டிற்கு வருவதாக வாக்குக் கொடுத்தது ஞாபகம் வரவே, கம்பியூட்டைரயும் தனது வேகத்திற்கு இயக்கினாள் மீரா.

சுஜி எப்போதுமே இவளைப் பிரிந்து இருந்ததில்லை. அதிலும் தனிக்குடித்தனம் என்று வந்தபின் இன்னும் கொஞ்சம் வீரியம் கொண்டது இருவரின் விரிசல். மாமா வீட்டாரோடு இருந்தபோது வீட்டிலேயே கிடந்ததால் அவளின் முந்தானையைப் பிடித்துக் கொண்டேயிருப்பான் சுஜி வேறு வேலையில்லாதவனைப் போல. ஆரம்பத்தில் அவனுடன் வேண்டா வெறுப்பாக நடந்து கொண்டாலும் தன்னை விட்டால் அவனுக்கு வேறு யாருமில்லைஎன்பதால் காலப்போக்கில் அவனின்றி அவளில்லை என்ற நிலை உருவாகியது. உண்மையில் சுஜியின் மேல் உயிரையே வைத்திருந்தாள் மீரா.

அன்றையதினம் சுஜியின் உடல்நிலை சற்று அசௌகரியமான நிலையில் இருப்பதைப் போல் காட்டிக் கொண்டான். இது தன்னை வேலைக்குச் செல்லவிடாது தடுப்பதற்காகவா அல்லது உண்மையாக வருத்தமே தானா என்பது மீராவுக்கு விளங்காத ஒன்றாகவே இருந்தது. சுஜியின் தேவைகளை அவ்வப்போது நிவர்த்தி செய்தாலும் அதன் மூலம் அளவில்லாத மகிழ்ச்சியில் மூழ்குவதே மீரா கொண்டிருக்கும் அபூர்வ பண்பாக இருந்தது. முதல் நாள் முழுக்க முழுக்க இவளுடன் இருந்த பின்புமா இவனுக்குச் சலிப்புத் தட்டவில்லை எனச் சங்கடப்பட்டுக் கொண்டாள் மீரா!

வழமைக்கு மாறாக அன்றைய தினம் அதிகமாகவே அலட்டிக்கொண்டாள் மீரா. தான் வேலைக்கு வந்தபின் சுஜிக்குத் தனது முழுமையான அன்பு கிடைக்காமல் போய்விட்டதோ? என்றொரு பிரமை கொண்டாள். இதற்கெல்லாம் மேலாக இன்று வேலைக்காரியை மட்டுமே வீட்டில் விட்டுவிட்டு வந்தது இன்னும் மனதுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஒரு மாதிரியாகத் தலைக்கு மேலிருந்த வேலைகளை முடித்துக்கொண்டு மனேஜரின் அறை நோக்கி விரைந்தாள். "ஷால் ஐ கோ ஸேர்?" என்றவளை "யெஸ் ஒஃப்கோர்ஸ்!" என்று தலையசைத்து வழியனுப்பினார் மனேஜர்.

ஆபீஸிலிருந்து புறப்பட்ட மீராவை வணங்கப்போன தெய்வம் வழிமீது வந்ததைப் போன்று ஆட்டோ ஆசாமி ஒருவன் குறுக்கிட்டான். அவனிடம் பஸ் ஸ்ராண்ட் வரை லிப்ட் தரும்படி கூறிவிட்டு ஆட்டோவிற்குள் நுழைந்தாள். ஏற்றிய வேகத்திலேயே இறக்கி விட்ட அந்த ஆட்டோ ஆசாமியிடம் பணத்தை நீட்டிவிட்டுத் திரும்பினாள் மீரா. அங்கே சனத்தை ஜன்னல் வழியாகப் பிதுக்கிக்கொண்டு புறப்பட்டது அந்த பஸ். தொடர்ந்தும் தாமதமாகாமல் தாவிக்கொண்டோடி முண்டியடித்தவாறு பஸ்ஸுக்குள் புகுந்து கொண்டாள்.

கைப்பையின் கைப்பிடி மட்டும் தோள் மீதிருக்க கைப்பை சற்றுத் தொலைவில் தொங்கிக்கொண்டிருந்தது. மீராவின் மனம் அளவிற்கு அதிகமாகவே அவதிப்பட்டுக்கொண்டது. இதயத்திற்குப் பதில் இவளே துடித்துக் கொண்டிருந்தாள் வேகமாக.

பஸ்ஸை விட்டு இறங்கியும் இறங்காமலும் சேலைத் தலைப்பை ஒரு கையில் தூக்கிப்பிடித்தவாறு தனியே ஒரு ஓட்டப்பந்தயம் வைத்துக்கொண்டாள் மீரா.

வீட்டுக்குள் நுழைந்த மீராவைக் கண்ட களிப்பால் கத்திக்கும்மாளமிட்டது மணிக்கூடு. முறையே மூன்றுமுறை கூவிவிட்டுத் தன்னை முடக்கிக்கொண்ட மணிக்கூட்டைப் பார்த்தாள் மீரா. நேரம் மூன்று மணியாகிவிட்டிருந்தது.

வேலைகளை முடித்துக்கொண்ட வேலைக்காரி கமலம் மாமியாரைக் கண்ட மருமகளாய் ஒடுங்கி நின்றாள். ஏதோ குற்றம் செய்தவளைப் போல்...

வந்ததும் வராததுமாக வேலைக்காரியை அனுப்பிவிட்டு மெதுவாகப் படுக்கையறையை நோக்கி முன்னேறினாள். அங்கே கண்களை மூடிக்கொண்டு ஏதோ கனவுலகில் சஞ்சரித்துக்கொண்டு சரிந்திருந்தான் சுஜி. இதுதான் சமயமென்று அங்கிருந்து வெளிப்பட்ட மீரா, அவசர அவசரமாகத் தன்னாடைகளைக் களைந்தாள். என்னதான் நெருக்கமாக இருந்தாலும் உடலைக்கழுவிக்கொள்ளாமல் சுஜியிடம் கொஞ்சுவதற்கு மனமில்லாததால் குளியலறையை நோக்கி விரைந்தாள்.

வேகமாய் உடலைக் கழுவிக் கொண்டு வெளியே வந்த மீரா சுஜிக்கென வாங்கி வைத்திருந்த அந்த குவாட்டர் போத்தலையும் எடுத்துக் கொண்டு சுஜியும் அறியா வண்ணம் அந்த அறைக்குள் நுழைந்தாள். என்றாலும் சுஜி அவளின் வருகையினை கண்டுவிட்டான்.

பூரிப்பும் புல்லரிப்பும் ஒன்றாய் இணைந்துகொள்ள மீராவும் கட்டிலில் இணைந்து கொள்ள சுஜி படு குஷியானான். மீராவை இறுக அணைத்துக் கொண்ட சுஜியின் கைகளில் தான் கொண்டுவந்திருந்த போத்தலைத் திணிக்க ஏதோ காணாததைக் கண்டவன் போல் வெறிகொண்ட மட்டும் மண்டினான் போத்தல் வெறுமையாகும் வரை. பின்னர் தன் இரண்டு கைகளும் அழுத்தமாகப் படும்படியாக மீராவை அணைத்துக்கொண்டான்.

அவனின் மென்மையான கரங்கள் மீராவின் மாராப்பையும் மீறி மார்பகங்களை ஸ்பரிசித்தது மீராவிற்கு என்னவோ செய்வதைப் போன்று இருந்தது. பேசவும் முடியாது அந்தக் கரங்களை அகற்றவும் முடியாது மௌனித்த மீரா அவனை அப்படியே கட்டித்தழுவி மாறிமாறி முத்தமிட்டாள். பின் அவனைக் கட்டிலில் சரித்து, தானும் சரிந்து கொண்டு மெதுவாகத் தனது ஜாக்கெட்டை விலக்கினாள். தனக்கு இரை கிடைத்துவிட்ட பூரிப்பில் பல்லில்லாத தைரியத்தில் பால் குடிக்கத் தொடங்கினான் பச்சிளம் பாலகனான சுஜி.

தொட்டுத் தாலிகட்டியவன் விட்டு விட்டுப் போனாலும், உயிரில் கலந்த உறவாக இவன் மட்டும் ஒட்டிக் கொண்டிருப்பது மீராவிற்கு நிம்மதியாய் இருக்கிறது. ■

# கண்ணாமூச்சி ரே... ரே... 19

## பட்டுக்கோட்டை பிரபாகர்



> "இருங்க சார். பதட்டப்படாதீங்க. ஒரு ஆளைச் சந்தேகத்தின் பேர்ல அரெஸ்ட் செஞ்சி உங்க கஸ்டடிக்குக் கொண்டாந்து விசாரிக்க உங்களுக்கு அதிகாரம் இருக்கா? இல்லையா?"

"திருப்பி திருப்பி இதே தான் பேசுவா. கடத்தினாங்க. ஊசி போட்டாங்க. இருபது லட்சம். இதைத் தவிர ஒரு பிட்டு அதிகம் பேச மாட்டா. நீங்க என்ன எதிர்பார்க்கறீங்க?"

இந்தப் பொண்ணு உண்மையிலேயே துர்க்காதானான்னு சந்தேகப்படறோம்?"

"நானும் விசாரிச்சேன். மதுலதாவுக்கு டூப் ஆர்ட்டிஸ்டாம். அதனால தன்னை மதுலதான்னு நினைச்சிக்கிட்டுப் பேசுது. புத்தி ரொம்ப தீவிரமாப் பிசகியிருக்கு."

"எதையாச்சும் எழுதச் சொன்னா எழுதுற நிலமையில இருக்காங்களா டாக்டர்?"

"யூரினே பெட்ல போய்டுது... நோ சான்ஸ்."

இவர்கள் பேசிக்கொண்டிருக்க சுசிலா துர்க்காவிடம் பேச்சுக் கொடுத்து அவள் திருப்பித் திருப்பி கடத்தல், இருபது லட்சம், ஊசி என்று தொடர்பில்லாமல் பேசுவதை டேப்பில் பதிவு செய்து கொண்டாள்.

பரத் யோசனையாக அனில்தூத்தைத் தனியாக அழைத்து, மதுலதாவுக்கு தமிழ் தவிர வேற என்ன மொழி தெரியும்?"

"தெலுங்கு தெரியும். எனக்கும் தெலுங்கு தெரியும். சமயத்திலே மத்தவங்க தெரிஞ்சிக்கக்கூடாதுன்னா நாங்க தெலுங்குல பேசிக்குவோம்."

"ஐ.சி! நீங்க தைரியமா அவகிட்டே போங்க. என்னைத் தெரியுதான்னு தெலுங்குல கேளுங்க பார்க்கலாம்."

அனில்தூத் அவளை நெருங்கி, "தல்லி, நன்னி தெலிஸ் தாந்தியா?"

துர்க்கா கொஞ்ச வினாடிகள் அவனைப் பார்த்துவிட்டு, "ரேய்! தொங்கா! நுவ்வு தானே நாகு சூதி வேஸ்திவி?" என்றாள்.

"என்ன சொல்றாங்க?" என்றான் பரத் ஆர்வமாய்.

"திருட்டுப் பயலே நீ தானே எனக்கு ஊசி போட்டேன்னு கேக்கறா."

"பார்த்தீங்களா, அந்த ஒரு டிராக்கை விட்டு வெளியே வர மாட்டா" என்றார் டாக்டர்.

"இல்லை டாக்டர். இது போதும். எல்லோரும் வாங்க போகலாம்" என்றான் பரத்.

நால்வரும் அனில்தூத் காருக்கு வந்து அமர்ந்ததும்...

"என்ன திடீர்னு வந்துட்டீங்க?" என்றாள் சுசிலா.

"சுசி, நான் தீர்மானமா சொன்னா நீங்க எல்லோரும் நம்புவீங்களா? இது துர்க்கா இல்லை. இவதான் மதுலதா. செத்தது துர்க்கா. துர்க்காவோட அம்மா விரிவா பேசினப்போ துர்க்காவுக்கு தமிழ் மட்டும் தான் தெரியும்னு சொன்னாங்க. இப்போ இங்கே அட்டகாசமா சுந்தரத் தெலுங்கு வருது. ஸோ... மிஸ்டர் அனில்தூத், வண்டியை நேரா கமிஷனர் ஆஃபீஸ் விடுங்க" என்றான் பரத்.

★★★

பதட்டமாக வந்தான் சுதிர்.

"தாஸ், தாஸ்... பிரச்னை கிளம்பிடுச்சி."

"என்னடா...? பதறாம சொல்லு" என்றான் சங்கரதாஸ் டிவி பார்த்துக் கொண்டு,

"ரெண்டு விஷயம் கேள்விப்பட்டேன்."

"முதல் விஷயம் என்ன?"

"மதுலதாவை ஆஸ்பத்திரில சேர்த்து தீவிரமா சிகிச்சை கொடுத்துக் கிட்டிருக்காங்க..."

"அதனால என்ன?"

"சிகிச்சையில குணமாய்ட்டா? நினைவுகள் சீராய்ட்டா...?"

"ஆகட்டுமே... நான் தான் மதுலதான்னு சொல்வா. முட்டிக்குவா. மோதிக்குவா, நிரூபிக்க முடியுமா? சரி. அப்படியே நிரூபிச்சிடறான்னு வையி... தனக்கு என்ன நடந்திச்சின்னோ, தன்னைக் கடத்தி சதி செஞ்சது யாருன்னோ அவளால தகவல் சொல்ல முடியுமா?"

"முடியாது தான்..."

"அதனால அதைப்பத்திக் கவலை இல்லை. ரெண்டாவது விஷயம் என்ன?"

"அந்த அனில்தூத் பிரைவேட்டா பரத்னு ஒருத்தனை இந்த கேசை விசாரிக்க ஏற்பாடு செஞ்சிருக்கான். அவன் அசோக் ஸ்ரூடியோ முதலாளி கிட்ட எல்லாம் விசாரிச்சிருக்கான். சேதுவைப் பத்தி தீவிரமா விசாரிச்சிருக்கான்."

"மை காட்!" என்று எழுந்து விட்டான் சங்கரதாஸ்.

அமைதியாய் மறுபடி அமர்ந்தான். சிந்தித்தான்.

டெலிஃபோனை எடுத்தான்.

"ஹலோ! ஹோட்டல் பிரசாந்த். ரிஸப்ஷன். குட் ஈவினிங்."

"குட் ஈவினிங் மேடம். ரூம் நம்பர் ஃபைவ் நாட் சிக்ஸ் ப்ளீஸ்..."

"ஹலோ சேது பேசறேன்..."

"சேது நான்தான் தாஸ் பேசறேன். பெங்களூர் எப்ப புறப்படறே?"

"இன்னும் ரெண்டு மணி நேரத்தில."

"சந்தோஷம். இன்னும் அரை மணி நேரத்தில என் ஆளு ஒருத்தனை அனுப்பி வைக்கிறேன். ஒரு விஷயம் சொல்வான். அவனைச் சந்திச்சிட்டு அப்புறம் புறப்படு."

"சரிங்க..."

"உன்னை போலீஸோ, வேற யாராவதோ இதுவரைக்கும் வந்து பார்த்தாங்களா?"

"இல்லையே... ஏன், என்னாச்சி?"

"ஒண்ணுமில்லை. வைச்சிடு."

வைத்ததும் கேட்டான் சுதிர்.

"புரியலையே தாஸ். என்ன செய்யப் போறே?"

"நம்ம விவகாரம் எல்லாம் தெரிஞ்சவன் சேது. அவனைப் போலீஸ் நெருங்கிட்டா... நமக்கு பிரச்னை சுதிர். அவன் சூட்கேஸ்ல நாம கொடுத்த ஐஞ்சு லட்டசம் வேற இருக்கு. அதனால..."என்று மறுபடி எண்கள் சுற்றி.

"ஹலோ... மாணிக்கமா? நேர்ல வர்றியா? ஒரு ஜோலி இருக்கு" என்றான் சங்கரதாஸ்.

டிவியில் கார்டு காட்டினார்கள்.

"அடுத்த நிகழ்ச்சி இன்னும் சில வினாடிகளில் தொடரும்"

●●●

"நீங்க சொல்றதை எல்லாம் நான் கேட்டுக்கிட்டேன். இப்ப நான் சொல்றதை நீங்க தெளிவா கேட்டுக்கங்க" என்றார் உதவி கமிஷனர் மார்த்தாண்டம்.

"சொல்லுங்க சார்" என்றான் பரத்.

"நீங்க சொன்ன மாதிரி ஆள் மாறாட்டம் நடந்திருக்குன்னு நானும் ஒத்துக்கலாம். சட்டப்படி நிரூபிக்கணுமே சார். கல்லறையை இடிச்சி பொட்டி திறந்து பார்த்தா என்ன இருக்கும் இப்போ? எலும்புக்கூடு தான் இருக்கும். இவளோ பைத்தியமா இருக்கா. முக்கியமான ரெண்டு அடையாளங்கள் அந்த மச்சங்கள். மூஞ்சி கிழிஞ்சி போய் அதுவும் காணோம். மதுலதாவோட குரல், துர்க்காவுக்குத் தெரியாத தெலுங்கு பேசறா. இது ரெண்டையும் வைச்சிக்கிட்டு கோர்ட்ல ப்ரூவ் பண்ண முடியுமா? இம்பாஸிபிள்."

"இருங்க சார். பதட்டப்படாதீங்க. ஒரு ஆளைச் சந்தேகத்தின் பேர்ல அரெஸ்ட் செஞ்சி உங்க கஸ்டடிக்குக் கொண்டாந்து விசாரிக்க உங்களுக்கு அதிகாரம் இருக்கா? இல்லையா?"

"வொய் நாட்?"

"ப்ளீஸ்... எனக்காக ஒண்ணு செய்ங்க. ஹோட்டல் பிரசாந்த்ல தங்கியிருக்கான் சேது. அவனைக் கூப்பிட்டுக்கிட்டு வந்து லெஃப்ட்ல ஒண்ணு, ரைட்ல ஒண்ணு கொடுத்து விசாரிச்சா சில தகிடுதத்தங்கள் புரியும்னு நான் நம்புறேன்..."

"அப்படியா? அதையும் பார்த்துடுவமே... வாங்க என்னோட..."


போலீஸ் ஜீப் வந்து நின்று, ரிஸப்ஷனில் ரூம் நம்பர் விசாரித்துக் கொண்டு வந்து கதவில் டொக், டொக், செய்ய... அமைதி.

கைப்பிடியை அழுத்தி உள்ளே தள்ள... திறந்து கொண்டது.

உள்ளே...

*(கண்ணாமூச்சி தொடரும்)*

## "தியாகியாக மரணிப்பதைத் தவிர வேறு வழியில்லை"



பாலஸ்தின ஜனாதிபதி யாசீர் அரபாத் கடந்த ஒரு வாரகாலமாக மேற்குக்கரை நகரமான ரமல்லாவில் உள்ள அவரது பணிமனையில் இஸ்ரேலிய இராணுவத்தின் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கிறார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதிக்குரிய சகல அந்தஸ்துகளுடனும் உலக நாடுகளால் மதிக்கப்பட்டவர் யசீர் அரபாத். பாலஸ்தீன் அதிகார சபையின் தலைவர் என இஸ்ரேலிய அரசியலமைப்பு அவரை அழைத்தாலும் பாலஸ்தீன தேசத்தின் தலைவராக அவர் விளங்கினார்.

அரச பயங்கரவாதத்தின் உச்சக் கட்ட வெறியாட்டத்தையும் காண்பிக்கும் இஸ்ரேல், சரிசமமாக அமர்ந்து தங்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்ட ஒரு தலைவரை எப்படியெல்லாம் அவமானப்படுத்த முடியுமோ மொத்தத்தையும் செய்து பார்த்துவிட்டு இறுதியில் யசீர் அரபாத்தின் உயிருக்கே உலைவைக்கத் துணிந்துவிட்டது.

இஸ்ரேலிய தாங்கிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் ரமல்லா பணிமனையில் நீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. அரபாத் அடைபட்டுக்கிடக்கும் இடத்துக்கு மிக அருகாமையில் துப்பாக்கிச் சமர் இடம் பெறுகின்றது. ஆனால், அவர் உறுதி குலையாது மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அமர்ந்திருக்கிறார்.

வழமைபோலவே அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் கைகட்டிப் பார்த்திருக்கின்றன. ஆனால், அரபாத்தை பலம் இழக்கச் செய்ய இஸ்ரேல் எடுக்கும் முயற்சிக்கு மத்தியில் ஹமாஸ் போராளிகளும் ஏனைய தீவிரவாத அமைப்புகளும் பலம் பெற்றுவருகின்றன. பாலஸ்தீன தீவிரவாத அமைப்புகளால் இஸ்ரேலுக்குள் நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்த அரபாத் உதவவில்லை என்ற "குற்றத்திற்காகவே" அவர் இப்படிச் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால், அரபாத் எந்தவித நெகிழ்வுத் தன்மையையும் காட்டாது தனது துப்பாக்கியை அருகில் சாய்த்து வைத்துவிட்டு தியாகியாவதைத் தவிர வேறு வழியில்லை எனக் கூறுகிறார்.

"உங்களுக்கு அரபாத்தைப் பற்றித் தெரியாது. என்னை உங்களால் எதுவும் செய்ய முடியாது. உயிர்த்தியாகம் செய்தவர்களின் பட்டியலில் நானும் சேர்ந்து கொள்வேன்" என்கிறார் அரபாத்.

## ஐரோப்பாவின் மிக ஆபத்தான பெண்மணி விடைபெறுகிறார்



பிரிட்டி மகாராணியின் தாயார் தனது 101ஆவது வயதில் கடந்த சனிக்கிழமையன்று காலமானார். பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினராக இருந்த இவர் ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் பாரியாராவார்.

இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனில் குண்டு மழை பொழிந்த போது அரச குடும்ப அங்கத்தவர்கள் பலரும் லண்டனை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் வாழ்ந்தனர். ஆனால், மகாராணியின் தாயார் (இவரும் எலிசபெத் என்றே அழைக்கப்படுகிறார்) ஆபத்தான சூழ்நிலைக்கு மத்தியிலும் லண்டன் நகரில் தங்கியிருந்து பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு ஆறுதல் கூறினார். இந்த நிகழ்வுகளையடுத்து பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் மிகுந்த அன்புக்குரியவராக விளங்கினார். ஐரோப்பாவில் உள்ள மிகவும் ஆபத்தான பெண்மணி என இவரை அடோல்ஃப் ஹிட்லர் வர்ணித்தார்.

1952ம் ஆண்டு தனது கணவர் இறந்ததிலிருந்து அரச குடும்பத்திற்குச் சொந்தமான வின்சர் மாளிகையில் காலம் கடத்திவந்த மகாராணியின் தாயார், சிறிது காலமாக பாக்கின்ஸன் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். சனியன்று அவரது உயிர் பிரிந்தது.

இந்தச் செய்தி அறியக்கிடைத்ததும் பெருந்தொகையான மக்கள் வின்சர் மாளிகைக்குச் சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

"வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது" என்று இளவரசர் சாள்ஸ் சோகம் ததும்பக் கூறினார்.

## "நான் லேட்டா வந்தாலும், லேட்டஸ்டாத்தான் வருவேன்!"

ரஜனிகாந்த் நடிக்கும் "பாபா" திரைப்படத்தில் முத்திரைவாசகமாக என்ன வசனம் பேசுவார் என்பதைக் கற்பனை செய்து எழுதுமாறு வாசகர்களுக்குப் போட்டி வைத்தது தமிழக சஞ்சிகை ஒன்று.

நான் லேட்டா வந்தாலும்
லேட்டஸ்டாத்தான் வருவேன்!

என்ற வசனம் பரிசு பெற்றது.

பாராட்டுப்பெற்ற வசனங்கள் சில,

"நாம நினைச்சதெல்லாம் நடக்காது,
நல்லதை நினைச்சா நடக்காம இருக்காது!"

"இந்த பாபாவுக்கு கால்ல விழறவனையும் பிடிக்காது
காலை வார்றவனையும் பிடிக்காது!"

"நான் நெனைச்சா சொன்ன மாதிரி,
சொல்லிட்டா முடிஞ்ச மாதிரி!"

"என்னை அழிக்க நினைச்சா - உன் மனசாட்சியே
உன்னை அழிச்சிடும்!"

"வடக்கே இமயமலை,
தெற்கே பாபா - இது தாண்டா இந்தியா!"

திரைப்படத்தில் உண்மையாக என்ன பேசப்போகிறார் என்பது இப்போதைக்கு இரகசியம்.

# முஸ்லிம் மக்களின் தீர்வு

# சர்ச்சைகளும் சாத்தியங்களும்

**முக்கியமான விடயம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குக் காணப்படும் அரசியல் தீர்வில் முஸ்லிம்களுக்கு என்ன இடம் என்பதேயாகும்**

வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்கள் பற்றிய விவகாரம் மீண்டும் இப்போது ஒரு அரசியல் சர்ச்சையாக உருப்பெற்றுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக் கான தீர்வைக் காண முற்படும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியற் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் தறுவாயிலேயே இவ் விடயம் தலை தூக்கியுள்ளது.

பாராளுமன்றத்திலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து செயற்பட சமாதான ஒன்றியம் என்ற பெயரில் அமைப்பொன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

இதில் முக்கியமான விடயம் இலங்கையின் 'இனப்பிரச்சினைக்குக் காணப்படும் அரசியல் தீர்வில் முஸ்லிம்களுக்கு என்ன இடம் என்பதேயாகும்.

அத்தகைய முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வொன்றை ஈட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் இப் பேச்சுவார்த்தைகளில் பங்குபெற்ற இடமளிக்கப்படவில்லை.

ஆனால் இவ் விடயத்தில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் உள்ளன.

முஸ்லிம்கள் யார் என்பது இதில் முதன்மை பெறும் கேள்வி.

சில நாட்களின் முன்னர் லண்டனில் ஹில்ட்டன் ஹொட்டேலில் இலங்கை முஸ்லிம்களின் பிரீத்தானிய சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கொன்றில் உரையாற்றிய சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம்களின் தீர்வு தொடர்பாக மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்.



முஸ்லிம்கள் தனியான இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும், முஸ்லிம்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்பது அங்கீகரிக்கப் படவேண்டும், வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தாயகமே என்பது அங்கீகரிக்கப்படவேண்டும் என்பனவே இம் மூன்று அடிப்படைகளுமாகும்.

இவை வேறொன்றுமல்ல, திம்புக் கோட் பாடுகளாக, 1985ல் தமிழ் விடுதலை இயக் கங்கள் முன்வைத்த அதே கோட்பாடுகளை முஸ்லிம்களுக்கானதாக மாற்றியமைத்த மாற்று வடிவமே.

திம்புக் கோட்பாட்டில், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமென அங்கீகரிக்கப் படவேண்டும், தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு அங்கீகரிக்கப் படவேண்டும், வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயமென அங்கீகரிக்கப் படவேண்டும் என்ற கோட்பாடு களை புலிகள் உள்ளிட்ட விடுதலை இயக்கங் கள் இலங்கை அரசாங்கத்துக்கு முன் வைத்தன.

இப்போது அதையே ரவூப் ஹக்கீம் முஸ்லிம்களுக்கும் கோரியுள்ளார்.

ஆனால், இப்போது நிகழும் பேச்சுவார்த்தையில் இதை அங்கீகரிக்கும்படி அரசாங்கத்திடம் கோருகிறாரா, விடுதலைப் புலிகளிடம் கோருகிறாரா என்று அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கும் அவர் ஏன் இதை அமைச்சரவையில் முன்வைக்கவில்லை, குறைந்த பட்சம் பாராளுமன்றத்திலும் முன்வைக்கவில்லை என்பதும் கேள்விக்குரியதாகிறது.

அப்படியானால் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லையா என்றும் கேள்வி எழுகிறது.

எவ்வாறாயினும் இந் நிலைப் பாடுகளென்பன இப்போதுதான் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷை என்ற கருத்தில் முதன்முதலாக வெளியிடப் படுகிறது.

இதில் கோட்பாட்டு ரீதியான சர்ச்சைகள் எழத்தான் போகின்றன.

தேசிய இனம் என்ற வரையறையை முதலில் முன்வைத்தவர் சோவியத் தலைவர் ஸ்டார்லினே.

அவர் அதற்கு முன்வைத்த வரையறையில் ஒரு பொது மொழி, ஒரு பொதுப் பொருளாதாரக் கட்டமைப்பு, ஒரு பொதுப் பிதேசம் ஒரு பொதுக் கலாசாரத்தின் அடிப்படையிலான உணர்வு என்பவற்றைக் கொண்ட ஒரு சமூகம் ஒரு தேசிய இனமெனக் கருதப்படுமெனக் கூறியிருந்தார்.

இவற்றில் ஒன்றாவது நிறைவு செய்யப்படாத பட்சத்தில் அவர்கள் தேசிய இனமாகக் கருதப்பட முடியாதென்பது அவரின் வாதமாக இருந்தது.

அவ்வாறு நோக்கும்போது இங்கே இரண்டு கேள்விகள் எழுகின்றன.

ஒன்று, முஸ்லிம்கள் ஸ்ராலினின் இந்த வரையறைக்கு அமைந்த பொதுப் பிரதேசத்தையோ, தமக்குத் தனித்துவமான ஒரு பொது மொழியையோ, பொதுப் பொருளாதார வாழ்வையோ பொதுக் கலாசார உணர்வையோ கொண்டிருக்கிறார்களா என்பது.

மற்றையது ஏன் முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் சேர்ந்த ஒரே தமிழ் தேசிய இனமாக கருதப்பட முடியாது என்பது.

இதில் அவர்கள் ஏனைய தமிழ் மக்கள் பேசும் தமிழ் மொழியைத்தான் தாய் மொழியாக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் கலந்த ஒரு பொதுப் பிரதேசத்தில்தான் வாழ்கிறார்கள், அவர்களோடு சேர்ந்த பொதுப் பொருளாதார வாழ்வையே வாழ்கிறார்கள், ஆக, தமக்குத் தனித்துவமான கலாசாரத்தை மட்டுமே கொண்டிருக்கிறார்கள். ஒரு கலாசார வித்தியாசத்தை மட்டும் வைத்து அவர்கள் ஒரு தனித் தேசிய இனமாக வேறுபட முடியுமா என்று ஒரு வாதம் முன்வைக்கப் படுகிறது.

**தமிழ்பேசும் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் கலாசார வேறுபாடு உள்ளது. அதுபோல் தமிழரில் பல்வேறு சாதிப் பிரிவினரிடையேயும் கலாசார வேறுபாடு உள்ளது. எனவே அவர்களொவ்வொருவரும் தனித்தனித் தேசிய இனமாகிவிட முடியுமா?**

அப்படியானால் தமிழ்ப்பேசும் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் கலாசார வேறுபாடு உள்ளது, அதுபோல் தமிழரில் பல்வேறு சாதிப் பிரிவினரிடையேயும் கலாசார வேறுபாடு உள்ளது. எனவே அவர்களொவ்வொருவரும் தனித்தனித் தேசிய இனமாகிவிட முடியுமா என்றும் வாதிக்கின்றனர்.

இதேவேளை ஸ்ராலினின் இந்த வரையறை தற்போதய புதிய உலகக் கட்டமைப்பில் பொருத்தமற்ற தெனவும், வெறுமனே தாம் ஒரு இனமென்ற உணர்வு மட்டும் வலுப் பெற்றிருந்தாலே அவர்கள் ஒரு தேசிய இனத்துக்குரிய தகுதியைப் பெற்று வீடுவார்களெனவும் மறுபுறம் ஒரு வாதம் உள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமெனக் கூறுபவர்களால் அவர்களுக்கான தீர்வினில் ஏன் அதே தமிழ் மொழியைப் பேசும் மலையகத் தமிழ் மக்களுக்கான தீர்வை உள்ளடக்க முடியவில்லை. திம்புக் கோட்பாடுகளில் முன்வைக்கப்பட்ட நான்காவது கோட்பாடான மலையக மக்கள் தொடர்பான, அவர்களின் பிரஜா உரிமைவாக் குரிமை அங்கீகரிக்கப் படவேண்டுமென்ற விடயத்தை தற்போதய பொங்கு தமிழ் சுலோகங்களில் ஏன் கைவிட்டு விட்டார்கள் என்ற கேள்வியும் இங்கே எழுப்பப் படுகிறது.

ஒரே மொழியைப் பேசும் மலையகத் தமிழ் மக்களும் ஒரே தமிழ் தேசிய இனத்தவரானால் அவர்களுக்கான ஏக பிரதிநிதிகளாகவும் புலிகள் அமைவார்களா? அதுமட்டுமன்றி தமிழ் மக்களுக்கான ஒரே தீர்வில் மலையகத் தமிழ் மக்களை எவ்வாறு உள்ளடக்க இயலும்? அவ்வாறு, மலையக மக்களின் பிரச்சினை வேறு, அவர்களின் தலைமை வேறெனில் ஏன் அது முஸ்லிம்களுக்கும் பொருந்தாது என்பது இன்னொரு வாதமாக அமைகிறது.

இதேவேளை முஸ்லிம் மக்கள் ஒரு தேசிய இனமல்ல, மாறாக ஒரு இனக்குழுமமே. தேசிய இனத்துக்கும் இனக்குழுமத்துக்கும் வேறுபாடுள்ளது. தனித்துவமான இனக் குழுமென்ற ரீதியில் அவர்களுக்குத் தமது தனித்துவத்தைப் பேணும், பாதுகாக்கும் உரிமை உள்ளது. ஆனால் இவ்வாறான இனக் குழுமத்துக்கு தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமை இல்லை. எனக்கூறும் இன்னொரு கருத்து முகாமும் உள்ளது.

எவ்வாறெனினும் இப்போது முஸ்லிம் மக்களின் தீர்வு தொடர்பான விவாதங்களை வெறும் கருத்தியல் ரீதியில் சிந்திப்பதைவிட முக்கியமான விடயம் நடைமுறையில் எப்படி இதை அனுகுவதென்பதே.

நடைமுறையென்பது தற்போதய நிலையில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையில்தான் முஸ்லிம்களுக்கான தீர்வு பற்றியும் ஒரு முடிவு காணப்பட முடியும் என்பதாகவே உள்ளது.

எனவே முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்து புலிகள் எவ்வாறு நோக்குகிறார்கள் என்பதையும், அவர்களுடன் எவ்வளவு தூரம் இணக்கம் காண முடியுமென்பதையும் பொறுத்தே இது அமையும்.

அரசாங்கத்தின் பொறுப்பு என்பது இதில் என்ன என்ற கேள்வி இருக்கத்தான் செய்கிறது.

அரசாங்க அமைச்சரவையில் பங்குவகிக்கும் ரவூப் ஹக்கீமாலேயே இதுகுறித்து அரசாங்கத்தை ஒரு நிலைப்பாடு எடுக்க வைக்க முடியாதிருப்பதென்பது நிலைமை சற்றுக் கடினமானதாக உள்ளதென்பதையே காட்டுகிறது.

ஆனால் முன்னைய அரசாங்க காலத்தின் போது அமைச்சர் அஷ்ரப் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அப்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம் அமைச்சர்களுக்கான இடத்தை - அதுவும் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு போன்ற முக்கிய மாகாண அமைச்சுப் பொறுப்புகளில்கூட - உறுதிப் படுத்தியிருந்தார்.

அந்த வல்லமை ஹக்கீமுக்கு இல்லையா அல்லது அந்த சூழ்நிலை இப்போது இல்லையா, என்பது கேள்வி.

எனினும் தீர்வு என்பதில் நியாயங்களும் மனச்சாட்சிகளும், விட்டுக் கொடுப்புகளும், ஒத்துழைப்புகளும் பங்கேற்பது ஆரோக்கிய மானதேயன்றி, அரசியல் செல்வாக்கு, பலம் ஆகியவற்றினால் நிகழ்த்தப்படும் ஒரு பேரமாக அது அமையக்கூடாது. அப்படியானால் நியாயங்கள் புறந்தள்ளப் பட்டுவிடும்.

# மண்ணெண்ணெய் மகேஸ்வரன்...

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அமைச்சர் ஜயலத் ஜயவர்தனா, பொது மக்களுடைய பிரச்சனைகளை மனிதாபிமான நோக்குடன் கவனிப்பதால், அவர் மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றுவருகிறார். தமது சொந்தச் சகோதரர்களையே மனிதாபிமானமற்ற நிலையில் சுரண்டும் இத்தகை கூட்டத்தினரையே அமைச்சர் சார்ந்து நிற்பாரானால் அவர் அவருக்குள்ள சிறப்புக்களையே கைவிடக்கூடிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும், பொருட்களுக்கான விலை அதிகரிப்பு மக்களை அன்றாடம் வாட்டும் பிரச்சனையாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் கறுப்புச்சந்தையின் வளர்ச்சி ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திற்கு ஒரு கறுப்புப் புள்ளியை வரைந்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. அது மட்டுமல்லாமல் விடுதலைப் புலிகளுக்கும் இதனால் கறைபடியக் கூடும். கொழும்பிலிருந்து கொண்டு வரும் பொருட்களுக்கெல்லாம் விடுதலைப் புலிகள் 15 சதவீதம் அதிக வரியை அறவிடுகின்றனர் என்று இதே வர்த்தகர்கள் யாழ் மக்களிடம் தெரிவித்திருக்கின்றனர். யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்படும் பொருட்கள் யாவற்றையும் விடுதலைப் புலிகள் பரிசீலிக்கின்றனர் என்பதனால் எப் பொருளையும் அவர்களிடமிருந்து மறைத்துவிட முடியாது வரி செலுத்தியே ஆகவேண்டும். எனவே, அவர்களுக்குரிய வரியைச் செலுத்துவதிலிருந்து தப்ப முடியாதென்று இவ்வர்த்தகர்கள் சொல்லி வந்துள்ளனர்.

புலிகளுக்கு வரி கொடுத்தாலும் கூட விற்பனை செய்யும் பொருட்களின் விலையை இவ்வளவு தூரம் உயர்த்தாமலேயே போதிய லாபம் சம்பாதிக்கலாம். யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலை எப்போதும் ஒரே சீராக இருப்பதில்லை. இன்றைய நிலையில் யாழ்ப்பாண மக்கள் அபரிதமான மேலதிகப் பணம் கொடுத்தே பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டியிருக்கிறது. புலிகளின் வரியைச் சுட்டிக்காட்டியே வர்த்தகர்கள் பெரும் பணத்தைச் சம்பாதிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சாதாரண பொது மக்கள் தங்கள் சொந்தச் சகோதரர்களாலேயே சுரண்டப்படும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். மகேஸ்வரன் யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் என்பதனால் அவரே தான் இந்நிலைக்கு முழுப் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ள வேண்டியவராகிறார். அம் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களைச் சாதகமாக்கிக் கொண்டு அவர்களைச் சுரண்டுவதன் மூலம் பெரும் லாபம் சம்பாதிப்பதென்பது மிகக் கேவலமான செயலாகும். தமிழர்களுடைய துயரங்களுக்கெல்லாம் சிங்களவர்களே காரணம் என்று இதுவரை குற்றம் சாட்டப்படுவது வழமையாக இருந்து வந்துள்ளது. இப்போதிருக்கும் சூழ்நிலையில் யார் மீது பழி போடுவது?

நன்றி 'சண்டே லீடர்'

# ஸ்போர்ட்ஸ்

## என் கெப்டன் பதவி நிரந்தரமில்லை

## கவலையுடன் கூறுகிறார் கங்குலி

ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும் ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும் விளை யாடவென இந்திய அணி மேற்கிந்திய தீவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள் ளது.

ஏற்கனவே அன்டிகுவா சென்ற டைந்துள்ள இந்திய அணியில் சவ் ராவ் கங்குலி இடம்பெறவில்லை. இரண்டு நாட்கள் கழித்து அங்கு சென்று அணியுடன் இணைந்துகொள் வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கோல்கத்தாவில் நிருபர்களுக்குப் பேட்டியளித்த கங்குலி, தனது கெப்டன் பதவியின் நிச்சய மின்மையைக் குறித்து மனம் திறந்து பேசியிருக் கிறார்.

இதன் போது அவர் கூறியதாவது;

இந்திய கிரிக்கெட் அணிக்கு கெப்ட னாக இருப்பது மிகவும் கடினமான விஷயம். உலக கிரிக்கெட் அரங்கில் ரசிகர்களால் அதிகம் வெறுக்கப்பட்ட காப்டன் நானாகத் தான் இருப்பேன். பத்திரிகைகளைப் படிக்கும்போது தான் இந்த விபரங்கள் எனக்குத் தெரிகின் றன. இந்திய கிரிக்கெட் அணிக்கு யாரும் நிரந்தர காப்டனாக இருக்க முடியாது. காலத்துக்குத் தகுந்தபடி காப்டனும் மாறிக்கொண்டே தான் இருப்பார்.

அதற்காக காப்டன் பதவி எனக்கு மட்டும் தான் சொந்தம் கொண்டாடு வதில் எந்த அர்த்தமும் கிடையாது. சமீபத்தில் அளித்த பேட்டியொன்றில் டெண்டுல்கர் தனது காப்டன் ஆசையை வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். என்னிடமிருந்து காப்டன் பதவி பறிக் கப்பட்டால் நிச்சயம் வேறு ஒருவர் காப்டனாக வருவார். அது டெண்டுல் கர் அல்லது திராவிட், யாராக வேண்டு மானாலும் இருக்கலாம். டெண்டுல்கர் காப்டனாகப் பதவி ஏற்றால் அதிக மகிழ்ச்சியடைவேன். இலங்கைப் பய ணத்தில் லாரா சிறப்பாக ஆடி ரன் குவித்தார். இந்த வீடியோ பதிவுகளை விரைவில் நான் போட்டுப்பார்க்க உள்ளேன். இதன் பிறகு லாராவின் ஆட்டமுறையை அடையாளம் கண்டு கொள்வதில் சிரமம் இருக்காது என் றார் கங்குலி.

## மனைவியின் சாதனையை சமப்படுத்திய கணவர்

அமெரிக்காவிகன் ஃபுளோரிடா வில் நடைபெற்ற கீபிஸ்கேன் டென்னிஸ் மாஸ்டர்ஸ் சீரிஸ் போட்டியில் 5வது முறையாகவும் சாம்பியன் பட்டத்தை வென்றார் அமெரிக்க வீரர் ஆந்த்ரே அகஸ்ஸி.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில், அகஸ்ஸி 6-3, 6-3, 3-6, 6-4 என்ற செட்களில் ஸ்விட்சர் லாந்து வீரர் ரோஜர் ஃபெடரரை தோற்கடித்தார்.

1990, 95, 96, 2001 ஆகிய ஆண்டு களிலும் இப்பட்டத்தை அகஸ்ஸி வென்றுள்ளார். ரூ. 2.15 கோடி பரிசுத் தொகை அகஸ்ஸிக்கு வழங்கப்பட் டது.

அகஸ்ஸியின் மனைவி ஸ்டெஃபி கிராஃப் மட்டுமே இப்பட்டத்தை 5 முறை வென்றுள்ளவர் என்பது குறிப் பிடத்தக்கது. 19 வயதில் இப்பட்டத்தை வென்ற அகஸ்ஸி, மிக அதிக வயதில் (31 வயது) வென்றவர் என்ற சிறப் பையும் பெற்றார். ஒற்றையர் ஆட்டங் களில் அகஸ்ஸியின் 700வது வெற்றி இது. ஓபன் சகாப்தம் தொடங்கிய பின்னர் 700 ஆட்டங்களுக்கு மேல் வெற்றி பெற்ற 9வது வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தியா பதில்கள்

**★ கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத் திற்கு மணித்தியாலத்திற்கு ஒரு பஸ் ஓடப்போகிறதாமே?**

எஸ்.ஜனகன், கொழும்பு-05.

*சத்தியின்றி ரத்தமின்றி நடக்கின்ற யுத்தத்தில் முன்னேறிக்கொண்டிருக் கின்றார் ரணில். பு.மு அமைதியா? பு.பி அமைதியா?*

☆★☆

**★ சிந்தியா! உங்களுக்கு வேண்டிய முகவரியை ஒருவரிடம் கேட்கிறீர்கள். அவருக்கு முகவரியும் தெரியும், வாய் பேசவும் முடியும். இருந்தும் அவர் வாய்திறக்காமல் மௌனமாக இருந்தால் உங்களது மனநிலை எப்படியிருக்கும்?**

க. கமலதாசன், வந்தாறுமூலை.

*சரிசரி உங்களுக்கு யார் முகவரி வேண்டும் என்று எழுதுங்கள். நான் என்ன வைத்துக்கொண்டா வஞ்சகம் பண்ணப்போகிறேன்?*

☆★☆

**★ தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு பற்றி?**

வஸந்தி கிருஸ்ணகுமார், பலாங்கொடை.

*ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள். ஈனஸ்வரத்தில் முனகுகிறவர் களாக அவர்களுக்கு மாற்றுக்கருத் துடையோர்.... இவர்களுக்கிடையில் கூட்டமைப்புக்கு இனியென்ன வேலை!*

☆★☆

**★ பெற்றெடுத்த உள்ளம் என்றும் தெய் வம் தெய்வம்... என்ற ரி.எம்.எஸ் இன் பாடல் எந்தப் படத்தில் இடம்பெற் றது?**

எஸ்.குமாரி, கொழும்பு-06.

*கண்ணா நலமா?*

☆★☆

**★ எங்கள் நாடு பணக்கார நாடாக வர வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். என்ன செய்யலாம்?**

பா.தனஞ்ஜன், கொழும்பு-11.

*இந்தப் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை சமாதானத்துக்குரிய தீர்வாக மாற்றிக் கொள்வதற்கு யார் தடையாக மாறுகி றார்களோ அவர்களுக்கெதிராக வீதி யில் இறங்கிக்கேள்வி கேட்பதற்குத் தைரியத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். பணக்கார நாடென்ன, பார்புகழும் நாடாகியும் விடலாம்.*

☆★☆

**★ வாழ்க்கையில் நினைத்ததைச் சாதிக்க என்ன செய்ய வேண்டும்?**

மார்க்கண்டு வாணி, கிரான்.

*நினைப்பது மட்டுமல்ல, சாதித்து முடிக்கும்வரை அந்த நினைப்பால் மனதைக் குடைந்துகொண்டும் இருக்க வேண்டும்.*

☆★☆

**★ சிந்தியா! ஒரு பெண் என்னுடன் நட்பாகப் பழகுகிறாள். ஆனால், அவளு டைய அம்மா இதைத் தப்பாக நினைத் துக்கொண்டு அவளை ஏசுகிறார். இப்படிப்பட்ட தாய்மாரை எப்படிப் புரிந்து கொள்வது?**

எம்.சிவபாலன், இரத்தினபுரி.

*உங்களால் அந்தத் தாயைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால், உங்களது நட்பின் புரிதலும் குறை பாடுடையது தான்!*

☆★☆

**★ தமிழ் படங்களில் நடித்த பிரபலமான ஹிந்தித்திரை நடிகைகளில் உங்களைக் கவர்ந்தவர்கள் யார்?**

வாணி கதிரேசன், மட்டக்களப்பு.

*அர்ஜுனோடு ஒரு படத்திலும் கமலோடு ஒரு படத்திலும் வந்த ரவீனா என்னைக் கவர்ந்தது என் னவோ "மஸ்து மஸ்து"வில் தான்.இடை வெட்டு ஆட்டத்தின் தெனாவட்டு அற்புதம் அது. அர்ஜுனோடும், குணா லோடும் நடித்த அந்த "ஒல்லிக்குச்சி உடம்புக்காரி" சோனாலி "மிட்ஷொட்" டில் மட்டும் பார்க்கக்கூடியதாக இருப் பவர். மனிஷா கொய்ராலாவா மனசை கொய்யுறாளாவா? என்று கேட்க வைத்த நேபாள நன்கொடை பம்பாய், இந்தியனோடு முடிந்துவிட்டது. "மிஸ்டர் ரோமியோ"வோடும், "குஷி"யோடும் ஆட்டம் போட்ட ஷில்பாவின் இடைச்சரி வில் விழுந்து துடித்த கண்களால் வேறெதையும் பார்க்க முடியவில்லை. மின்சாரக்கண்ணாளின் "ஊலலல்லா" வும் ஓகே தான். ஆனாலும் என்னை இம்சைப்படுத்திக்கொண்டிருப்பவர்கள் மூவர். ஒருவர் உலக அழகிகளில் உருப்படியாய் நடிக்கவும் கூடியவர் என்று காட்டிய அந்த எட்டாவது அதிசயம். "பாபா" வாய்ப்பை உதறி னாராமே.... த்சொச்சோ...! மற்ற இரு வரும் பேரழகிகள் கிடையாது. கமலின்*



*ஹேராமில் வந்த கல்கத்தா குள்ள ராணியும், தங்கர் பச்சனின் அழகியும் குறுஞ்சிரிப்பிலேயே என்னைக் குட லோடு துடக்கி முறுக்கிப் பிழிபவர்கள்... காந்தப் புன்னகை...யால்..ள் என்னை.. கஸ்ழக்கி... வேண்டதாம் பிறிதொரு சமயம் வழியவிடுகிறேன்.*

☆★☆

**★ தமிழ் வாரப்பத்திரிகைக் கட்டுரைகளில் மீண்டும் அர சாங்கத்தைச் சாடும் கருத்துக்கள் வரத் தொடங்கியுள்ளன. சமா தானம் குழம்பிவிடுமா?**

எம்.ஏ.ஜௌபர், புதியகாத்தான்குடி.

*பேரறிவுமிக்க கட்டுரை யாளர்கள் எவரும் உண்மையில் சமாதானம் வரு வதற்கு என்ன நடைபெற வேண்டும் என்பதைத் தெளிவாக எழுதுவது கிடை யாது. காலத்துக்குக் காலம் யாராவது ஒருவரை எதிரியாக்கி அவரை மின்கம் பத்தில் கட்டிவைத்து "நீதான் தடை... நீதான் தடை..." என்று அடி அடி யென்று அடித்துவருவதையே செய்கி றார்கள். மற்றத் தமிழ்க் குழுக்க ளெல்லாம் தான் பெரும் தடை யாக இருப்பதாக ஒரு சமயம் இவர்கள் எழுத்தில் தெரிந்தது. இப்போது அவர்கள் கட்டுரைகளை வாசிக்கிற போது மற்றத் தமிழ்க்குழுக் கள் எல்லாம் நோஞ்சான்கள் என்று நமக்கே ஒரே பரிதாபமாகிவிட்டது. பிறகு ஜனாதிபதி தான் சமாதானத்தின் தடைமுள்ளாகத் தெரிந்தார். அவரும் விறைப்பாக நிற்காமல் கூடியவிரை விலேயே நம் கட்டுரையாளர்களைக் கைவிட்டு விட்டார். பாவம் ரணில்,கேட் கிறதையெல்லாம் தந்துவிடுகிறேன் என்பது போல நடந்துகொண்டாலும், நம் கட்டுரையாளர்களுக்கு கட்டி வைத்து அடிக்க ஆள் கிடைக்காததால் மாட்டிக் கொண்டுவிட்டார். தமிழர்கள் பொங்கி யெழுவது பிடிக்காமல் இவர் தான் சிங்களப்பத்திரிகைகளில் ஆள் வைத்து எழுதுவித்துக் கொண்டிருக் கிறார் என் பதாக நம் அறிஞர்கள் தர்க்கபூர்வமாக நிறுவிவருகிறார்கள். ஒருவேளை ரணில், "இடைக்கால நிர் வாகத்தைத் தருகிறேன் நீங்கள் விரும் பியதுபோல நடந்துகொள்ளுங்கள்" என்று விடுதலைப் புலிகளிடம் அதி காரத்தைத் தந்துவிட்டால்.... அவர் களும் இவர்களை நம்பி ஆயுதமில்லாத அரசியலுக்கு வந்துவிட்டால்.... அவர் களை மின்கம்பத்தில் கட்டுவதற்கு நம் கட்டுரையாளர்கள் பேனையில் மை நிரப்பி வைத்துக் கொண்டு காத்திருக் கிறார்கள். நிலைமை இவ்வித மிருக்க, அவர்கள் எப்படி வரமுடியும்?*

## நினைவுகளூடன் ஒரு போராட்டம்

மானஸா கொன்றை மரத்தினடியில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். கைகளால் தன் முழங்கால்களை அணைத்திருந்தாள்.

எதிரே அமர்ந்திருந்த தீபன் அவள் பாதங்களைப் பார்த்திருந்தான். பாதங்கள் மட்டுமே பார்வைக்குத் தெரிந்தது. கணுக்கால்வரை அவள் சேலை மூடியிருந்தது.

அவளது ஒவ்வொரு பாதமும் ஒரு தாமரை இதழாகத் தான் தெரிந்தது. விரல்களும் ஓரங்களும் சிவப்பிலிருந்து வெண்மைக்கு மாறிச் செல்லும் றோஸ் நிறமாகவும் இருந்தன. அதைத் தழுவிப் பளீரிடும் வெண்மையில் பாதசரம்!

பாதசரத்தின் ஒரு மணியைச் சுட்டுவிரலால் தொட்டு அசைத்தான் தீபன்.

மானஸா கால்களைப் பின்னுக்கிழுத்தாள்.

"உன் பாதத்திற்கு இலவம் பஞ்சினால் சரம் செய்து போடு. இந்த வெள்ளி மணிகள் அழுத்திப் பாதம் கன்றிவிட்டதைப் பார்..." என்று மேற்பாதத்தை விரல்களால் வருடினான்.

மானஸா சேலையை இழுத்துப் பாதத்தை மூடினாள்.

"இதுக்கொன்றும் குறைச்சலில்லை. உச்சி வெயிலில் இத்தனை நேரமாய் காத்திருந்து வாடினது பற்றி ஏதாவது கேட்டீர்களா? எங்கேனும் சுற்றிவிட்டு ஆறுதலாக வர வேண்டியது. நான் இங்கே வெறும் வெளியையும், வெயிலையும் பார்த்தே கண்கள் காய்ந்து போக வேண்டியது..."

தீபன் சிரித்தான். "இந்தக் கொன்றை மர நிழலுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?"

"ம்... நான் வரும் போது சுற்றுப்புற மெல்லாம் நீண்டிருந்த நிழல் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கி அடிமரம் வரைக்கும் வந்து ஒட்டிக்கொண்டு விட்டது. நானும் உச்சி வெயிலுக்குப் பயந்து அடிமரத்தோடு ஒண்டிக்கொண்டிருக்கிறேன்..."

தீபன் நிமிர்ந்து பார்த்தான்.

பூக்களை இழந்த கொன்றை மரம்.

மானஸாவைப் பார்த்தான்.

"கொன்றைக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்?" என்றான்.

"கொன்றைக்கென்ன கோபம்?" அவன் ஏதோ பேச்சை மாற்றுகிறான் என்ற எரிச்சலோடு கேட்டாள்.

"நீ பூச்சூடினாய்; கொன்றை விதவையானது!"

அவனை விநோதமாகப் பார்த்தாள்.

"பூக்களை இழந்து வெறும் கிளைகளோடு நிற்கிறது கொன்றை. நீயோ கூந்தல் நிறைய மலர்களைச் சூடி நிற்கிறாய்... கொன்றை பொறாமையில்தான் தன் நிழலைச் சுருக்கிக்கொண்டிருக்கிறது..."

"ஆஹா..." என்று பழிப்புக்காட்டினாள் அவள்.

"பலருக்குக் கோபம் தான் மேலும் அழகைக் கொடுக்கிறது" என்றான் அவன்.

"யார் அந்தப் பலர்?" என்று வெடித்தாள் மானஸா.

தீபன் அந்தக் கேள்வியை லட்சியம் செய்யாதவனாக, "ஆ... இது பேரழகு!" என்று அவள் கீழ்த்தாடையை விரல்களால் பற்றினான்.



அவள் முகத்தை வெட்டித்திருப்பினாள்.

அவன் அவளது கன்னத்தையும் சேர்த்து அழுத்தி முகத்தைத் தன் பக்கம் திருப்பினான்.

கையை எடுக்காமல் பெருவிரலுக்கும், ஆட்காட்டி விரலுக்குமிடையே அவள் கீழுதட்டைப் பிதுக்கினான்.

அவள் திமிறத்திமிற அவன் பிடி இறுகியது.

எதையோ சொல்லத் திணறினாள். ஆனால், சொற்கள் வெளிவராமல் அவன் விரல்களிடையே அகப்பட்ட உதடு துடித்தது.

"என்ன சொல்கிறாய், கேட்கவில்லை..." என்றபடி அவன் முகத்தை அருகே கொண்டு சென்றான்.

அவன் என்ன செய்யப்போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டு அவள் விழிகள் விரிந்தன.

"ம்" என்றபடி முகத்தை அசைக்க முற்பட்டுப் பின்னகர்ந்தாள்.

அவனுக்கு வசதியானது. அவள் பின்புறம் மரத்தில் படிய அவள் உடல்முழுவதையும் தன் கைச்சிறைக்குள் கொண்டு வந்தான்.

இதற்குமேல் தன்னுடலில் எதிர்ப்பே இருக்கப் போவதில்லை என்பதுணர்ந்து அவள் கண்களை மூடினாள்.

அவன் விரல்களிலிருந்து அவளுதட்டை விடுவித்துத் தன் இதழ்களால் பற்றினான்.

எத்தனை நேரம் அவர்கள் அப்படியே இருந்தார்கள் என்பதைக் கணக்கிடும் மனநிலை இருவருக்கும் இருக்கவில்லை.

காலம், வெளி கடந்த ஒரு பயணம்.

மானஸா திடுக்கிட்டவள் போலச் சுயநினைவுக்கு வந்தாள்.

மழைத்துளிகள் இரண்டு பாதத்தில் விழுந்திருந்தன.

தீபன் அருகில் இல்லை. அவன் ஊரிலேயே இல்லை என்பது அவளுக்கு உறைத்தது.

எப்போது வரப்போகிறானோ?

நினைவுகளுடன் அவளைப் போராட விட்டுவிட்டு அவன் மட்டும் தூரத்தில்...

மானஸா நிமிர்ந்து பார்த்தாள்.

கொன்றைக் கிளைகள் தெரியாமல் மஞ்சளாய்ப் பூத்திருந்தது.

காற்றோடு பேசிக்களிக்கும் மஞ்சள் பிசாசுகள்!

அவளுக்குக் கோபம் வந்தது. என் பொறாமையைக் கிண்டிவிடுவதற்குத் தானா இந்த மரம் தன் பூக்களைக் காட்டிச்சிரிக்கிறது!

கூந்தல் நிறையப் பூக்களோடும், கொஞ்சுவதற்குத் தீபனோடும் நானிருந்த நாட்களைக் கண்டு பொறாமை கொண்ட இந்தமரம் இப்போது என்னைப் பழிவாங்குகிற தா?

அந்தப் பூக்களின் தலையாட்டத்தைப் பார்!

என்னைப் பார்த்தால் நக்கலாக இருக்கிறது அவைகளுக்கு!

கூடவே மயில்களும் ஆடுகின்றன.

மழையும் விடாமல் தூறிக்கொண்டிருக்கிறது.

எல்லாமும் கூட்டுச் சேர்ந்து என்னைப் பழிவாங்குகின்றன போலும்!

நான் மட்டும் உள்ளம் சோர்ந்து உடலும் சோர்ந்து ஏதோ பேய் பிடித்திருப்பது போலல்லவா இந்த நோய் என்னைப் பிடித்திருக்கிறது! என் நோய் மாற்ற மருத்துவன் எப்போ வரப்போகிறான்?

**நொகுந்து நகுவன போல்**
**நந்தின கொம்பு**
**நைந்துள்ளி உகுவதுபோலும்**
**என் நெஞ்சு எள்ளித்**
**தொகுபு உடன்**
**ஆடுவ போலும் மயில்**
**கையில் உகுவன போலும் வளை**
**என் கண்போல**
**இகுப அறல்வாரும்**
**பருவத்தும் வாரார்**
**மிகுவதுபோலும் இந்நோய்.**

*(கலித்தொகை 32:16-21)*

# மன்னாதி மன்னன் 99

# இளவரசியின் மீட்பும், திருமணமும்

இமயமலையில் உள்ள ஒரு குகையில் வாரணாபுரி இளவரசியான சற்குணவதியை ஓர் அரக்கன் சிறைவைத் திருந்தான். அவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று சற்குணவதியை வற்புறுத்தி வந்தான். அரக்கனுடைய எண்ணங்களுக்கு விட்டுக் கொடுக்க முடியாத சற்குணவதி, தான் மூன்றாண்டுகள் நோன்பிருப்பதாகவும், அந்தக் காலக்கெடு முடிவடைவதற்குள் திருமணம் செய்தால் அவளுடைய கணவன் எப்பேர்ப்பட்ட பலசாலியாக இருந்தாலும் இறந்து விடுவான் என்றும் கூறி ஒதுங்கியிருந்தாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சற்குணவதியை அரக்கனிடமிருந்து மீட்டுக்கொண்டு வருவதாக அவளுடைய பெற்றோரிடம் கூறிவிட்டு வந்த மன்னர் விக்கிரமாதித்தன் அரக்கனுடைய குகையில் மறைவாக இருந்தார். சற்குணவதியும் விக்கிரமாதித்த மன்னரும் தங்களுக்கிடையில் பேசித் தந்திரமாக அரக்கனுடைய உயிர்நிலை பற்றி அறியத்திட்டமிட்டனர்.

சற்குணவதி அரக்கனிடம் அவனுடைய உயிர் நிலை பற்றி வினவியபோது, அவன் விபரமாகக் கூறமுற்பட்டான். அரக்கன் கூறியதாவது.....

"எனக்கு இந்த உலகத்தில் மட்டுமல்ல, ஈரேழு உலகங்களிலுமுள்ள எவராலும் கூட உயிர் இழப்பு ஏற்படுத்த முடியாது. எனது உயிர்நிலை எங்கேயிருக்கிறது என்பதை உன்னிடம் மட்டும் கூறுகின்றேன்.

இங்கிருந்து கிழக்கே பல காததூரம் மல்லிகாச்சுன மலை ஒன்று இருக்கிறது. அந்த மலையின் குகையில் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது. சிலையின் அடியில் ஓர் இருண்ட சுரங்கம் இருக்கிறது. அதன் வழியே சென்றால் அங்கே ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தில் ஒரேயொரு உயிரினமாக ஓர் ஆமையுள்ளது. அந்த ஆமையைப் பிடித்து அதன் வயிற்றைக் கிழித்து அதனுள்ளே இருக்கும் புழுவை எடுத்து வந்து என் எதிரே நின்று நசுக்கினால் மட்டுமே என் உடலைவிட்டு உயிர் பிரியும். இத்தகைய ஒரு செயலைச் செய்வதற்கு எவரால் முடியும்? எனவே என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமென்று நீ கனவிலும் கலங்காதே!" இவ்வாறு அரக்கன் பெருமையாகக் கூறினான். சற்குணவதியும் பெரும் ஆர்வத்துடன் கதையைக் கேட்டுத் திருப்தி அடைந்தவளாகப் பாசாங்கு செய்தாள்.

விக்கிரமாதித்த மன்னர் மறைவில் இருந்த வண்ணம் அரக்கன் கூறிவந்ததை முழுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தார். உடனடியாக வேதாளத்தை வரவழைத்து அதன் தோளில் ஏறியவண்ணம் குகையை விட்டு வெளியேறி மல்லிகாச்சுன மலையை அடைந்தார். அங்கிருந்த பிள்ளையார் கோவிலைக் கண்டுபிடித்து அரக்கன் கூறியபடி சுரங்கத்தினுள் சென்று அங்கிருந்த குளத்தில் காணப்பட்ட பெரிய ஆமையைப் பிடித்தார். அந்த ஆமையும் மிகுந்த பலசாலியாகக் காணப்பட்டது. எப்படியோ அதனைப் பிடித்து அதன் ஓட்டை உடைத்து தனது வாளினால் ஆமையின் வயிற்றைப் பிளந்தார். அங்கு காணப்பட்ட புழுவினைத் தனது கரங்களால் கைப்பற்றினார். தாமதம் செய்யாமல் உடனடியாகவே வேதாளத்தின் உதவியுடன் அரக்கன் வாழும் குகையை அடைந்தார்.

மன்னர் விக்கிரமாதித்தன் மல்லிகாச்சுன மலைச் சுரங்கத்தில் இறங்கிக்கொண்டிருந்த போதே அரக்கன் தன்னுடைய குகையில் துடியாய் துடித்தான். அவனுடைய உடல் என்றுமில்லாத வாறு நடுங்கிக்கொண்டிருந்தது. இடி முழக்கம் போல் கர்ஜித்துத் துடித்தான். இவ்வாறு பலவிதமான துன்பங்களையும் அவன் அனுபவித்துக் கொண்டிருந்தான்.

மன்னர் விக்கிரமாதித்தன் புழுவையும் தன்னுடன் எடுத்துக்கொண்டு அரக்கன் இருக்கும் குகைக்குள் நுழைந்தார். அவர் உள்ளே வருவதைக் கண்டதும் அரக்கன் ஆர்ப்பரித்து எழுந்தோடி மன்னர் மீது பாயவந்தான். மன்னர் தன் கையிலிருந்த அந்தப் புழுவைச் சாதாரணமாகக் கிள்ளிவிட்டார். அந்தப் புழு துடித்ததைப் போல் அரக்கனும் துடித்து நிலத்தில் வீழ்ந்து கதறினான். மன்னர் விக்கிரமாதித்த மன்னனிடம் அந்தப் புழுவைத் தன்னிடம் தந்துவிடுமாறு கெஞ்சினான். அதற்கு இணையாக அபாரமான சக்திகளை விக்கிரமாதித்த மன்னருக்கு வழங்குவதாக வாக்களித்தான். ஆனால், மன்னர் விக்கிரமாதித்தன் எதற்கும் விட்டுக் கொடுக்க வில்லை. தன்னுடைய உடைவாளை எடுத்து அந்தப் புழுவை இருகூறாக வெட்டியெறிந்தார். அதேவேளை அரக்கனின் உடல் இரண்டு துண்டாக வெட்டப்பட்டுக் கீழே சாய்ந்தது. அவன் உயிரும் பிரிந்தது. சற்றுத் தொலைவில் நின்றவாறு அரக்கனின் முடிவைப் பார்த்து மகிழ்சியடைந்த சற்குணவதி ஓடோடிச்சென்று விக்கிரமாதித்த மன்னரின் பாதங்களில் வீழ்ந்து தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டாள்.

மேற்கொண்டும் அந்தக் குகையில் தங்கியிருக்க விரும்பாத மன்னர் விக்கிரமாதித்தனும், சற்குணவதியும் வெளியேறி இமயமலையின் அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்கேயிருந்த ஒரு பொய்கையில் நீராடி விட்டு ஒரு பெரு விருட்சத்தின் நிழலில் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டனர்.

இந்த வேளையில் ஒரு பிராமண இளைஞன் அந்த வழியே வந்தான். இளவரசி சற்குணவதியைக் கண்டதும் தன் வாழ்நாளில் என்றுமே காணாத ஓர் அழகியைக் கண்டதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் மயங்கிவிழுந்து விட்டான். அந்த இளைஞனின் முகத்தில் தண்ணீரைத் தெளித்து மன்னர் அவனை எழுப்பி, அவன் மயக்கமடைந்த காரணத்தை வினவினார்.

மயக்கம் தெளிந்த அந்த இளைஞன், "ஐயா தங்களைப் பார்த்தால் ஒரு மாமன்னர் போல் தெரிகிறீர்கள். நான் ஒரு ஏழைப் பிராமணன். எப்படியாவது ஒரு சிறந்த அழகியை மனைவியாக்க வேண்டும் என்று ஆசைகொண்டு அலைந்து திரிகிறேன். நான் ஏழையாக இருப்பதனால் என் ஆசை ஈடேறவில்லை. நான் விரும்பும் அத்தனை அழகும் அம்சங்களும் பொருந்தியவளாக இந்தப் பெண் தோற்றமளிப்பதைக் கண்டதும் என்னையறியாமலே மயங்கி விழுந்து விட்டேன்." இவ்வாறு பிராமண இளைஞன் கூறியதும் அவனைக் கவலைப்படாதிருக்கும்படி கேட்டுக் கொண்ட மன்னர் விக்கிரமாதித்தன், சற்குணவதியுடன் அந்தப் பிராமண இளைஞனையும் அழைத்துக்கொண்டு வேதாளத்தின் உதவியுடன் வாரணாபுரியை அடைந்தார்.



வாரணாபுரி அரசர் கோயில்சொருபனும், அரசியும் தங்கள் மகள் சற்குணவதி வந்துவிட்டதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தனர். மன்னர் விக்கிரமாதித்தனைத் தாழ்பணிந்து வணங்கித் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டனர்.

பிராமண இளைஞனை வாரணாபுரி மன்னனுக்கு அறிமுகப்படுத்திய மன்னர் விக்கிரமாதித்தன் அந்த இளைஞனுக்கே சற்குணவதியைத் திருமணம் செய்துவைக்குமாறு கேட்டுக்கொண்டார். அடுத்தநாளே சற்குணவதிக்கும் பிராமண இளைஞனுக்கும் வெகுவிமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

தான் விரும்பியபடி சற்குணவதியைத் தனக்கு மணம்முடித்துக் கொடுத்தமைக்காக அந்த இளைஞன் நன்றி கூறினான். மன்னன் கோயில் சொருபனின் அனுமதியுடன் வாரணாபுரி அரசனாக அந்த இளைஞனை முடிசூட்டி மன்னர் விக்கிரமாதித்தன் வாழ்த்துக் கூறினார்.

மன்னர் விக்கிரமாதித்தனின் காடாறு மாதம் கெடு முடிந்தமையால் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு வேதாளத்தின் தோளில் ஏறி உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தை வந்தடைந்தார். வழக்கம் போல் காளிகாம்பாள் ஆலயத்தில் மன்னரை வரவேற்க அமைச்சர் பட்டியும், பிரதானிகளும் காத்திருந்தனர்.

பதினோராவது படியிலிருந்து விழுந்த வித்துவப் பூசனிப் பதுமை இவ்வாறு கதையைக் கூறிமுடித்துவிட்டு "போஜராஜரே இத்தகைய சீரிய குணமும் சிறந்த பண்பும் நிறைந்த வீர பராக்கிரரான மன்னர் விக்கிரமாதித்தனுடைய சிறப்பம்சங்களில் ஏதாவது தங்களிடம் இருக்குமானால் தாங்கள் தாராளமாக இச் சிம்மாசனத்தில் ஏறி அமரலாம்" என்று கூறி அப் பதுமை ஒதுங்கிக்கொண்டது.

(மன்னன் வருவான்...)

இராஜகுமாரன்

---

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை -காதில பூ கந்தசாமி-

பூலோகம் போன பத்மநாபா எமலோகம் திரும்பி வந்தார். புளொட் தலைவர் உமா மகேஸ்வரன் நாபா விடம் விசாரித்தார். "என்ன நாபா, பெடியள் உசாராவேலை செய்யிறாங்களா?"

**நாபா:** ம்... நோ ப்றோபிளம்.

**உமா:** நீங்கள் சொல்லிற விதத்தைப் பார்த்தா என்னவோ ப்றோபிளம் மாதிரித் தான் இருக்கு, என்ன விஷயம்?

**நாபா:** ஒண்டுமில்லை, எல்லோரும் நெடுகிலும் ஒரே மாதிரி இருப்பினமெண்டு எதிர்பார்க்கேலாது தானே! அதுதான் கொஞ்சம் ஓவரா நடக்கினமாக்கும். அனுபவப்பட்டால் தானே திருந்துவினம்.

**உமா:** அனுபவப்பட்டவன் திருந்தலாம். ஆனால், அனுபவிக்க நினைக்கிறவன் திருந்தமாட்டான் நாபா. உம்மட வேதாந்தம் பூமியில செல்லாது.

***சிறீசபாரத்தினமும் அமிர்தலிங்கமும் அங்கே வருகிறார்கள்.***

**சிறீ:** என்ன நாபா, சொல்லச் சொல்லக் கேக்காமல் போய் பாக்கக்கூடாததெல்லாத்தையும் பாத் திட்டு வந்திருக்கறீராக்கும். தாங்கமாட்டீரெண்டு சொன்னனே கேட்டீரா?

**நாபா:** நோ ப்றோபிளம் சிறீ. கட்சிகள் சிதறலாம், தலைமைகள் புரளலாம், மக்கள் சரியான பாதையைத் தீர்மானிப்பார்கள்.

**உமா:** பாவம் மக்கள்! பாதைகளை அவர்களா தேர்ந்தெடுத்தார்கள்? நாங்கள் தேர்ந்தெடுத்த பாதைகளில் அவர்களை நடைபோடச் சொன்னோம். இப்ப நடுவீதியில கைவிட்டிட்டு மக்கள் தீர்மானிப்பார்களெண்டால் என்ன கதி?

**சிறீ:** ஏன் உமா. எல்லோரும் போய் எங்கட எங்கட இயக்கங்களின்ரை நிலவரத்தைப் பாத்திட்டு வந்திட்டம். நீரும் ஒருக்கால் போய் பாத்திட்டு வந்தாலென்ன?

**உமா:** இந்தா, என்ரை இயக்கம் எப்படி இயங்குமெண்டது எனக்கு நல்லாத் தெரியும். உங்கள மாதிரி அது ஒகோவெண்டு கொடிகட்டிப் பறக்குமெண்ட மயக்கமொண்டும் எனக்கில்லை. உங் களையெல்லாம் எமலோகத்துக்கு அனுப்பினது மற்ற இயக்கக்காரர்தான். ஆனால், என்னையோ,என்ரை இயக்கக்காரர்தான் அனுப்பி வைச்சவை. அது தெரியுமே! அண்ணை அமிருக்கு ஞாபக மிருக்கும், அவற்ர செத்த வீட்டுக்குப் போயிட்டுத் திரும்பேக்கைதான் என்னை அமுக்கி அப்பிடியே கொண்டுபோய் பம்பலப்பிட்டிக் கடற்கரையில அநாதையாய்ச் சுட்டுப்போட்டுப் போனவை. அப்பிடியிருக்க எதுக்கு நான் திரும்பிப் போகவேணும்? (கண் கலங்குகிறது)

**அமிர்:** (சமாதானப் படுத்துகிறார்) ஏன் தம்பி கவலைப்படுகிறீர்? எங்கள் எல்லோருக்கும் என்ன இயற்கை மரணமே? எல்லாம் அகால மரணங்கள் தானே!

**உமா:** ஆனாலும், உங்கட செத்தவீடு தன்னும் எவ்வளவு நல்லா நடந்தது. நாபாவோட செத்த வீட்டைத் தமிழ்நாடு அரசாங்கமே எடுத்து நடத்திச்சுது.

**சிறீ:** அப்படிச் சொல்லாதையும். ஏன்? எனக்கு நடந்த சா உமக்குத் தெரியாதே? நானும் தானே நடுவீதியில செத்தனான்.

**நாபா:** ஏன் மரணங்களைப் பற்றிக் கதைப்பான். வாழ்க்கையைப் பற்றி, புரட்சியைப் பற்றி ஏதும் நல்லதைக் கதைப்பம். மரணம் ஒரு முடிவல்ல. அது விடுதலைப் பயிருக்கு இட்ட உரம் எண்டு தான் எங்கட தோழர்கள் சாகேக்க நோட்டீஸ் அடிச்சுவிடுறநாங்கள். அது எங்களுக்கும் பொருந் தும் தானே!

**சிறீ:** நாபா, இப்ப பொழுது போக்க வேணுமெண்டால் ஏதும் காட்ஸ் விளையாடுவம் அல்லது கர மடிப்பம். விடுதலைப் பயிருக்கு உரம் போடுற தோட்டக்காரன் வேலையெல்லாம் இனிச்சரி வராது. விடுதலையே எங்களுக்கு விடுதலை தந்த பிறகு விடுதலை விடுதலை எண்டு தலையில அடிச்சு என்ன பயன்?

**அமிர்:** தம்பி சிறீ! நீர் உம்மட ஆக்களின்ரை போக்கைப் பாத்திட்டு வந்து ஆத்திரப்படுறதில நியாய மிருக்குத் தான். ஆனாலும், எங்களையும் அங்க நாலு சனம் ஞாபகம் வைச்சு ஏதோ, மெமோறியல் கூட்டமெண்டாலும் நடத்திக்கொண்டிருக்கினம். அதுக்குத் தக்கபடி நாங்களும் பொறுப்பாய்ச் சிந்திக்கவேணும்.

**சிறீ:** உங்களுக்கு, நாபாக்கு அல்லது நீலனுக்கு யாரும் கூட்டம் வைச்சிருக்கலாம். ஆனால் எவன் வைக்கிறான் எனக்கு? உந்த மெமோறியல் கூட்டமெல்லாம் வெறும் கண்துடைப்பண்ணை. உங்களுக் கெண்டு கூட்டம் வைச்சிட்டு இந்தியாவிலயிருந்தோ, இலங்கையிலையோ எவனோ ஒரு படிச்சவனாத் தேடிக்கண்டுபிடிச்சு எதைப் பற்றியோ ஒரு லெக்ஷர் வைச்சிட்டுப் பொழுது போக்குவாங்கள். இந்தக் கொலைகளை நிப்பாட்டிறதுக்கு உருப்படியா என்ன செய்துகிழிச்சாங்கள்?

**நாபா:** சிறீ! அது அப்பிடியில்லை. நாங்கள் ஏதோ உயர்ந்த கொள்கைகள், இலட்சியங்கள், தியாகங்களெண்டு வெளிக்கிட்டநாங்கள் எதையும் உதாசீனமாப் பாக்கக்கூடாது. எங்கட காலத்தில எங்களால ஏலுமானதைச் செய்தம். விடுதலைக்கே எங்கட முழு உழைப்பையும், ஏன் உயிரையுமே குடுத்தம். இனி நடக்கிறது அடுத்த தலைமுறையின்ரை கையில. நாங்களே முழு வரலாறையும் எழுதி முடிக்க வேணுமெண்டு ஆசைப்பட ஏலுமா?

**சிறீ:** அடுத்த தலைமுறை எங்களை மறந்திட்டுதே?

**நாபா:** மறக்கட்டும். ஏன் எங்களைத் தூக்கியெறியக் கூடச் செய்யலாம். இந்தப் பெரிய சோவியத் புரட்சியை நடத்தி முடிச்ச லெனினின்ரை உடலைக்கூட இன்றைய ரஷ்ஷியர் கல்லறையால கிழப்பி எரிக்கத் தெண்டிக்கேக்க, எங்கட சனம் எங்களை மறக்கிறது நடக்கமுடியாத விஷயமில்லையே!

**உமா:** அப்ப சனத்துக்கு ஒரு வேளை விடுதலை கிடைச்சாலும் எங்களுக்கு விடுதலையில்லை...?

**நாபா:** (சிரிப்புடன்) பிடல் கஸ்ரோ சொன்னது போலச் சொல்லிப் போட்டு இருக்க வேண்டியது தான். "வரலாறு எங்களை விடுதலை செய்யும்"

**அமிர்:** தம்பியவை நீங்களாவது ஆயுதம் தூக்கினநீங்கள். ஆயுதம் தூக்கினவனுக்கு ஆயுதத்தால தான் மரணமெண்டு சொல்லுவினம். அதற்கும் தயாராத் தான் போராட்டத்தில இறங்கினநீங்கள். ஆனால், நான் அஹிம்சை எண்டு வெளிக்கிட்டனான். எனக்கேன் ஆயுதத்தாலை முடிவு வரவேணும்? நியாயமில்லைத் தானே?

**உமா:** ஆனாலுமண்ணை. இந்தா பின்னால நிக்கிற துரையப்பா முதல் ஆயுதம் தொடாத கனபேர் அகால மரணமடையேக்கை நீங்கள் இந்தக் கேள்வியைக் கேக்கேல்லைத் தானே?

**அமிர்:** அதுவும் சரிதான். ஸம் திங் ரோங் இன் த ஹிஸ்றி. வரலாற்றில் எங்கையோ தவறு நடந்திருக்குது. ஒரு சஜஸ்ஷன் சொல்றன். நாங்களெல்லாரும் இந்தப் போராட்டத்தை முதலிலயிருந்து திருப்பி நடத்தினால் எப்பிடியிருக்கும்? எமதர்மனிட்ட ஒரு சான்ஸ் கேட்டுப்பாப்பமே?

*(யாவரும் சிரிக்கின்றனர். நகைச்சுவையல்ல, அதில் விரக்திதான் தெரிகிறது)*

யாவும் கலப்படமற்ற கற்பனை

---

# இந்தவாரம் உங்கள் பலன்

07.04.2002 தொடங்கி 13.04.2002வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

| | | | |
|---|---|---|---|
| மீனம் | - சூரியன், | மிதுனம் | - வியாழன் |
| மேடம் | - வெள்ளி, புதன் | விருட்சிகம் | - கேது |
| இடபம் | - சனி, இராகு, செவ்வாய் | | |

சந்திரன், மகரம், கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழிலில் சில பிரச்சனைகள் தென்படும். பெரியோர் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோக ரீதியான கஷ்டங்கள் மறையும். மாணவர்கள் கல்வி யில் கூடிய சிரத்தை எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம் : 4.

**இடபம்:** (கார்த்திகை பின்முக்கால், ரோகினி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் சித்தி. பணவரவு திருப்தி தரும். உத்தியோகஸ்தர்கள் இட மாற்றங்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள் : வெள்ளி.
அதிஷ்ட இலக்கம் : 6.

**மிதுனம்:** (மிருகசீரிடத்து பின்னரை திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) குடும்பத்தில் மகிழ்ச்சியும், தொழில் சிறப்பும் ஏற்படும். பெரியோர்கள் தக்க தருணத்தில் உதவுவர். உத்தியோகத்தில் உள்ளோர் திட்டமிட்டுக் கருமமாற்றுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் உயர்வு பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது.
அதிஷ்ட நாள்: புதன்,
அதிஷ்ட இலக்கம் : 5.

**கர்க்கடகம்:** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் ரீதியாக முன் னேற்றம்,பணவரவுகாரியசித்தி ஏற்படும். உத்தியோகத்தில் முன்னேற்றமுண்டாகும். மாணவர்கள் கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுக ளால் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம் : 1.

**சிங்கம்:** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) கருமங்களில் வீண் தடையும்,பொருள் விரயமும் ஏற்படும். உத்தியோகத்தில் சிலருக்கு மாற்றம் அல்லது பதவி உயர்வுகள் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளை அளவுடன் வைத்துக்கொள்வது நல்லது.
அதிஷ்ட நாள்: திங்கள்,
அதிஷ்ட இலக்கம் : 2.

**கன்னி:** (உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் கஷ்டம் தீரும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் எதையும் நிதானித்துச் செய்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்,
அதிஷ்ட இலக்கம்.: 7.

**துலாம்:** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) பெரியோர் உதவிகளும், குடும்பத்தில் நன்மைகளும் உண்டாகும். எதிர்பார்த்த விடங்களில் வெற்றிகிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியா பாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம் : 6.

**விருட்சிகம்:** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) வீண் கவலைகள் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சியேற்படும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் சிலருக்கு பதவியுயர்வுகள் வந்தடையும். மாண வர்களுக்கு கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இல.: 4.

**தனு:** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழிலில் உயர்ச்சியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஏற்படும். வீண் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் ஊக்கம் எடுக்கவும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம் : 2.

**மகரம்:** (உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) பெரியோர் பகை, பணவரவில் தடை, மனக்குழப்பம் ஏற்படும்.உத்தியோக ரீதியாக சிலருக்கு மாற்றங்களுக்கு இடமுண்டு. மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம் : 4.

**கும்பம்:** (அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழிலில் உயர்ச்சி, பணவரவு மேன்மை, காரியானுகூலம் ஏற்படும். உத்தியோகத்தில் எதிர்பாராத பிரச்சனை ஏற்பட்டு மனக்கவலை தரும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சியடைவர். விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம் : 7.

**மீனம்:** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) செய்தொழில் நன்மை, பணவரவு மேன்மை, பெரியோர் உதவி, கௌரவம் ஏற்படும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். மாணவர்கள் கூடிய முயற்சி எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்,
அதிஷ்ட இலக்கம் : 5.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னான பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# ஆற்றாமை







அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வர்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

[illegible]

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

Website: www.lapik.com.sinl

436331


# இப்போதுதான்

↑ மேலைநாடுகளில் திருமணம் முடித்து தேன் நிலவுக்கு கிளம்பிச்செல்லும் புதுமணத்தம்பதிகளின் வாகனங்களில் Just Married(இப்போதுதான் மண முடித்தோம்) என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கும். இங்குள்ள காரில் Just Retired (இப்பொழுது தான் ஓய்வு பெற்றார்) என எழுதப்பட்டிருக்கிறது. தனது கடமையில் இருந்து ஓய்வுபெற்று அலுவலகத்திலிருந்து வெளியேறிச்செல்லும் ஒருவரை நண்பர்கள் இவ்வாறான வாசகம் எழுதிய காரில் அழைத்துச் செல்கிறார்கள்.



← இந்தச் செய்தி எழுதப்படும் நேரத்தில் கூட பாலஸ்தீன ஜனாதிபதி யாசீர் அரபாத் ரமல்லா பகுதியில் அவரது வாசஸ்தலத்தில் இஸ்ரேலிய துருப்பினரால் சிறைவைக்கப் பட்டிருக்கிறார். இஸ்ரேலிய நகரங்களில் ஊடுருவும் பாலஸ்தீன தற்கொலைதாரிகள் பொது மக்கள் கூடும் இடங்களாகப் பார்த்து தம்மைத்தாமே வெடிக்கவைத் துக்கொண்டு பலரை பலியெடுத்து வருகின்றனர். கடந்த வாரம் இஸ்ரேலின் பாதுகாப்பான இடங்கள் எனக் கருதப்பட்ட இரண்டு வர்த்தக தொகுதிகளில் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்றதையடுத்து பாலஸ்தீன அதிகார சபையின் தலைமையகம் அமைந்துள்ள மேற்கு கரையின் ரமல்லா நகரை இஸ்ரேல் சுற்றி வளைத்து முற்றிலுமாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

நகரெங்கிலும் இஸ்ரேலிய இராணுவத் தாங்கிகள் வலம்வருகின்றன. வீடு வீடாகப் புகுந்து "பயங்கரவாதிகளை" தேடும் முயற்சியில் இஸ்ரேலிய துருப்புக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

↑ அதிரடித் தேடுதல் நடவடிக்கையின் போது க்ளிக் செய்யப்பட்ட தத்வரூபமானதொரு காட்சி தான் இது. முஸ்லிம் பெண்மணி ஒருவர் செய்வதறியாது கதவோரமாக நின்று கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவரது கட்டிலறைக்குள் ஜன்னலை உடைத்துக்கொண்டு தீவிரவாதிகளைத் தேடி குதிக்கிறார் ஒரு இஸ்ரேலிய வீரர். "இங்கே தலையணையையும், படுக்கை விரிப்பையும் தவிர வேறெதுவும் இல்லையடா" எனசொல்லாமல் சொல்கிறது இந்தப் பெண்ணின் அமைதி.

# உண்மையாகவே



↑ தனது துப்பாக்கி பூப் பூத்து விட்ட மகிழ்ச்சியில் புன்னகைக்கிறார் இந்த ஆப்கான் போர்வீரர். உலகம் முழுவதிலும் ரவைகளை மட்டுமே பொழியும் துப்பாக்கிகள் நிரந்தரமாகப் பூத்துக் குலுங்கும் என்றால் இவரது முகத்தில் காணப்படும் அர்த்தமற்ற மகிழ்ச்சி எத்தனை கோடி மக்களுக்கு அர்த்தமுள்ள சந்தோஷமாகப் பரிணமிக்கும். நம் நாட்டில் உள்ள துப்பாக்கிகள் தற்போது அமைதி காக்கின்றன. இனிமேல் அவை பூக்களை மட்டுமே சுமக்கட்டும்!

## 1வது பிறந்ததின வாழ்த்து / 23.03.2002



[illegible]

## 1வது பிறந்ததின வாழ்த்து / 19.03.2002



செல்வி. குணநாதன் அனுஷா

திருநெல்வேலி - தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. திருமதி குணநாதன் -பாமதி (மகேஸ்வரன்-சீதா) தம்பதியினரின் அருந்தவப் புதல்வி அனுஷா 19.03.2002 ல் தனது முதலாவது பிறந்த தினத்தை கயிலைநாதத்தில், [illegible] வெகு சிறப்பாகத் தனது ஆசை அக்கா [illegible] கொண்டாடினார்.

"இன்ப சோலைக்குள் சந்தோஷத் தென்றலாய்" வந்த அனுஷாவை அப்பா, அம்மா, தெல்லிப்பழையில் இருந்து அம்மப்பா இராசரட்ணம், அம்மம்மா சாரதாதேவி, ஆசை மாமா சதீசன், ஆசை அன்ரா பாமினி, [illegible] பெரியப்பா, பெரியம்மா, கொக்குவிலில் பெரிய மாமா, பெரிய மாமி, [illegible] சின்ன மாமா, சின்ன மாமி, பிரான்ஸ் ஆசை மாமா, ஆசை மாமி, லண்டன் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா பாபு, அக்காமார் [illegible], தம்பி கிருஷ்ணா, மச்சான், மச்சாள்மார், ராஜி, ரமணன், கண்ணன், விஜி, பபிதா, அகிலன், [illegible] மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் துர்க்கை அம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா த. குணநாதன்(மகேஸ்வரன்), [illegible]




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் கினாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஏப்ரல் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.